481

ஜெர்மனியுடன் யுத்தம்.

481
1·15

எஸ். எம். முஸ்தபா லெப்பை,
நிஸாயத்துல் இஸ்லாம் பிரஸ்,
நெ. 16, சூரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை.

பிஸ்மில்லாஹி

ஜெர்மனியுடன் யுத்தம்.

முதற் பாகம்.

இது

எஸ். எம். முஸ்தபா லெப்பை அவர்களால்

தமது ரிவாயத்துல் இஸ்லாம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இஸ்லாமிய்யா "பிரசங்க நேசன்"

தினசரிப் பத்திரிகைக்கு ஒரு வருஷச் சந்தாவை

முன்பணமாக அனுப்பி சந்தாதாரராகச் சேரும்

நண்பர்களுக்கு இந்த புஸ்தகம் ஒன்று

இனாமாக அனுப்பப்படும்.

எஸ். எம். முஸ்தபா லெப்பை, மானேஜர்

இஸ்லாமிய்யா "பிரசங்கநேசன்" ஆபீஸ்,

நெ. 16, சூரப்ப முதலி தெரு,

திருவல்லிக்கேணி மதராஸ்.

முதற் 1914. பதிப்பு.

இதன் விலை ரிஜிஸ்டர்ட். அணா 12.

முகவுரை.

இப்பொழுது பயங்கரமான யுத்தம் ஒன்று நடந்து வருகின்றது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். உலக சரித்திரத்தில் இதைப்போல ஒரு யுத்தம் எப்பொழுதாவது இதற்கு முன் நடந்திருப்பதாகத் தெரியவில்லை. லட்சக்கணக்கான போர்வீரர்கள் நூற்றுக்கணக்கான மைல் விஸ்தீர்ணத்தில் பரந்துகொண்டு நெடுநாட்களாக நின்று செய்யும் யுத்தம் உலக சரித்திரத்தில் இதுவே. கரைப்படை, கப்பற்படை, ஆகாயப்படை முதலியவற்றை உபயோகித்து கேட்போர் திடுக்கிடும்படியாக இந்த யுத்தம் நடந்துவருகின்றது. சமாச்சாரப் பத்திரிகைகளில் அன்றன்று நடக்கும் சமாச்சாரங்களின் சுருக்கமான குறிப்புகளே வருகின்றன. இப்புஸ்தகத்தில் இந்த யுத்தத்தைப் பற்றிய பற்பல ரகஸ்யங்களெல்லாம் வெளியாக்கப்பட்டிருக்கின்றன. அநேக தேசச்சரித்திரங்களை ஒத்திட்டுப்பார்த்து ஒவ்வொரு தேசத்தையும் பற்றியுள்ள உண்மை இங்கு உரைக்கப்பட்டிருக்கிறது. இந்த யுத்தத்தில் முக்கியமாக முன்நிற்கும் அரசர்களின் உருவப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பொது ஜனங்கள் இந்த யுத்தத்தின் வரலாற்றை ஆதி முதல் அந்தம் வரையில் கோர்வையாக அறியவேண்டுமென்ற எண்ணத்துடனேயே நாம் இந்தப் புஸ்தகத்தைப் பிரசுரித்திருக்கிறோம். நமது தினசரிப் பத்திரிகையாகிய பிரசங்கநேசனுக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஒரு வருஷச் சந்தாவை முன்பணமாகக்கொடுத்து உதவுபவர்களுக்கு இப்புஸ்தகத்தை இனாமாகக் கொடுக்க நிச்சயித்திருக்கிறோம்.

எல்லாம் வல்ல இறைவன் எல்லாவற்றிற்கும் அருள் புரிவாராக.

16, சூரப்ப முதலி தெரு
திருவல்லிக்கேணி
1—12—'14.

பத்திராதிபர்,
இஸ்லாமிய்யா
பிரசங்கநேசன்.

துருக்கி சுல்தான்
ஐந்தாவது முஹம்மது ரஷாதுகான்.

ஜேர்மன் சக்ரவர்த்தி

கெய்ஸர் வில்லியம்.



நமது சக்ரவர்த்தி

ஐந்தாவது ஜார்ஜ்.

பெல்ஜியம் அரசர் ஆல்பெர்ட்.

பரலைத்தீபு.

அத்தியாயம் 1.

யுத்தத்திற்கு நேர் காரணம்.

1914வரு ஜூன்மீ 28உ வியாழக்கிழமை பிறந்தது. மற்ற நாட்களைப்போலவே அந்நாளும் விடிந்ததேயொழிய, விசேஷமாக ஒன்றும் காணப்படவில்லை. உலகத்திலுள்ள ஜீவராசிகளெல்லாம் வழக்கம்போல அன்றையதினமும் தம்தம் தமது தொழில்களில் பிரவேசித்தன. எல்லாத்தேசங்களின் அரசர்களும் தங்களுடைய குடிகள் விஷயத்திலும், வேற்றரசர்களின் விஷயத்திலுமாகஎத்தனையோ ராஜ்யபாரப் பொதுக்கவலைகளையும் தங்களுடைய ஸ்வயநல ஆசையினாலும் பொறுமையினாலும் உண்டாகும் சொந்தக்கவலைகளையும் தங்களுடைய மனத்திற்கொண்டிருந்தபோதிலும் உலகமறியும்படியாக ஒன்றும் இருந்ததாகத் தெரியவில்லை.

அன்றையதினம் ஐரோப்பாக்கண்டத்தில் ஆஸ்டிரியா ராஜ்யத்தின் இளவரசரான ப்ரான்ஸிஸ் பெர்டினண்ட் என்பவர் தமது ராஜ்யத்துடன் சமீபத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட போஸ்நியா என்னும் தேசத்தின் பிரதான நகராகிய ஸேராஜீவோ என்னும் நகரில் தமது அழகியமனைவியாருடன் மோட்டார் வண்டியில் வந்துகொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று ஒருவெடிசத்தம் கேட்டது; அடுக்கடுக்காக இரண்டு மூன்று சத்தங்கள் கேட்டன. ஆஸ்டிரியாவின் இளவரசரும் அவரது மனைவியாரும் அவர்களுடைய வண்டியில் இறந்து கிடந்தார்கள். போஸ்னியா தேசத்தான் ஒருவன் ஸெராஜீவோ என்னும் நகரில் மோட்டார்வண்டியில் சென்று கொண்டிருந்த ஆஸ்டிரிய இளவரசருக்கும் அவரது மனைவியாருக்கும் மாத்திரமன்று, ஐரோப்பாக்கண்டத்திற்கே தீயை வைத்துவிட்

டான். இவன் செய்த இக்கொலையே இப்பொழுது அதி பயங்கரமாக நடக்கும் ஐரோப்பிய யுத்தத்திற்கு நேர்காரணம்.

ஆஸ்டிரியாவென்பது ஐரோப்பா கண்டத்தில் ஒரு முக்கியமான தேசம். அதன் விஸ்தீர்ணம் 2,41,000 சதுர மைல். ஆஸ்டிரியா வென்று பொதுப்படக்கூறப்பட்டாலும், ஆஸ்டிரியாவென்று சாதாரணமாக ஜனங்கள் சொல்லும்பொழுது, ஆஸ்டிரியாவையும் அதன் பக்கத்தில் அதைச்சேர்ந்திருக்கும் ஹங்கேரி யென்னும் தேசத்தையும் சேர்த்தே சொல்லுவார்கள். ஆஸ்டிரியாதேசத்துச் சக்ரவர்த்தியே ஹங்கேரி தேசத்துக்கு அரசன். கரைப்படை, கப்பற்படை, ராஜதந்திர வியவகாரம், இவையெல்லாம் இருதேசங்களுக்கும் ஒன்றே. ஆனல் உள்நாட்டுராஜ்யபார விஷயத்தில் இவ்விருதேசங்களுக்கும் பார்லிமெண்டு சபையும் உத்தியோகஸ்தர்களின் நியமனமும் வெவ்வேறு. ஆஸ்டிரியா-ஹங்கேரி என்ற இந்த தேசமானது இங்கிலாந்து தேசமும் வேல்ஸ்பிரதேசமும் எவ்வளவு பெரிதோ அதினிலும் நான்குமடங்கு பெரிது. இத்தேசத்தின் கரைப்படை சமாதான காலத்தில் 3,96,000; யுத்தகாலத்தில் 25,00,000. கப்பற்படையின் விவரம்:—சமீபத்தில் செய்து முடிக்கப்பட்ட மூன்று பயங்கரப்போர்க்கப்பல்கள் உள்பட 15 யுத்தகப்பல்களுக்குக்குறையாமல் இருக்கின்றன. 1895-6ல் செய்துமுடிக்கப்பட்ட போர்க்கப்பல்கள் 3; இவற்றில்ஒவ்வொன்றும 5,510டன்நிறையுள்ளவை; 1900-2-ல் செய்து முடிக்கப்பட்ட போர்க்கப்பல்கள் 3; இவற்றில் ஒவ்வொன்றும் 8,167 டன்உள்ளவை; இவ்வாறு கப்பல்களிலும் 9-4 அங்குல பீரங்கிகளே பிரதான ஆயுதங்கள். முன்னமேயே சொந்தமாயிருந்த பயங்கரப் போர்க்கப்பல்கள் 3; ஒவ்வொன்றும் 10,430 டன் உள்ளவை; இவை ஒவ்வொன்றிலும் பிரதான ஆயுதங்களாக நான்கு 9-4 அங்குல பீரங்கிகள்உண்டு; அடுத்தபடியாக பன்னிரண்டு 7-5 அங்குல பீரங்கிகளும் உண்டு.

1908-10-ல் செய்து முடிக்கப்பட்ட போர்க்கப்பல்கள் 3. இவை யொவ்வொன்றும் 14,230 டன் உள்ளது; நான்கு 12 அங்குல பீரங்கிகளையும் எட்டு 9-4 அங்குல பீரங்கிகளையும் உடையது. இன்னும் இந்தத் தேசத்திற்கு சாதாரணச் சிறு யுத்தக்கப்பல்கள் ஒன்பதும் கவசம் இட்ட சிறு யுத்தக்கப்பல்கள் இரண்டும் உண்டு. வேகமாகச் செல்லக்கூடிய சாதாரணமான சிறு யுத்தக்கப்பல்கள் 3 செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. இத்தேசத்தின் துளை கருவிப்படைக்கூட்டம் உயர்ந்த ஸ்திதியை யடைந்துள்ளது என்று சொல்லப்படுகிறது. 15 நாசகாரிகளும், 58 துளை கருவிப்படகுகளும் 6 ஜல மூழ்கிக்கப்பல்களும் ஆஸ்டிரியாவுக்கு உண்டு.

இத்தனை கரைப்படையும் கப்பற்படையும் உடைய இந்த தேசத்து இளவரசரை ஒரு போஸ்னியன் கொலை செய்ததே யுத்தத்திற்கு காரணம். இந்த போஸ்னியன் கொலை செய்ததற்குக் காரணமென்ன? என்பதே எல்லோருடையமனத்திலும் உதிக்கும் முதற்கேள்வியாகும். ஆதலால் அதைப்பற்றி விசாரிப்போம்.

போஸ்னியா வென்பது துருக்கியைச் சேர்ந்திருந்தது; ஆனால் பெயருக்குத்தான் சேர்ந்திருந்ததே யொழிய, அரசாங்கமானது ஆஸ்டிரியாவின் மேல்பார்வையிலிருந்தது. இப்பிரதேசத்தின் ஜனங்கள் ஸெர்விய வகுப்பைச் சேர்ந்தவர்கள்; ஆனால் பெரும்பாலும் தனவந்தர்களாயுள்ளவர்கள் முகம்மதியர்களே. இதற்கு முன்பு இது துருக்கியைச் சேர்ந்திருந்ததினால், அரசாங்கமதிப்பின் பேரில்இவர்கள் தனவந்தர்களாயிருக்கலாம். என்றாலும் ஜனங்களில் மிக்கோரும் ஸெர்வியர்களே. ஸெர்வியர்களுக்குள் தங்களுடைய ராஜாங்கத்தை மேன்மைப் படுத்தவேண்டுமென்றும் தாங்களும் உலகின் முன்னணியில் வந்துநிற்கும் ஒரு ஜன சமூகமாக வேண்டுமென்றும் ஒரு ஆசை யுதித்தது. அவ்வாசையினால் அவர்கள் தங்களுடைய ராஜ்யம்பெருக்.

கவேண்டுமென்றும் தங்களுடைய ஜனங்கள் அனைவரும் ஒரு அரசாங்கத்திற்குட்பட வேண்டும் என்றும் கருதி இவற்றிற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்து கொண்டிருந்தார்கள். போஸ்னியாவில் ஸெர்வியர்கள் மிகுந்திருந்ததினால், இவ்வெண்ணமானது இவர்களுக்குள்ளும் பரவியிருந்தது. தவிர, ஆஸ்டிரியாவானது தான் மேல்பார்வை பார்த்து வந்த போஸ்னியாவை அங்குள்ள ஜனங்களுடைய பொது விருப்பத்திற்குமாறாக, தன்னுடைய ஜில்லாக்களில் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு விட்டது. ஆஸ்டிரியர்களுக்கும் போஸ்னியர்களாகிய ஸெர்வியர்களுக்கும் எப்போதும் ஜாதிப்பகையுண்டு. போஸ்னியர்களுக்கு ஆஸ்டிரியர்களின் நேர் அரசாங்கத்திற்குட் பட்டிருக்கப் பிரியமே யில்லை. போஸ்னியா ஆஸ்டிரியா வுடன் ஒன்று சேர்க்கப்பட்டவுடனேயே, போஸ்னியர்களுக்குள் அதிருப்தியுண்டாயிற்று; அதனால் குழப்பங்கள் உண்டாயின. அப்பொழுது ஆஸ்டிரியாவின் இளவரசர்—இப்பொழுது கொல்லப்பட்டவர்—முன்னின்று போஸ்னியாவிலுண்டாகியகலகங்களை யடக்கி போஸ்னியாவை ஆஸ்டிரியாவுடன் சேர்த்து ஸ்திரப்படுத்திக் கொண்டார். அப்பொழுது ஜெர்மனியானது ஆஸ்டிரியாவுக்குப் பக்கத்தில் அநுகூலமாக நின்று வேறெந்த அரசும் இதில் தலையிட்டு முன்வாராதபடி பார்த்துக்கொண்டது. ருஷியாவுக்கு இவ்விஷயத்தில் சிறிது கோபமுண்டாயிற்றாயினும், தனது அக்கால நிலைமையை யுத்தேசித்தும் அநாவசியமாக ஐரோப்பாவில் அற்ப சங்கதிக்காக யுத்தத்தைக் கிளப்பி விடவேண்டாமென்று கருதியும் ருஷ்யா மௌனமா யிருந்து விட்டது.

இதுமாத்திரமன்று, இன்னும் அநேக சில்லரைக்காரணங்களும் உண்டாயின. உதாரணமாக, ஒன்றைச் சொல்வோம்; சென்ற பால்கன் யுத்தத்தின் முடிவாக அல்பேனியா தனித்ததேசமாயிற்று; அதில் ஸெர்வியா தனதுபடையொன்றை வைத்திருந்தது. ஆஸ்டிரியாவானது ஜெர்மனி

யுடனும் இத்தாலியுடனும் சேர்ந்துகொண்டு—இம்மூன்று தேசங்களும் ஒற்றுமையாயிருப்பதாக ஒரு உடன்படிக்கை பண்ணிக் கொண்டிருந்தன—ஸெர்வியா அதன் படையை அல்பேனியாவிலிருந்து எடுத்து விடவேண்டுமென்றும் அப்படி அங்கு படை வைத்திருத்தல் நியாய விரோதமான தென்றும் ஸெர்வியாவிடத்தில் சொல்லிற்று. ஸெர்வியா தனது படையை எடுத்து விடுவதாக சம்மதித்தது. இம் மாதிரியே ஸெர்வியா ஸ்வதந்திரமாக ஒரு காரியமும் செய்யமுடியாது ஆஸ்டிரியா அதிகாரம் செய்து கொண்டிருந்தது. ஆகையால் ஆஸ்டிரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் அந்தரங்கமாக மனஸ்தாபங்கள் மிகுந்து வந்தன.

இப்படியிருக்கையில் ஆஸ்டிரிய இளவரசர் கொல்லப்பட்டார். இக்கொலையைப் பற்றி ஆஸ்டிரியா விசாரணை செய்ய ஆரம்பித்தது. கொலை நடந்து மூன்று வாரங்கள் கழிந்தன. திடீரென்று ஆஸ்டிரியாவானது ஸெர்விய அரசாங்க அதிகாரிகள் இந்தக்கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் ஆதலால் அவர்களை யெல்லாம் கைதி செய்து தான் விசாரிக்க விரும்புவதாகவும் இன்னும் ஆஸ்டிரியா வுக்கு விரோதமாக ஸெர்வியர்கள் செய்துவரும் நடபடிக் கைகளை யெல்லாம் நிறுத்திவிட வேண்டுமென்றும் 48 மணி நேரத்திற்குள்ளாகத் தனக்கு அநுகூலமான பதிலை கிடைக்கவேண்டுமென்றும் ஒரு கடிதம் எழுதி ஸெர்வியாவுக்கு அனுப்பிவிட்டது. ஸெர்விய அரசாங்க அதிகாரிகள் இந்தக்கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாக ஆஸ்டிரியா நம்பியதற்குக் காரணம் அதற்குக் கிடைத்த அநேக சாட்சியங்களினிடையில், ஆஸ்டிரியாவின் இளவரசரைக் கொல்வதற்கு இரண்டாயிரம் பவுன் கொடுப்பதாகவும் கொல்பவன் பெல்க்ரேட் நகரில் வந்து இறங்கியவுடன் அதில் 1,000-பவுன் தருவதென்றும் வேலை முடிந்தவுடன் 1,000 பவுன் தருவதென்றும் கார்யஸ்தர்களுக்கும் மற்றசெலவுகளுக்குமாக 200 பவுன் தருவதென்றும் எழுதப்பட்ட ஒரு கடிதமானது பாதி எரிந்து கொண்டிருக்கையில் கண்டு எடுக்

கப்பட்டதென்றும் இக்கடிதம் எழுதப்பட்டிருந்த காகிதமானது ஸெர்விய ஸ்தானாபத்திய ஆபீசில் உபயோகிக்கப்படும் உத்தியோகமுறைக்காகிதமென்றும் சொல்லப்பட்டது.

அக்கடிதத்தில் காணப்பட்ட நிபந்தனைகளைத் தன் மதிப்புள்ள எந்த அரசாங்கமும் ஒப்புக்கொள்ளாது. ஸெர்வியா மிகச்சிறிய தேசமாயினும், அதன் ஜனங்கள் ஸ்வதந்திரத்தில் பிரியமுள்ளவர்கள், அதிகமாகச் சகிக்கும் சக்தியுடையவர்கள். 14-வது நூற்றாண்டில் ஸெர்வியா இப்பொழுதைப்போலச் சிறு தேசமாயிருக்கவில்லை; பெரிய, பலம் மிகுந்த சக்ராதிபத்தியமாயிருந்தது. ஸெர்வியாவினுடைய செல்வாக்கு துருக்கியினால் அழிக்கப்பட்டு விட்டது. ஆனால் 1882-வது வருஷம் முதல் அது மறுபடியும் தனித்த ராஜாங்கமாகி நாளுக்குநாள் பலத்துக் கொண்டு வருகிறது. சென்றபால்கன் யுத்தத்தில் ஸெர்வியா சிறிது சாமர்த்தியம்காட்டிற்று. ஆதலால் ஸெர்வியர்களும் ருஷியர்களும் ஒரேஜாதி. ருஷியாவில் இருக்கும் மொத்தஜனத்தொகையில் ஐந்தில் நான்குபங்கு ஸெர்வியர்களைச் சேர்ந்த ஸ்லாவ் ஜாதியர். ஆதலால் ருஷியாவானது ஜாதியபிமானத்தினால் தூண்டப்பட்டு ஸெர்வியாவுக்குப்பரிந்து கொண்டு ஆஸ்டிரியா ஸெர்வியாவுக்கு எழுதியகடிதத்திற்கு ஸெர்வியா பதில் கொடுப்பதற்குத் தகுந்த நேரம்கேட்டது. ஆஸ்டிரியா மறுத்துவிட்டது. இதன்மேல் ஸெர்வியா அநேகமாக எல்லா நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டது. ஆனால் இரண்டு நிபந்தனைகளுக்கு மாத்திரம் ஒப்புக்கொள்ளவில்லை. இக்கொலைக்குக் காரணமாயிருந்தவர்களெனச் சொல்லப்படுகின்றவர்களை விசாரணை செய்யும்பொழுது ஆஸ்டிரியப்பிரதிநிதிகள் அங்கு நியாயஸ்தலத்தில் வந்து உட்காருவதற்கு ஸெர்வியா இடங்கொடுக்கமாட்டாதென்றும் நியாயஸ்தலத்தின் முன்பு குற்றவாளிகளென்று ருசுப்படுத்தப்பட்டவர்களை மாத்திரம் உத்தியோகங்களி

MADRAS.

ஷின்றும் நீக்குமென்றும் நியாயஸ்தல விசாரணையில்லாமல் ஆஸ்டிரியாவைச்சந்தோஷப்படுத்து வதற்காகத்தான் ஒருவரையும் நீக்காதென்றும் ஸெர்வியா சொல்லிவிட்டது. ஆனால் இந்த விஷயங்களைப்பற்றியும் தீர்மானிக்கவேண்டுமானால் ஹேக் மகாநகர் சமாதான ஸ்தலத்தில் தீர்த்துக் கொள்ளத்தான் தயாராயிருக்கிறது என்றும் ஸெர்வியா சொல்லியனுப்பி விட்டது. ஸெர்வியாவைவிட எத்தனையோமடங்கு பெரிய ஆஸ்டிரியா ஸெர்வியாவினுடைய இந்த அலட்சியச்செய்கையைப் பார்த்துக் கொண்டிருக்குமா? 1914-ம் வருஷம் ஜூலை 27உ யன்று ஆஸ்டிரியாவானது ஸெர்வியாவினிடத்தி லிருந்து தனக்கு வந்த மறுமொழி திருப்திகரமாயில்லை யென்றும் ஆதலால், தான் மறுநாள் ஸெர்வியாவுடன் யுத்தம் தொடங்கப்போவதாகவும் தெரிவித்துவிட்டது. ஆஸ்டிரியச்சக்கரவர்த்தி இந்த யுத்தம் ஆரம்பமாகும் பொழுது உலகம் அறியும்படியாக வெளிப்படுத்திய ஒரு அறிவிப்பில் தமது தீர்மானத்தினால் உண்டாகும் முடிவுகள் இன்னவை யென்று தாம் நன்ருக அறிந்திருப்பதாகவும் கடவுளிடத்தில் தாம் எவ்வளவு பாத்தியதைப்பட்டவராவார் என்பதையும் அறிந்திருப்பதாகவும் ஆஸ்டிரியா ஹங்கேரி தேசத்தின் ஒற்றுமைக்கட்டையும் கௌரதையையும் பெருமையையும் காப்பாற்றுவதாகத்தாம் கையில் வாள் எடுப்பதாகவும் கூறினார். உடனே யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

அத்தியாயம் 2.

ஆஸ்டிரியா ஸெர்வியாவுடன் யுத்தம் தொடங்கி விடவே, ஸெர்வியாவானது ஆஸ்டிரியாவின் எல்லை யோரத்தில் இருந்த பெல்க்ரேட் நகரத்தில் உள்ள தனது ராஜதானியைத் தனது உள் நாட்டு நகரங்களுள் ஒன்ருகிய க்ராகுஜேவாக்ஸ் என்ற இடத்திற்கு மாற்றிக்கொண்டு தனது படைகளை யெல்லாம் ஒன்று சேர்த்தது. ஸெர்வியாவா

னது யுத்தத்திற்குப் படை சேர்க்க ஆரம்பித்தால், ஏறக்குறைய மூன்று லட்சம் பேர் தான் சேர்க்க முடியும்; இவ்வளவு பேரையும் சேர்த்துக்கொண்டு யுத்தத்திற்குத் தயாராய்விட்டது. ஆஸ்டிரியா ஸெர்வியாவுடன் யுத்தம்செய்வதாக அறிவித்து விடவே, ஸெர்வியாவை ரட்சிப்பதாக வாக்களித்த ருஷியாவானது படை சேர்க்க ஆரம்பித்து விட்டது.

ருஷியாவானது ஐரோப்பாக்கண்டத்தின் கிழக்குப் பாகத்திலுள்ளதோர் பிரமாண்டமான தேசம். இத்தேசத்திற்குச் சமாதான காலத்திலேயே 15,00,000 பேர் சைந்நியத்திலுண்டு. யுத்த சமயத்தில்படைசேர்க்க ஆரம்பித்து விட்டால், 45,00,000 பேர் சேர்த்துவிடும். ருஷியாவுக்கு 3,500 பீரங்கிகளுண்டு. இத்தேசத்திற்குக் கடற்படையானது பால்டிக் கடலிலும் கருங்கடலிலும் உண்டு. பால்டிக் கடலில் நான்கு பயங்கரப் போர்க்கப்பல்களும், கவசமிட்டவையும் ரட்சை பொருந்தியவையுமான பத்து சிறு யுத்தக் கப்பல்களும் இரண்டு சிறிய சாதாரண யுத்தக்கப்பல்களும், ஏறக்குறைய எண்பது நாசகாரிகளும் 24 ஜல மூழ்கிக் கப்பல்களும் உண்டு; மேலே கூறப்பட்டுள்ள நான்கு பயங்கரப் போர்க் கப்பல்களுள் ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு 12 அங்குல பீரங்கிகளும் பதினாறு 4.7-அங்குல பீரங்கிகளும் இன்னும் அநேக சிறு ஆயுதங்களும் உண்டு. சிறு யுத்தக் கப்பல்களில், "ரூரிக்"என்ற பெயரையுடைய ஒரு யுத்தக் கப்பலில் நான்கு 10-அங்குல பீரங்கிகளும் எட்டு 8 அங்குல பீரங்கிகளும் இருபது 4.7-அங்குல பீரங்கிகளும் உண்டு; இக்கப்பலின் கவசமும் மிகவும் கனமும் பலமும் உள்ளது. மற்ற யுத்தக்கப்கல்களெல்லாம் சாதாரண வேகத்தையும் சக்தியையும் உடையனவே. கருங்கடலில் உள்ள கடற்படையானது பால்டிக் கடலில் இருக்கும் கடற்படையில் பகுதி யிருக்கும். இவ்வளவு கடற்படையிருந்தும் சௌகர்யமானகடல்கள் இல்லாமையினால், பிறதேசங்களின் மீது ஆக்கிர மித்

துச் சென்று போர்புரியும் தன்மை இக்கடற் படைக்கு வாய்த்தல் அரிது.

ருஷியா படைசேர்க்க ஆரம்பிக்கவே, ருஷியாவுக்குமேற்கிலும் ஆஸ்டிரியாவுக்கு வடமேற்கிலுமாக உள்ள ஜெர்மனியானது ருஷியா படைசேர்ப்பதின் அர்த்தம் இன்னதென்று தனக்கு விளங்கவில்லையென்றும் ஆதலால் உடனே ருஷியாவானது படை சேர்த்தலை நிறுத்தி விடவேண்டுமென்றும் ருஷியாவுக்கு எழுதிக்கேட்டது. ஜெர்மனி ஆஸ்டிரியாவுடன் நட்பு கூடி ஒரு உடன் படிக்கை பண்ணிக்கொண்டிருந்தது. ஆஸ்டிரியாவும் ஜெர்மனியும் ஒன்றுக்கொன்று அடுத்த தேசங்களா யிருப்பதினுல், ஒன்றுக்கொன்று பலமாக உதவி செய்துகொள்ளக் கடமைப் பட்டவைதாம். ருஷியா ஸெர்வியாவுக்கு உதவி செய்வதாகப் படைசேர்த்து, ஆஸ்டிரியாவை அடிக்க விரும்பவே, ஜெர்மனியும் அசைய ஆரம்பித்துவிட்டது. பிரிட்டிவ்ஷ் அந்நிய மந்திரியாகிய ஸர் எட்வர்ட் க்ரே என்பவர் அப்பொழுதே இந்த சச்சரவு ஆஸ்டிரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் மாத்திரமா நின்றுவிட்டால் தான் நல்லது, இவ்விரண்டு தேசங்களையும் தவிர, வேறு எந்த அரசாவது இந்த சச்சரவில் கலந்துகொள்ளுமானுல், ஐரோப்பா முழுதும் யுத்தகளமாய்விடும் என்ருர். ஆதலால் அவர் ருஷியா படை சேர்ப்பதையும் ஜெர்மனி பொங்கி எழுந்திருப்பதையும் பார்த்து உடனே பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்டிரியா, ருஷியா, ஸெர்வியா இந்த தேசங்களின் அரசர்களுக்குச் சமாதானத்தின் பொருட்டு எழுதி இந்த அரசுகளின் ஸ்தானுபதிகள் லண்டனில் ஒரு சபை சேர்ந்து ஒரு ஐரோப்பிய யுத்தம் உண்டாகாமல் தடுப்பதற்குள்ள வழிகளை ஏற்பாடு செய்வதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவருடைய இம்முயற்சி பலிக்கவில்லை. ருஷியாவும் ஆஸ்டிரியாவும் யுத்தம் செய்தல் தகுதியன்றென்று ஜெர்மனி ஒப்புக்கொண்டாலும், அது ஸ்தானுபதிகளின் சபைக்கு இணங்கவில்லை.

இதற்குள்ளாக ஆஸ்டிரியாவும் ஸெர்வியாவும் யுத்தம் செய்துகொண்டிருந்தன. ஸெர்வியாவின் பிரதான நகரமாகிய பெல்க்ரேட் நகரமானது ஆஸ்டிரியர்களால் தாக்கப்பட்டு நெருப்புக் கொளுத்தப்பட்டது. ஆஸ்டிரியா ஸெர்வியாவுடன் யுத்தம் ஆரம்பிப்பதற்கு மூன்று நாட்களுக்கு முந்தி ருஷிய அந்நிய நாட்டுமந்திரி ஸெண்ட் பீட்டர்ஸ் பெர்க்கிலுள்ள பிரிட்டிஷ் தூதரிடத்தில் இங்கிலாந்து பிரான்ஸுக்கும் ருஷியாவுக்கும் உதவியாயிருப்பதாக இப்பொழுதே வாக்களித்து விட்டால் ஒரு வேளை யுத்தம் உண்டாகாது என்றும், அப்பொழுது அப்படிச் செய்யத்தவறி விட்டால் ஐரோப்பாவில் ரத்த ஆறுகள் ஓடுமென்றும்சொன்னார். அப்படியேயாய்விட்டது! ஆனால் பிரிட்டிஷ் பொது ஜனங்களுடைய அபிப்பிராயப்படியே ஸர் எட்வர்ட் க்ரே நடக்கக்கடமைப் பட்டவராதலால், திடீரென்று அவர் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஜுலைமீ 29-ம் தேதியன்று அவர் லண்டனிலுள்ள பிரெஞ்சுத் தூதரிடத்தில் இந்த யுத்தமானது ஆஸ்டிரியாவுக்கும் ஸெர்வியாவுக்குமாயிருந்தாலும் சரியே, ஆஸ்டிரியாவுக்கும் ருஷியாவுக்குமா யிருந்தாலும் சரியே, பிரிட்டிஷார் அதில் பிரவேசிக்க வேண்டிய அவசியமில்லையென்றும் ஆனால் ஜெர்மனிக்கும் பிரான்ஸுக்கும் யுத்தம் நேரிட்டுவிட்டால் பிரிட்டிஷார் செய்ய வேண்டியது இன்னதென்று அப்பொழுது தீர்மானிக்கவில்லையென்றும் பிரிட்டிஷாருக்கு இந்தயுத்தத்தில் எவ்விதத்திலும் கட்டுப்பாடுகள் இல்லையாயினும் பிரிட்டிஷாருடைய நன்மைகளை உத்தேசித்துச் செய்ய வேண்டியதைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் சொன்னார்.

இதே மாதிரியே அவர் லண்டனிலிருந்த ஜெர்மன் தூதரிடத்திலும் சொன்னார்.

இவர் இங்கு இப்படிச் சொல்லிய அதே தினத்தில் ஜெர்மனியில் பாட்ஸ்டாம் என்னும் நகரில் ஜெர்மன் சக்கரவர்த்தியின் தலைமையின் கீழ் ஒரு யுத்த சபை கூடிற்று. அன்று ராத்திரி ஜெர்மனியின் முதல்மந்திரி பெர்லினிலுள்

ள பிரிட்டிஷ் தூதரிடத்தில் "ஆஸ்டிரியாவை ருஷியா எதிர்ப்பதாயிருந்தால், ஜெர்மனி ஆபத்துசமயத்தில் ஆஸ்டிரியாவுக்கு உதவி செய்வதாக வாக்கு அளித்துச் செய்திருக்கிற உடன் படிக்கையின் பிரகாரம் ஜெர்மனி இந்த யுத்தத்தில் சேரவேண்டி வரும்; அப்பொழுது ஐரோப்பாவே ஒரு பெரிய அமர்க்களமாய் விடும் ; எவ்வித யுத்தத்திலும் பிரான்ஸ் அழிக்கப்படும்படியாக இங்கிலாந்து பார்த்துக் கொண்டிருக்காது என்று ஜெர்மனிக்குத் தெரியும். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பொதுவாயிருப்பதாக வாக்கு அளிப்பார்களானுல், இனிமேல் உண்டாகின்ற எந்த யுத்தத்திலும் ஜெர்மனி ஜெயமடைந்தால், பிரான்ஸ் தேசத்தின் ஒரு சிறு பங்கைக் கூட ஜெர்மனி சேர்த்துக்கொள்ள எண்ணுகிறதில்லை" யென்ருர். அப்பொழுது அங்குள்ள பிரிட்டிஷ் தூதர் பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளின் கதியைப் பற்றிக் கேட்க, ஜெர்மன் முதல்மந்திரி அவ்விஷயத்தைக் குறித்து இப்பொழுது உறுதியாக ஒன்றும் சொல்ல முடியாது என்று விட்டார். ஹாலண்ட் தேசத்தைப் பற்றிப் பேசிய பொழுது, ஜெர்மன் முதல் மந்திரி ஜெர்மனியினுடைய எதிரிகள் ஹாலண்டைப் பொதுவாக நினைத்து அதற்குள் பிரவேசியாத வரையில், ஜெர்மனியும் அப்படியே இருப்பதாகவும் பெல்ஜியத்தின் விஷயத்தில், பிரான்ஸ் செய்யும் செய்கையைப் பொறுத்திருக்கிறதென்றும் ஆனல் யுத்தம் முடிந்தவுடன் பெல்ஜியம் ஜெர்மனியின் எதிரிகளுடன் சேராதிருந்தால்—பெல்ஜியத்தை அப்படியே முன்போலவே தனியரசாக வைத்துவிட ஜெர்மனி உத்தேசித்திருக்கிறதென்றும் சொன்னர். இந்த சமாச்சாரததைப் பிரிட்டிஷ் தூதர் இங்கிலாந்துக்குத் தெரியப்படுத்தவே, ஸர் எட்வர்ட் க்ரே அவர்கள் அந்த ஏற்பாடுகளுக்குச் சம்மதிக்கவேயில்லை. எந்தக் காரணத்திலும் பெல்ஜியத்தின் பொதுத்தன்மைக்குக் குறைவு வரும்படியாக ஆங்கிலேயர்கள் சம்மதிக்க மாட்டார்களென்றும் பிரான்ஸினுடைய குடியேற்ற நாடுகள் பிரான்ஸினிடத்திலின் ம் பிடுங்கப்படுமானல் பிரா

ன்ஸ் ஜெர்மனியைப் பார்க்கிலும் சக்தி குறைந்ததாகி ஜெர்மனியின் உத்தரவுப்படி நடக்கவேண்டி வந்துவிடுமென்றும் ஆதலால் ஆங்கிலேயர்கள் அதற்கும் சம்மதிக்க முடியாது என்றும் சொல்லிவிட்டார்.

ஜெர்மனி ஜூலைமாதம் 31-ம் தேதியன்று ருஷியாபடை சேர்த்தலை நிறுத்தி விடவேண்டுமென்று முடிவாகச் சொல்லிவிட்டது. அதேதேதியில் ஸர்எட்வர்ட்க்ரே ஜெர்மனியும் பிரான்ஸும் பெல்ஜிய விஷயத்தில் என்ன நோக்கம் கொண்டிருக்கின்றனவென்றும் வேறு எந்த அரசும் பெல்ஜியத் திற்குள் பிரவேசியா திருக்கும் வரையில் இந்த இரண்டு அரசுகளும் பெல்ஜியத்தைப் பொதுவாக மதித்திருக்குமா என்றும் கேட்டார். பிரான்ஸ் சம்மதித்துப் பதில் கூறிவிட்டது. ஜெர்மனிபதிலே கொடுக்க வில்லை.

இதற்குள்ளாக ஜெர்மனி தனது படைகள் பெல்ஜியத்தின் வழியாக பிரான்ஸுக்குச் செல்லும்படி யநுமதி கொடுக்க வேண்டுமென்று பெல்ஜிய அரசனுக்கு எதிழுயனுப்பிற்று. பெல்ஜியம் சம்மதிக்கவில்லை. ஜெர்மனி மறுபடியும் பெல்ஜியத்திற்கு எழுதி, உடனே சம்மதிக்காவிட்டால் தான் பலாத்காரமாக உள்ளே நுழைவதாகப் பயமுறுத்திற்று. இப்படியெல்லாம் இங்கு யுத்த முயற்சிகள் நடந்து கொண்டிருக்கையிலேயே, ஆஸ்டிரியாவும் ருஷியாவும் சமாதானமாகாமல் மேன்மேலும் படைகளைச் சேர்த்துக்கொண்டே யிருந்தன. ஜெர்மன் சக்கரவர்த்தியும் ருஷியச் சக்கரவர்த்தியும் கடிதப் போக்குவரவுசெய்து கொண்டார்கள். நமது மாட்சிமை தங்கிய ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியவர்களும் ருஷியாவுக்கு எழுதிப்பார்த்தார். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. ஆஸ்டிரியாவும் ருஷியாவும் யுத்தம் ஆரம்பித்து விட்டன. ஜெர்மனியானது ருஷியாவுக்கும் பிரான்ஸுக்கும் உடனே அந்தத்தேசங்கள் படைசேர்ப்பதை நிறுத்தி விடவேண்டுமென்றும், இல்லாவிட்டால் தான் அவற்றுடன் யுத்தத்திற்குத்தயாரா யிருப்பதாகவும் எழுதிவிட்

டது. ஜெர்மன் தூதர்கள், ஸெண்ட் பீட்டர்ஸ் பர்க் (ருஷி யாவின் பிரதானப் பட்டணம்) கிலும் பாரிஸிலும் இருந்த வர்கள் அந்நகரங்களை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

ஜெர்மனியினுல் பயமுறுத்தப்பட்ட பெல்ஜியம் அர சர் நமது சக்ரவர்த்தியாரவர்களிடத்தில் அபயமடைந்தார். அபயமடைந்த அரசரையும் அவருடைய தேசத்தையும் அந்ததேசத்தின் கௌரதையையும்காப்பாற்றிக்கொடுப்பத ற்குஇங்கிலாந்து தீர்மானித்துவிட்டது. ஆனுல்திடீரென்று யுத்தம் தொடங்க விரும்பாமல், இங்கிலாந்து மறுபடியும் ஜெர்மனிக்கு எழுதிக் கேட்டது. இதற்குள்ளாக ஜெர்மன் படைகள்பெல்ஜியத்திற்குள்பிரவேசித்துவிட்டன. லக்ஸம் பேர்க் என்னும் மிகவும் சிறிய ராஜ்யத்தை ஜெர்மன் படை கள் கடந்து சிலநாட்கள் ஆய்விட்டன. லக்ஸெம்பர்க் பிர தேசமானது ஒரு யௌவனப் பெண்ணரசியால் ஆளப்படு கிறது. அவருக்கு இப்பொழுது வயது சுமார் 20 தான்; இன்னும் விவாகம் ஆகவில்லை; ஜெர்மன் சக்கரவர்த்தியின் புத்திரர்களில் ஒருவரை விவாகம் செய்து கொள்ளப்போவ தாகவும் பிரஸ்தாபம்நடந்து கொண்டிருந்தது. இதற்க்குள் யுத்தம் ஆரம்பமாய்விட்டது. லக்ஸம்பேர்க்பிரதேசமானது மிகச்சிறியது. படைகளே கிடையாது; ஆதலால் வேற்றரசர் கள் அதைபடை யெடுப்பதாயிருந்தால், தன்னைத்தானே ரட்சித்துக்கொள்ளும் சக்தி அதற்குக்கிடையாது. ஜெர் மனியர்களுடைய படைகள் லக்ஸம்பர்க்குக்குள் நுழைந்த வுடனே, அவ்விடத்து அதிகாரிகள் தடுத்துப்பார்த்தார் கள்; ஜெர்மனியர்கள் ரெயில்பாதைகளை யெல்லாம் கைவ சப்படுத்திக்கொண்டு, யுத்தம்முடிந்த பிறகு தாங்கள் லக்ஸம்பர்க்குக்கு நஷ்ட யீடுகொடுத்து விடுவதாகவும் சொன்னர்கள். ஆதலால் லக்ஸம்பர்க்கின் ராணியால் ஜெர் மனியர்களை எதிர்க்க முடியவில்லை.

பிரான்சுக்கும் ருஷியாவுக்கும் ஒரு உடன்படிக்கை யிருந்தது. அந்த உடன்படிக்கையின்படி ஒன்றுக்கொ ன்று உதவிசெய்துகொள்ள வேண்டுமென்று கண்டிருந்

தது. இங்கிலாந்தும் அந்த உடன்படிக்கையில் உட்பட்டிருந்தபோதிலும், இவ்வளவு கடினமான நிபந்தனைகளுக்குட்படவில்லை. ஆதலால் ருஷியா ஆஸ்டிரியாவுடன் யுத்தம் ஆரம்பித்தவுடனே, பிரான்ஸூம் படைசேர்க்க ஆரம்பித்து விட்டது. ஜெர்மனிதான் ருஷியாவுக்கும் பிரான்ஸூக்கும் எழுதிய கடிதத்திற்குத் தான் குறித்த நேரத்திற்குள் பதில் வராததினால், ருஷியாவுடன் யுத்தம் ஆரம்பிப்பதாகச் சொல்லிவிட்டு லக்ஸம்பேர்க் வழியாகப் பெல்ஜியத்திற்குள் ஒரு பெரும் சைந்நியத்தை அனுப்பிவிட்டது. இன்னும், பிரான்ஸூடன் யுத்தம் ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லாமலே, பிரான்ஸை ஜெர்மனிபடை யெடுத்து விட்டது.

ஜெர்மனியில் முதல் மந்திரி தனது சபையில் பின்வருமாறு பேசினார்:—"நாம் இப்பொழுது அவசியம் என்ற ஒரு நிலைமையில் இருக்கிறோம்; அவசியம் என்பது சட்டங்களை யறியாது!......என்றார். இவ்வளவும் ஆய்விட்டபின்னர், ஜெர்மனியானது உலகம்முழுதும் எதிர்த்துவந்து ஒரு கைபார்க்கிறது என்ற பைசாசஎண்ணம்கொண்டுவிட்டபிற்பாடு, ஆங்கில அரசாங்கத்தாரால் சமாதானத்திற்கு என்ன முயற்சி செய்யமுடியும்? ஆதலால் ஆகஸ்டுமீ 3-ம் தேதியன்று இங்கிலாந்தின் அந்நிய நாட்டு மந்திரியாகிய ஸர் எட்வர்ட்க்ரே என்பவர் தமது சமாதான முயற்சிகள் பயன்படாமற்போனதுகண்டு பார்லிமெண்டு மகாசபையில் ஜெர்மனியின் ஆங்காரச் செய்கைகளையும் தாம்செய்த சமாதான முயற்சிகள் பிரயோசனப்படாமல்போனதையும் பெல்ஜியம், பிரான்ஸ் இந்தத் தேசங்களை ஜெர்மனி எதிர்க்குமானால் இங்கிலாந்துக்கு உண்டாகும் நன்மை தீமைகளையும் சவிஸ்தாரமாக எடுத்துக்காட்டிக் கடைசியில் இப்பொழுது இங்கிலாந்து யுத்தம்செய்தே தீரவேண்டியிருக்கிறதென்றுதாம் அபிப்பிராயப் படுவதாகவும் சொல்லி முடித்தார். பார்லிமெண்டு மகாசபையினர் அனைவரும் அவருடைய அபிப்பிராயத்தை ஆமோதித்தார்கள். ஆகஸ்டுமீ 4-ம் தேதிசெவ்

வாய்க்கிழமை ஸர் எட்வர்ட் க்ரே அவர்கள் ஜெர்மனியின் பிரதான நகரமாகிய பெர்லினில் இருந்த பிரிட்டிஷ் தூதருக்கு ஜெர்மனி பெல்ஜியத்தின் பொதுதன்மையை மதிக்கும்படி மறுபடியும் கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும். அப்படி திருப்திகரமானபதில் அன்றையதினம் இரவு 12 மணிக்குள் கிடைக்காவிட்டால் அவர் தமது அனுமதிச் சீட்டைக் கேட்டு வாங்கிக் கொண்டு வந்து விடும் படிக்கும் எழுதிவிட்டார். பிரிட்டிஷ் தூதர் ஜெர்மனிய அரசாங்கத்திற்கு ஸர் எட்வர்ட்க்ரே அவர்களுடைய தீர்மானத்தைத் தெரியப்படுத்தினவுடனே, இங்கிலாந்து யுத்தம் ஆரம்பித்துவிட்டது, என்று ஜெர்மனி கொஞ்சம்கூட யோசனை செய்யாமல் வெளியிட்டு விட்டது. இங்கிலாந்தும் ஜெர்மனியும் யுத்தத்தில் இறங்கிவிட்டன.

இப்பொழுது ஸெர்வியா, ருஷியா, மான்டி நீக்ரோ என்னும் சிறுதேசம், பெல்ஜியம், பிரான்ஸ், இங்கிலாந்து இத்தனை தேசங்களும் ஒருகட்சியிலும், ஆஸ்டிரியா ஹங்கேரியும் ஜெர்மனியும இன்னொரு கட்சியிலுமாகயிருந்து கொண்டு யுத்தம் செய்யத்தொடங்கின.

அத்தியாயம் 3.

வல்லரசுகள்.

இப்பொழுது ஐரோப்பாவில் யுத்தம்செய்யக் கங்கணம் கட்டிக்கொண்ட ராஜ்யங்கள் எல்லாவற்றையும் பற்றிச் சிறிது விசாரிப்போம். ஆஸ்டிரியா, ஸெர்வியா, ருஷயா இந்தமூன்று தேசங்களைப் பற்றியும் நாம் முன்னமேயே கூறியிருககிறோம்.

ஸெர்வியாவுக்குப் பக்கத்தில் மான்டி நீக்ரோ என்னும் ஒரு சிறு பிரதேசம் இருக்கிறது. இது மிகவும் சிறிய ஒரு மலை நாடு. இதன் விஸ்தீர்ணம் ஏறக்குறைய 3500 சதுர மைல் இருக்கலாம்; இதன் ஜனத்தொகை ஏறக்குறைய

இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் உண்டு. இந்நாடு சென்ற இருநூறு வருஷங்களுக்கு மேலாகத் தனது ஸ்வதந்திரத்தை நாடித் துருக்கியுடன் யுத்தம் செய்தது. 1878-வது வருஷத்தில் ஒரு தனி நாடு என இந்ததேசத்தை வல்லரசுகள் ஒப்புக்கொண்டன. ஆனால் 1910-ம் வருஷத்தில்தான் அது ஒரு ராஜாங்கமாக நிலைத்தது. இதன் ஜனங்கள் மலைகளில் வசித்துப் பற்பல கஷ்டங்களையும் அனுபவித்துத் தேர்ச்சி பெறுவதாலும் நெடுங்காலமாக யுத்தமே தொழிலாகக் கொண்டு தனது ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக சுற்றுப்பக்கத்திலுள்ள அரசுகளுடன் யுத்தம் செய்ய வேண்டி நேரிட்டிருந்ததினாலும், சரீரபலமும் மனோபலமும் திடமாக வாய்க்கப் பெற்றிருக்கிறார்கள். இந்த தேசத்தில் சமாதான காலத்தில் 3000போர் வீரர்களும் யுத்தகாலத்தில் 30,000 போர்வீரர்களும் உண்டு இவர்களுக்கு 30 பீரங்கிகளும் இருக்கின்றன. இந்த தேசமானது ஸெர்வியா, போஸ்னியா முதலிய தேசங்களுக்குப் பக்கத்தில் இருப்பதினால் அந்ததேசங்களுடன் சேரக்கடமைப் பட்டுள்ளது. ஆதலால் ஸெர்வியாவுடன் மாண்டிநீக்ரோ சேர்ந்து கொண்டது. மாண்டிநீக்ரோதேசத்து அரசருக்கு அநேகம் பெண்கள் உண்டு; இப்பெண்களை யெல்லாம் ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள அநேக அரசர்களுக்கு விவாகம் செய்து கொடுத்திருக்கிறார். அவருடைய ஒருபெண் இத்தாலிதேசத்து அரசரை மணந்திருக்கிறாள்.

பெல்ஜியம் என்னும் தேசமானது ஹாலண்டுக்குத்தெற்கே, பிரான்ஸுக்கு வடக்கே, ஜெர்மனிக்கு மேற்கேயுள்ள ஒரு சிறுதேசம். இதன் விஸ்தீர்ணம் 11873 சதுரமைல். இதன் ஜனத்தொகை ஏறக்குறைய அறுபத்தியேழு லட்சத்துக்கு அதிகமாகவே யுண்டு. இந்ததேசமானது ஐரோப்பாக்கண்டத்திலேயே ஜன அடர்த்தி மிகுந்ததும் வியாபாரம் செழித்ததும் ஆகியதேசம்; இத்தேசவாசிகள் நல்ல உழைப்பாளிகள். இந்ததேசத்தின் மேற்குப்பக்கத்தில் சில இடங்களில் பூமியானது சமுத்திரமட்டத்திற்கு வெகு தாழ்வாயிருப்ப

தினுல், சமுத்திரஜலம் உள்ளே பிரவேசித்துவிடாதிருக்கும் பொருட்டு 40 அல்லது 50 அடி உயரமுள்ள அணைகள் கட்டப்பட்டிருக்கிறன. இந்ததேசம் பெரிய பெரிய நகரங் களையுடைய ஒரு சிறியதேசம். ஸ்பெயின் தேசத்து அரசர் ஒருவர், இரண்டாவது பிலிப் என்பவர் பெல்ஜியத்தின் வழி யாக யாத்திரை செய்ய நேரிட்டபொழுது "ஆ! இது என்ன, தேசமெல்லாம் ஒரேப்பட்டணமாயிருக்கிறதே!" என்று ஆச்சாயப் பட்டாராம். பெல்ஜியத்தின் அளவு தேசங்களில் ஒன்ருவது பெல்ஜியத்தைப் போலக்கைத் தொழிலில் முன் நிற்கும் தேசமாகவில்லை. இந்த தேசமா னது 1830-வது வருஷத்தில் ஹாலண்டி லிருந்து பிரிந்து தனித்த தேசமாயிற்று. ஆஸ்டிரியா-ஹங்கேரி செய்து வரும் வியாபாரத்தைப் பார்க்கிலும், இந்நாடு அதிகவியா பாரம் செய்துவருகிறது. வியாபாரத்தின் பெரும்பாகமும் பிரான்ஸுடனேயே நடத்தப்பட்டு வருகிறது. பெல்ஜியம் தேசத்திலுள்ள ரெயில் பாதைகளெல்லாம் பாரிஸ் நகரத் தையே நோக்கி ஒன்று சேர்கின்றன. உலகத்தில் பெல்ஜி யம் தான் வியவசாயத்தில் முன்நிற்கும் தேசம். அது தனக்குவேண்டிய ஆகாரம் எவ்வளவோ, அதற்கு இரட் டிப்பு மடங்கு கிருஷிசெய்து கொள்கிறது. ஆதலால் அது ஆகார வஸ்துக்களைப் பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்கி றது. அதன் நகரங்களெல்லாம் புராதன வஸ்துக்களாலும் அதி நூதனமான சித்திரவேலைப் பாடுகளாலும் விலையுயர் ந்த நவரத்தினங்களாலும் அலங்கரிக்க ப்பட்டுள்ளன. ஐரோப்பாவில் நடக்கும் பெரும் யுத்தங்களுக் கெல்லாம் பெல்ஜியம் யுத்த பூமியாயிருக்கிறது. இந்த தேசத்தில் தான் சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பெயர்பெற்ற நெப்போலி யனை வல்லரசுகள் ஜெயித்தன. இந்ததேசத்திற்குச் சமா தான காலத்தில் 55,000 போர்வீரர்களும் யுத்தகாலத்தில் 3,40,000 போர்வீரர்களும் 204 பீரங்கிகளும் உண்டு. இதற் குக் கடற்படை கிடையாது. ஆனுல் பெல்ஜியத்தில் சில மிகச்சிறந்த கோட்டைகள் உண்டு.

பிரான்ஸ் தேசமானது உலகிலேயே தனம்மிகுந்ததேச மெனப்பெயர் பெற்றது. இது பெல்ஜியத்திற்குத் தெற்கிலும் ஜெர்மனிக்கு மேற்கிலும் இருக்கிறது. பிரான்ஸுக்கு மேற்கே அட்லான்டிக் மகா சமுத்திரமும் தெற்கே மத்திய தரைக்கடலும் வடமேற்கோரத்தில் வடகடலும் யிருப்பதால், அதன் வியாபாரம் உலகத்துடன் நடைபெருதற்கு சுலபமா யிருக்கிறது. இதன் விஸ்தீரணம் 2,04,000 சதுரமைல். க்ரேட்பிரிட்டனைவிட இரண்டு மடங்குக்கு அதிகமாகப் பெரிது. இதற்கும் இங்கிலாந்துக்கும் நடுவே டோவர் ஜலசந்தி யிருக்கிறது; டோவர் ஜலசந்தியின் இக்கரையிலுள்ள (பிரான்ஸ் கரையிலுள்ள) கலேய் என்னும் பட்டணத்திற்கும் அக்கரையிலுள்ள (இங்கிலாந்துக் கரையிலுள்ள) டோவர் என்னும் பட்டணத்திற்கும் இருபது மைல் தூரம்தான் உண்டு. டோவர் ஜலசந்தியின் இரு பக்கங்களிலும் இங்கிலாந்தும் பிரான்ஸுமாக இருப்பதாலும் இன்னும் இந்த ஜலசந்தியே பெல்ஜியம், ஹாலண்டு, டென்மார்க், ஜெர்மனி, ருஷியா, நார்வே, ஸ்வீடன் முதலிய தேசங்களுக்குச் செல்லும் பாதையா யிருப்பதாலும் இந்த ஜலசந்தியின் வழியாக வருஷத்துக்கு இரண்டு லட்சம் கப்பல்களுக்குக் குறையாமல் செல்லுகின்றன. பிரான்ஸ் உலகத்தில் கைத்தொழில்களில் உயர்ந்த தேசங்களுள் ஒன்று. புத்தி சாதுர்யமான வேலைகளில் பிரான்ஸே உலகில் முதன்மையாக நிற்கிறது. இதன் ஜனத்தொகை ஏறக்குறைய மூன்று கோடியே எண்பது லட்சத்துக்குமேல் உண்டு. இந்த தேசத்திற்கு சமாதான காலத்தில் 7,30,000 போர் வீரர்களும் யுத்தகாலத்தில் நாற்பது லட்சம் போர்வீரர்களும் உண்டு. இப்பொழுது கடற்படை பிரான்ஸுக்கு 23 போர்க்கப்பல்களும் 24 சிறு யுத்தக்கப்பல்களும் 8 சாதாரணமான சிறிய யுத்தக்கப்பல்களும் 80 நாசகாரிகளும் 140 துளைகருவிப் படகுகளும் 50-க்கு அதிகமாக ஜலமூழ்கிக் கப்பல்களும் உண்டு. இன்னும் 10 பயங்கரப்

போர்க்கப்பல்களும் இருக்கின்றன. அவற்றில் நான்கு ஒவ்வொன்றும் 23,095 டன் நிறையுள்ளது; ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு 12 அங்குல பீரங்கிகளும் உண்டு. மற்ற ஆறு பயங்கரப் போர்க்கப்பல்களும் ஒவ்வொன்றுக்கும் நான்கு பன்னிரண்டு அங்குல பீரங்கிகளும் பன்னிரண்டு 9.4 அங்குல பீரங்கிகளுமாக அநேக பீரங்கிகளையுடைத்தாயிருக்கின்றன. மொத்தம் போர்க்கப்பல்களில் 12 அங்குல பீரங்கிகள் 114, 10.8 அங்குல பீரங்கிகள் 8, 9.4 அங்குல பீரங்கிகள் 72, 7.6 அக்குல பீரங்கிகள் 30, 6.5 அங்குல பீரங்கிகள் 46, இத்தனை பீரங்கிகள் இருக்கின்றன. 24 சிறு யுத்தக்கப்பல்களில் 16 யுத்தக் கப்பல்கள் 8000 டன் உள்ளன. இப்பொழுது புதிதாகச் செய்யப்பட்டிருக்கும் சிறு யுத்தக்கப்பல்களுக்கெல்லாம் ஒவ்வொன்றிலும் பதினன்கு 7.6 அங்குல பீரங்கிகள் உணடு. சமீபத்தில் ஆது தயாராயிருக்கும் நாசகாரிகள் ஒவ்வொன்றும் 880 டன் உள்ளன; ஒவ்வொன்றிலும் இரண்டு 3.9 அங்குல் பீரங்கிகளும் இரண்டு துளைகருவி இரட்டைக்குழாய்களும் உண்டு; சில நாசகாரிகள் 400 டன் முதல் 755 டன் வரையிலும் பற்பல விதங்களிலும் இருக்கின்றன.

இத்தேசம் ஒரு குடியரசு. இத்தேசத்து ஜனங்கள் உலக சுகங்களை நன்றாக அநுபவிப்பவர்கள். ஜெர்மனி இதனுடன் 1870-1-ல் யுத்தம் செய்தபொழுது, பிரெஞ்சுக்காரருடைய சைந்யமும் பலமும் முறிந்து விட்டன. பின்னர் அவர்களுடைய மெத்தனத்தினாலும் சைந்யம் பலப்படுத்தப் படவில்லை. ஆனால் சென்ற சில வருஷங்களாக ஜெர்பனி தனது கடற்படையையும் கரைப்படையையும் விருத்திசெய்துகொண்டே வந்ததினால், பிரான்ஸும் கொஞ்சம் விழிப்புடனேயே இருக்கும்படி நேர்ந்தது.

ஜெர்மனி யென்பது பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலண்டு இந்த தேசங்களுக்குக்கிழக்கிலும் டென்மார்க்குக்கும் பால்டிக் கடலுக்கும் தெற்கிலும் ருஷியாவுக்கு மேற்கிலும் ஆஸ்

டிரியாவுக்கும் ஸ்விட்ஸர் லாண்டுக்கும் வடக்கிலும் உள்ள ஒருபெரியராஜ்யம் இதன்விஸ்தீர்ணம் 2,12,000 சதுரமைல் இதன் ஜனத்தொகை ஏறக்குறைய ஐந்துகோடியே ஐம்பது லட்சம். இந்ததேசத்திற்கு சமாதான காலத்தில் 8,14, 000 போர்வீரர்களும் யுத்தசமயத்தில் 55,00, 000 போர்வீரர் களும் 4000 பீரங்கிகளும் உண்டு. கடற்படையில், ஜெர் மனிக்கு 21 போர்க்கப்பல்களும், நான்கு, சிறு யுத்தக்கப் பல்களும் எட்டு சாதாரணச்சிறு யுத்தக்கப்பல்களும் 80 துளைக்கருவிப்படகுகளும் உண்டு; இவற்றில் 13 பயங்கரக் கப்பல்களும் சேர்ந்திருக்கின்றன. இத்தனை படையும் பெரு ங்கடல் களில் இருக்கின்றன. இப்படையைச் சேர்த்து ஜெர்மனிக்கு மொத்தமாக 37 போர்க்கப்பல்களும் 9 கவசம் இட்ட சிறு யுத்தக்கப்பல்களும் 39 சாதாரணச் சிரு யுத்தக் கப்பல்களும். 142 நாசகாரிகளும், 47 துளைக் கருவிப்படகுகளும் 27 ஜலமூழ்கிக் கப்பல்களும் உண்டு. உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்ட ஜலமூழ்கிக் கப்பல்களின் தொகைக்கு அதிகமாகவே, ஜெர்மனி ஜல மூழ்கிக் கப்பல்களைத் தயார்செய்து கொண்டு வந்தது. ஜெர்மனியர்கள் நேருக்கு நேர்பேசுபவர் களென்றும் யோக் கியர்கள் என்றும் தைர்யமுள்ளவர்கள் என்றும், ராஜவிஸ் வாசமுடையவர்களென்றும் இடைவிடாமுயற்சியுடையவர் களென்றும் பூமி சாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஜனத்தொ கையிலும் தனத்திலும் ஜெர்மனி வெகு வேகமாகப்பெரு கிக் கொண்டிருக்கிறது; கரைப்படையில் இதுவே உலகில் முதன்மையாக நிற்கும் தேசமென்று சொல்லப்படுகிறது. ஜெர்மனியர்கள் வியாபாரத்தில் மிகுந்த ஊக்கமுடையவர் கள்; அவர்களுடைய வியாபார சாமர்த்தியம் எல்லோரா லும் மெச்சப் படுகிறது. சென்ற சில வருஷங்களுக்குள் ளாக அவர்கள் வெகு வேகத்தில் முன்னணியில் வந்துவிட் டார்கள். ஜெர்மனி வித்தைக்கும் நாகரீகத்திற்கும் மேம் பட்ட தேச மென்று சொல்லப்பட்டது. இதற்குக் கடற்

கரை பால்டிக்கடலில் தான் அதிகம் உண்டு; வடகடலில் மிகவும் சொற்பமாக உண்டு.

ஜெர்மனி வியாபாரம் செய்வதற்கு அதன் அக்கம் பக்கத்திலுள்ள நாடுகள் எல்லாம் அதற்கு ஸ்நேகமாயிருக்க வேண்டும்; ஏனென்றால் அதற்குள்ள கடலானது நாலாபக்கங்களிலும் மற்ற தேசங்களால் அடைபட்டுக் கிடக்கின்றது ; ருஷியா, ஸ்வீடன், நார்வே, டென்மார்க், ஹாலண்ட், பெல்ஜியம், இங்கிலாந்து முதலான தேசங்களின் நட்பு இல்லாவிட்டால், ஜெர்மனிக்கு வர்த்தகம் நின்றே போய்விடும். அதன் பால்டிக் கடற்படையும் சுற்றியுள்ள தேசங்களை யெல்லாம் தாண்டிக்கொண்டு தான்வேறு தேசத்தைப் படையெடுக்கச் செல்லவேண்டும். இந்த நிர்ப்பந்தத்தை யறிந்து தான் சமீபத்தில் ஜெர்மனியர்கள் பால்டிக் கடலுக்கும் வடகடலுக்கும் நடுவில் தங்களுடைய ராஜ்யத்தில் வடமேற்கில் குறுக்கே யுத்தக்கப்பல்கள்செல்லும்படியாக ஆழமும் அகலமுமுள்ளதாய் கீல் வாய்க்கால் என்ற ஒரு பெரிய வாய்காலை வெட்டித் தயார்படுத்திக் கொண்டார்கள். இன்னும் வடகடலில் வில்ஹெம்ஸ் ஹாவன் என்னும் இடத்தில் கப்பற் படையைப் பலப்படுத்திப் பெருக்கிக்கொண்டனர். வடகடலிலுள்ள ஹேலிகோலாண்ட் என்னும் தீவில் கோட்டை, கொத்தளங்கள் அமைத்துக் கப்பற்படைக்கு அந்தத்தீவை ஆஸ்தானமாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்று சொல்லப் படுகிறது.

இங்கிலாந்துதான் உலகில் இப்பொழுது முதன்மையான சக்கராதி பத்தியத்தை வகிக்கிறது. இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, அயர்லாந்து இத்தனை தேசங்களும் சேர்ந்து பிரிட்டிஷ் தீவுகள் என்று சொல்லப்படும். இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து இம்மூன்று தேசங்களும் ஒரே தேசமாக ஒரு தனித்த தீவாயிருக்கின்றது. இந்தத் தீவுக்குப் பெயர் க்ரேட் பிரிட்டன் என்று சொல்லப்படும். ஐரோப்பாவில் மிகப் பெரிய தீவு இதுவே. இதன் விஸ்தீர்ணம் 90,000 சதுரமைல். அயர்லாந்து

என்பது க்ரேட் பிரிட்டனுக்கு மேற்கே ஐரிஷ் கடலால் பிரிக்கப்பட்டுத் தனித்த ஒரு தீவா யிருக்கின்றது. அயர்லாந்தின் விஸ்தீரணம் 32,500 சதுரமைல். க்ரேட் பிரிட்டனுடைய ஜனத்தொகை 4,09,13,506; அயர்லாந்தினுடைய ஜனத்தொகை 43,83,608. ஆகவே, பிரிட்டிஷ் தீவுகளின் ஜனத்தொகை 4,52,97,114. ஐரோப்பாவில் பெல்ஜியத்தைத்தவிர ஜன அடர்த்தி மிகுந்த தேசம் இங்லாந்து தான். இந்த ஜனத்தொகையில் அநேகமாக ஆறில் ஒரு பங்கு ஜனங்கள் லண்டன் மாநகரில் மாத்திரம் வசிக்கின்றன. க்ரேட் பிரிட்டனில் சமாதான காலத்தில் 2,39,000 போர் வீரர்களும் யுத்த சமயத்தில் 3,80,000 போர்வீரர்களும் உண்டு; இப்படையைத்தவிர, இங்கிலாந்துக்கு இந்தியாவில் சமாதான காலத்தில் ஒரு லட்சத்து ஐம்பத்தொன் பதினுயிரம் போர்வீரர்களும் யுத்தசமயத்தில் ஒரு லட்சத்துத் தொண்ணூற்றையாயிரம் போர்வீரர்களும் உண்டு. நூற்றுக்கணக்கான பீரங்கிகளும் உண்டு. இங்கிலாந்திலிருக்கும் இரும்புக் கனிகளும் நிலக்கரிச் சுரங்கங்களும்அந்தராஜ்யத்திற்குஅஸ்திவாரங்களா யிருக்கின்றன. இங்கிலீஷ்காரர்கள் வியாபார சாமர்த்தியம் மிகுந்தவர்கள். வியாபாரவிருத்தியினுலேயே அவர்கள் உலகில் முதன்மையான ஜனசமுகமாய்விட்டார்கள். அவர்களுடைய புத்திசாமர்த்தியமும் மிகவும் மெச்சத் தக்கது. அவர்கள் புத்தி சாமர்த்தியத்தினுலேயே எதிரிகளை ஜெயிக்கிருர்கள்; புத்தி சாமர்த்தியத்தினுலேயே உலகை ஆண்டு வருகிருர்கள். இங்கிலாந்து தேசமானது இயற்கையினுலும் செயற்கையினுலும் மானிட ராசிகளுக்கு மனோஹரமான காட்சியா யிருக்கின்றது. உலகம் முழுதுமே லண்டன்மாநகரத்தை அஸ்திவாரமாகக்கொண்டு, சகல வியாபாரங்களும் வியவகாரங்களும் நடைபெருகின்றன. இங்கிலாந்துக்குக்கரைப் படை அதிகமில்லையெனினும், கடற்படைமுதல்தரமானது. கப்பற்படையானது இங்கிலாந்தைச் சுற்றிலும் அணிவகுக்தப்பட்டிருக்கிறது. முதலாவது அணியில் முப்பதுக்குக்

குறையாமல் பயங்கரப் போர்க்கப்பல்களும் இருபதுக்குக் குறையாமல் சிறு யுத்தக்கப்பல்களும் சுரங்கங்களைச் சோதித்து எடுப்பதற்கு ஆறுபீரங்கிப் படகுகளும் ராஜாங்கக் கொடியைக்கொண்டு செல்வதற்கு ஒரு பெரும் போர்க்கப்பலும் அப்பெரும் போர்க்கப்பலுடன் ஒரு நாசகாரியும் ஒரு சாதாரணச் சிறு யுத்தக்கப்பலும், கப்பல்கள் அடிபட்டுவிட்டால் செப்பனிடுவதற்காக இரண்டு கப்பல்களும் ஒவ்வொரு கப்பற்படையிலும் எட்டு நாசகாரிகளும் உண்டு. இவற்றைத் தவிர, நான்கு சிறு யுத்தக்கப்பல்களால் தலைமை வகித்து நடத்தப்படும் நான்கு நாசகாரிக் கூட்டங்கள் உண்டு. மூன்று நாசகாரிக் கூட்டங்களில் ஒவ்வொன்றிலும் 20 நாசகாரிகள் உண்டு; இன்னொரு கூட்டத்தில் 15 நாசகாரிகள் உண்டு. முதல் அணியில் நிற்கும் பெரும் போர்க்கப்பல்கள் 13.5 அங்குல பீரங்கிகளையும் 12 அங்குல பீரங்கிகளையும் இன்னும் அநேகதரத்தில் பல பீரங்கிகளையும் வைத்துக்கொண் டிருக்கின்றன. இதே மாதிரியாக இரண்டாவது, மூன்றாவது அணிகளும் உண்டு. உலகத்தில் கடற்படையில் முற்பட்டது இங்கிலாந்து தேசம்தான். இங்கிலாந்து சுற்றிலும் சமுத்திரத்தினால் சூழப்பட்டிருக்கிறது. ஆகையால் இங்கிலாந்து கப்பற்படையையே பிரதானமாகக் கொண்டுள்ளது.

அத்தியாயம் 4.

ஜெர்மனியின் நோக்கம்.

சென்ற முப்பத்தைந்து வருஷங்களாக ஜெர்மனி தனது கப்பற்படைகளை விருத்திசெய்து கொண்டேவந்தது; தனது கரைப்படைகளைச் சீர்திருத்தம்செய்து உலகத்தில் முதன்மையாக நிறுத்திவிட்டது. புதிய, புதிய பீரங்கிகளையெல்லாம் கண்டு பிடித்துக்கொண்டேவந்தது; ஆகாயக்கப்பல்களை அதிகரித்துக் கொண்டே வந்தது. ஜெர்மனியில்

உள்ள ஜனங்கள் தங்களுடைய தேசத்தின் பெருமையையும் வீரத்தனத்தையுமே புகழ்ந்து மற்றத்தேசத்தினர்களை இகழ்ந்தார்கள். பிரபுக்கள் முதல் ஏழை வரையில் எல்லோரும் ஏதோ ஒரு முக்கியமான, பெருமையானகார்யத்தைத் தாங்கள் செய்து வருவதாக நினைத்துச் சந்தோஷமடைந்தார்கள். 1870-1-ல் ஜெர்மனி பிரெஞ்சுக்காரருடன் செய்த அகோர யுத்தத்திற்குப் பிறகு, இவ்விதமாக ஜெர்மனி மெல்ல மெல்ல மாறுதலடைந்து வந்தது. ஜெர்மனியின் சுற்றுப்பக்கங்களிலிருந்த தேசங்கள் ஜெர்மனி திடீரென்று அடைந்து வரும் மாறுதலைப்பற்றி ஆராய்ந்து கவனிக்கத் தொடங்கின.

ஜெர்மனியும் உலகமெங்கும் ஏகச்சக்ராதிபத்தியம் வகித்து இங்கிலாந்தைப் பின்னடையச் செய்யவேண்டுமென்ற நோக்கமே ஜெர்மனியினுடைய மாறுதல் கட்டுக் காரணம். இடைவிடா முயற்சியினாலும் மனந்தளராஊக்கத்தினாலும் ஒற்றுமையினாலும் ஜெர்மனியர்கள் உலகத்தின் பலபாகங்களுக்கும் வேண்டிய தொழில்களைச்செய்து உலகமெங்கும் தங்களுடைய வியாபாரத்தைநிலைநிறுத்தினார்கள் இந்த வியாபாரத்தினால் ஜெர்மனி நாளுக்குநாள் செழித்து ஐஸ்வர்யத்தில் பெருத்து வந்தது. ஐஸ்வர்யம் உண்டாகவே, உலகத்தில் ஆங்காங்கு அதன் வியாபாரத்திற்கு ஆஸ்தானங்களாகச் சில இடங்கள் வேண்டிவந்தன. இதுவரையில் வெளியுலகத்தைப் பற்றிக் கவனியாமலிருந்த ஜெர்மனி இப்பொழுது எந்தத்தேசத்தில் எந்த இடத்தைக் கைப்பற்றலாம் என்று எண்ண ஆரம்பித்து விட்டது. தவிர, இங்கிலாந்து ஒரு சிறிய தீவு; இங்கிலாந்தின் போர் வீரர்கள் சம்பளத்திற்கு உழைக்கும் சேவகர்கள்; தானோ ஐரோப்பாக் கண்டத்தின் மத்தியில் அழகியநதிகள் பாயப்பெற்று அதிகாரம் செலுத்த யோக்கியதையுள்ள, பராக்கிரமம் மிகுந்த தேசம்; தனது போர்வீரர்களோ தேச நன்மையை நாடித் தமது உயிரைவிடத்துணியும் குடிகள்; இப்படி யெல்லாமிருக்க இங்கிலாந்தை இவ்வுலகில் முதன்மை செலுத்த

எவ்வாறு விடலாம்? என்று ஜெர்மனி இங்கிலாந்தின் மீது பொருமை கொள்ள ஆரம்பித்து விட்டது.

இந்தப்பொருமை தான் இப்பொழுது நடக்கும் பயங்கரமான யுத்தத்திற்கு ஆதிகாரணம். இந்தப் பொருமையினுல் வெளியுலக விஷயங்களில் பிரவேசிப்பதற்குச் சமயம் பார்த்துக்கொண்டேயிருந்தது. 1895-வது வருஷத்தில் சீனதேசத்துக்கும் ஜப்பான் தேசத்துக்கும் நடந்த யுத்தம் முடிவுற்ற பொழுது, ஜப்பான் அடைந்த வெற்றியின் பலனுக அது சீனதேசத்தினிடமிருந்து சில இடங்களைப் பிடித்துக் கொண்டு விட்டது. அப்பொழுது ஜெர்மனி ருஷியாவுடன் சேர்ந்து கொண்டு ப்ரான்ஸையும் சேர்த்துக் கொண்டு ஜப்பான் ஜெயித்த அநேக இடங்களை அதுவிட்டுவிடவேண்டுமென்று கட்டாயப் படுத்திற்று. இதுதான் ஜெர்மனி முதலாவதாக முற்பட்டமுயற்சி. சீனதேசம் களிப்படைந்து ஜெர்மனிக்கு வந்தனம் கூறிற்று. ஆனுல், சீனதேசத்தார் இரண்டு ஜெர்மன் பாதிரிகளைக் கொன்று விட்டார்கள் என்று 1897-வது வருஷத்தில் ஜெர்மனி சீனதேசத்திலிருந்து கயாச்சோவைப் பிடுங்கிக் கொண்டது.

இம்மாதிரியாகவே அமெரிக்காவில் ஸாமோவா என்னும் இடத்தையும் ஆப்பிரிக்காவில் ஆங்காங்கு சிறுசிறு பிரதேசங்களையும் கைப்பற்றிக்கொண்டது. தென்னுப்பிரிக்காவில் போயர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் குட்டிக் கலகங்களை யுண்டாக்கி விட்டுத் தென்னுப் பிரிக்கா யுத்தத்திற்கும் காரணமாயிருந்தது ஜெர்மனிதான் தென்னுப்பிரிக்கா யுத்தம் நடந்து கொண்டிருந்த பொழுது, ஜெர்மன் சக்கரவர்த்தி பிரான்ஸினிடத்திலும் ருஷியாவினிடத்திலும் மெல்லக் கலந்துபேச ஆரம்பித்தார். ஆனுல் பிரான்ஸாவது ருஷியாவாவது ஜெர்மனியின் தூண்டுதல்களுக்கு இணங்குவதாயில்லை. ஆதலால் ஜெர்மன் சக்கரவர்த்திக்கு இங்கிலாந்தினிடத்தில் எவ்வளவு பொருமையிருந்தபோதிலும், சமயம் நல்ல்சமயமென்று தாம் நினைத்தபோதிலும் வாய்மூடிமௌன

னமாயிருக்கும்படி வந்துவிட்டது. தாம் தனிமையில் இங்கிலாந்தினுடைய கடற்படையின் பலத்தைப் பரிசோதிக்க முடியுமா? என்பது அவருக்குச் சந்தேகமாய் விட்டது. ஆனால் ஜெர்மன் சக்கரவர்த்தியினுடைய முயற்சியால் ஜெர்மனியர்களுக்குள் ஆங்கிலேயர் மீது வெறுப்பும் விரோதமும் உண்டாய் விட்டது. தென்னாப்பிரிக்கா யுத்தத்தைப் பற்றிப் புஸ்தகம் எழுதியிருக்கும் ஏ. கானன்டாய்ல் என்னும் ஆசிரியர் அப்பொழுது பின்வருமாறு எழுதி யிருக்கிறார்:—"நாம் ஜெர்மனியப் பத்திரிகைகளிடத்திலிருந்தும் ஜெர்மனிய ஜனங்களிடத்திலிருந்தும் அடைந்த விரோதத்தையும் நிந்தனையையும் போல அவ்வளவு விரோதத்தையும் நிந்தனையையும் வேறெங்கிருந்தும் அடைய வில்லை."

பிரான்ஸும் ருஷியாவும் ஜெர்மனியுடன் சேர்வதற்கு இணங்காததினால், ஜெர்மனி "இருக்கட்டும்; முதலாவது பிரான்ஸையும் ருஷியாவையும் ஒருகைபார்த்துக்கொண்டு பின்னர் இங்கிலாந்தையும் கவனிப்போம்; என்று கருதிக்கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்து விட்டது. இதன் மர்மங்களை மற்றதேசங்கள் அறிந்து கொண்டன. ஆனால் உடனே பிரான்சும் ருஷியாவும் ஒன்று சேர்ந்துகொண்டு உடன்படிக்கை செய்துகொண்டன. ஆனால் பிரான்ஸும் ருஷியாவும் சேர்ந்து கொண்டது ஜெர்மனிக்கு எவ்வளவு கெடுதலோ அவ்வளவு இங்கிலாந்துக்கும் கெடுதல்தான். ஆனால் பிரான்ஸ் இங்கிலாந்துடன் 1904-ம் வருஷத்தில் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டுவிட்டது. ஜெர்மனிக்குக் கோபம் மிகுந்த போதிலும் என்ன செய்யலாம்? மோராக்கோ விஷயமாக பிரான்ஸுடன் வழக்கிட ஆரம்பித்தது; ஆனால் இங்கிலாந்து தலையிடவே, ஜெர்மனி அடங்கிவிட்டது. 1907-ம் வருஷத்தில் ருஷியாவும் இங்கிலாந்துடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. ஜெர்மனியின் மனமானது இன்னும் அதிகமாகக் கலங்கி விட்டது.

ருஷியா ஆசியாக் கண்டத்தில் ஸைபீரியா, மங்கோலியா இந்தப் பிரதேசங்களில் தனது மனத்தைச் செலுத்திக் கொண்டிருக்க, ஜெர்மனி மெல்லத் துருக்கியைக் கைக்குள் போட்டுக்கொண்டது. 1898-வது வருஷத்தில் துருக்கி தேசத்துக்கு அப்துல்ஹமீது கான் சுல்தானாயிருந்தபொழுது, ஜெர்மன் சக்கரவர்த்தி அவரைப் போய்ப்பார்த்துவிட்டு வந்தார். கைத்தொழில் விஷயத்திலும், வியாபார விஷயத்திலும், ராஜ்யபார விஷயத்திலும், சைந்நிய விஷயத்திலும் துருக்கியில் ஜெர்மனியர்களே தலைமை வகிக்க ஆரம்பித்தார்கள். ஜெர்மன் சக்கரவர்த்தி துருக்கிப்படையைத் தமது படையென்றே சொல்வதுண்டாம். ஜெர்மனி ஆஸ்டிரியாவுடனும், இத்தாலியுடனும் சேர்ந்து ஓர் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. இந்தஉடன் படிக்கையின் பலத்தினால்தான் ஆஸ்டிரியா 1908-9-வது வருஷத்தில் போஸ்னியாவையும் ஹெர்ஸி கோவினாவையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. அப்பொழுது இந்தயுத்தம் ஆரம்பித்திருக்க வேண்டும்; ஏனென்றால் ருஷியா ஸெர்வியாவின் பக்கத்தில் பரிந்து நின்றுகொண்டு ஆஸ்டிரியா ஸெர்வியாவுக்கு நஷ்ட ஈடுகொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திற்று. ஆனால் ஜெர்மன் சக்கரவர்த்தி ஆஸ்டிரியாவுக்காக எழுந்திருக்கவே, ருஷியா பேசாமல் இருந்து விட்டது. இவ்விதமாக ஜெர்மனி மெல்ல மெல்ல வெளியில் வர ஆரம்பித்தது. சென்ற 15 வருஷங்களாக ஜெர்மனியின் கடற்படையும் அதிகரிக்க ஆரம்பித்தது. தென்னாப்பிரிக்கா யுத்தத்திற்கு முன், ஜெர்மன் சக்கரவர்த்தித் தனது கடற்படையை பலப்படுத்த ஆரம்பித்தார்; அப்பொழுது ஜெர்மனிய ஜனசமூகம் அதற்குஇடம் கொடுக்கவில்லை. தென்னாப்பிரிக்கா யுத்தத்தின்போது, அதாவது தென்னாப்பிரிக்காக் குடியரசுத் தலைவராயிருந்த க்ருகர் என்பவர் யுத்தத்திற்குக் கிளம்பி விட்டபொழுது, ஜெர்மன் சக்கரவர்த்தி "நமக்கு சக்தி மிகுந்த ஒரு ஜெர்மனியக் கடற்படை மிகவும் அவசியமாயிருக்கிறது. நான் ராஜாங்கம் செய்ய ஆரம்பித்த

பொழுது நான் அடிக்கடி வற்புறுத்திய கடற்படையின் பெருக்கம் மறுதளிக்கப் படாமலிருந்தால், இன்று நமது நிலைமை எவ்வளவு வேருயிருக்கும்?" என்ருர். உடனே 1900-ம் வருஷத்தில் கடற்படைச் சட்டமொன்று கொண்டு வரப்பட்டது. கடற்படையைப்பற்றிய இரண்டாவது சட்டம் 1906-லும் மூன்ருவது 1908-லும், நான்காவது 1912-லும் கொண்டுவரப்பட்டன. கடற்படை மிகவும் நன்ருகப் பலப்படுத்தப்பட்டு விட்டது.

1912-வது வருஷத்தில் பால்கன் யுத்தம் நடந்தது. அதற்கு முன் திரிப்போலி யுத்தம் நடந்தது. திரிப்போலி யுத்தத்தில் துருக்கியை ஜெர்மனியுடனும் ஆஸ்டிரியாவுடனும் உடன்படிக்கை செய்து கொண்டிருந்த இத்தாலி எதிர்த்தது. அப்பொழுது ஜெர்மனி அந்தரங்கத்தில் இத்தாலிக்கு அநுகூலமாகவே யிருந்தது. பால்கன் யுத்தங்களிலும் துருக்கி மிகவும் பலஹீனப்பட்டு விட்டதால் ஜெர்மனி துருக்கிக்குள்ளேயே இருந்துகொண்டு அதைஏமாற்றி மோசம் செய்து தன்னுடைய அதிகாரத்தை அங்கு செலுத்த ஆரம்பித்தது. ஆனல் ஜெர்மனி தன்னுடைய கார்யங்கள் ஜெயமாவதற்கு பெயருக்காவது துருக்கி யென்று ஒன்றுஐரோப்பாவில் இருக்கவேண்டியது அவசியமாயிற்று. ஆதலால் துருக்கிக்கு விரோதமாகவே கார்யங்களெல்லாம் முடிவதைக்கண்டு, ஜெர்மனி இங்கிலாந்துடன் சேர்ந்துக் கொண்டு பால்கன் யுத்தங்கள் சீக்கிரமாக முடிவை யடைவதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்தது.

சைந்நிய பலத்தை ஜெர்மனி விருத்திசெய்ய ஆரம்பிக்கவே ஜெர்மன் பத்திரிகைகள் பிரான்ஸின் மீதும் ருஷியாவின்மீதும் கோபத்தைக்காட்டத்தலைப்பட்டன. ஜெர்மனி துருக்கியைக் கைக்குள் போட்டதற்குக்காரணம் என்னவென்ருல், அதற்கு இரண்டுகாரணங்களுண்டு என ஊஹிக்கப்படுகிறது. ஒன்று, ஜெர்மனிவேறுதேசங்களுடன் போர் புரியும்படி நேர்ந்துவிட்டால் உடனே துருக்கியைத்தூண்டிவிட்டுவிடலாம்,துருக்கி சுல்தான் உலகத்திலுள்ள முஹ

ம்மதியர்களுக் கெல்லாம் தலைவராகையால் உலகிலுள்ள முஹம்மதியர்கள் அனைவரும் கிளம்பிவிடுவார்கள்—இந்த எண்ணத்தில் இப்பொழுது ஜெர்மனி ஏமாந்து போய் விட்டது—இன்னொன்று, தனது வியாபாரத்திற்குக் கடற் பாதை சௌகர்யமாயில்லாததால்; ஆசியாக் கண்டத்துச் செழித்த தேசங்களுடன்வியாபாரம செய்வதற்கு ஐரோப் பிய துருக்கி வழியாக சின்ன ஆசியாவுக்கும் அங்கிருந்து மற்றதேசங்களுக்கும் கரைப்பாதை யொன்றை ஸ்திரப் படுத்திக் கொள்ளலாம் என்பதே. இவ்விரண்டு நோக்கங் களுடனும் ஜெர்மனி துருக்கியை ஏமாற்ற ஆரம்பித்திருக் கிறது; ஜெர்மனியின் முதலாவது நோக்கம் நிறைவேற வில்லை; அதுதானே ஏமாந்து விட்டது.

ஆதலால் இவ்வளவு ஆழ்ந்த ஆலோசனை யுடனும் ஆங்காரத்துடனும் பொறுமையுடனும் ஜெர்மனி இப்பொ ழுது ஆஸ்டிரிய இளவரசரின் கொலையை ஒருகாரணமாகக் கொண்டு, தான் நெடுநாளாகக் கொண்டிருந்த குரோதத் தைக் காட்ட ஆரம்பித் திருக்கிறது.

அத்தியாயம் ௫.

ஜெர்மனியர்களின் படையெடுப்பு.

1914ஹூ ஜுலைமீ 25-ம்தேதி ஆஸ்டிரியாபடைசேர்க்க ஆரம்பித்தது; 28-ம்தேதி ஸெர்வியாவுடன்யுத்தம் செய்வ தாகக் கூறிவிட்டு அன்றையதினமே ஸெர்வியர்களின் பிர தான பட்டண மாயிருந்த பெல்க்ரேட் என்னும் நகரைத் தாக்கிற்று. இச்செய்கை ருஷியச் சக்கரவர்த்தியை படை சேர்க்குமபடி செய்தது. 29-ம் தேதி ருஷியச் சக்கரவர்த்தி ஆஸ்டிரியாவுக்கு நேராயுள்ள தமது நான்கு ஜில்லாக்களிலும் 13 படைகளைச் சேர்க்கும் படி உத்தரவு செய்து விட்டார். ஸெர்வியாவுடன் யுத்தம் ஆரம்பிப்பதற்கு ஆஸ்டிரியா தனது முழுப்

படையையும் சேர்க்கவில்லை. இப்பொழுது ருஷியா படை சேர்ப்பதை யறிந்த வுடனே, ஆஸ்டிரியா தனது முழுப்படையையும் சேர்க்க ஆரம்பித்து விட்டது. இதை யறிந்த ருஷியா 30-ம் தேதி தனது முழுபபடையும் சேர்க்க உத்தரவு கொடுத்து விட்டது. 31-ம் தேதி ருஷியாவின் பிரதான நகரமாகிய ஸேன்ட் பீட்டர்ஸ்பர்க் (இப்பொழுது பீட்ரோக்ராட்) டில் இருந்த ஜெர்மன் தூதர் ருஷியா பன்னிரண்டு மணி நேரத்திற்குள் அதன் படைகளைக் கலைத்து விடவேண்டு மென்றும் அப்படி ருஷியா செய்யாவிட்டால் ஜெர்மனி தனது கரைப் படையையும் கடற் படையையும் சேர்க்க உத்தரவு கொடுத்து விடு மென்றும் ருஷியாவிடத்தில் கூறினர். ருஷ்யா இதற்கு பதில் கொடுக்காததினுல் ஆகஸ்டு மீ முதல்தேதி மாலை 5-15 மணிக்கு ஜெர்மனி தனது படைமுழுதையும்சேர்க்க ஆரம்பித்துவிட்டது. அதேதேதியில் மாலை 7.30 மணிக்கு ருஷியாவிலிருந்த ஜெர்மன் தூதர் ருஷியாவின் அந்நிய நாட்டு மந்திரியினிடத்தில் ஜெர்மனி ருஷியாவுடன் யுத்தம் செய்யப் போவதாகக் கூறிவிட்டார். இச்செய்தி கேட்ட பேர்லின் ஜனங்களும் ஸேன்ட்பீட் டர்ஸ்பர்க் ஜனங்களும் கொண்டாடி ஆரவாரித்தார்கள். ருஷியா-ஜப்பானியயுத்தம் நடந்த பொழுது கூட ருஷியாவில் இவ்வளவு உற்சாகமும் ஆத்திரமும் இருந்ததில்லை. 1812-வது வருஷத்தில் நெப்போலியன் ருஷியாவை எதிர்த்த காலத்தில்தான் ருஷியர்கள் தேசாபி மானத்தினுல் கிளம்பினுர்கள். அதற்குபின் இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் எத்தனையோ யுத்தங்கள் ருஷியா செய்திருந்த போதிலும் இப்பொழுது ருஷியர்களுக்கு உண்டான உற்சாகத்தையும் ஊக்கத்தையும் போல அப்பொழு தெல்லாம் காணப் படவில்லை.

ஜுலைமாதம் 25—ம்தேதி சமயத்திலேயே ஜெர்மனி யுத்தத்திற்குத் தயார் செய்ய ஆரம்பித்துவிட்டது. 26-ம் தேதியன்று ஜெர்மனிய பிரதான சைந்நியாதிபதி பெர்லினுக்குத் திரும்பி வந்துவிட்டார்; சைந்நிய உத்தியோகஸ்

தர்கள் தங்களுடைய வேலைகளை மும்முரமாகப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். ஜெர்மனியில் சைந்நிய அதிகாரிகளுக்கு அதிக ஸ்வதந்திரங் களுண்டு; ஆதலால், படை சேர்க்கும்படி உத்தியோக முறையில் உத்தர விடப்படாவிட்டாலும், சைந்நிய அதிகாரிகள் ஒளிவு மறைவாகப்படை சேர்க்க ஆரம்பித்து விட்டார்கள். 28-ம்தேதி ஜெர்மன் படைக்கப்பல்கள் கீல் என்ற துறைமுகத்திலும் வில்ஹெறம்ஸ்ஹாவன் என்ற துறைமுகத்திலும் ஒன்று சேர்க்கப்பட்டன என்று சொல்லப்பட்டது. 31-ம் தேதி ஜெர்மன் படைகள் பிரெஞ்சு எல்லைக்குச் சமீபத்தில் வந்துவிட்டன. ஜூலை மாதக்கடைசிக்குள்ளாக ஜெர்மனியர்களுடைய சைந்நியங்களில் எட்டுபிரான்ஸைபடை யெடுக்கத்தயாராயிருந்தன என்று பிரெஞ்சுக்காரர்கள் நினைத்தார்கள். பின் நடந்த சங்கதிகளால் இவ்வாறு பிரெஞ்சுக்காரர்கள் நினைத்தது சரி யென்று வெளியாய் விட்டது. ஆகஸ்டுமீ 5-ம் தேதி யன்று லீஜ் கோட்டையை ஜெர்மனியர்கள் தாக்கிய பொழுது அவர்கள் புதிதாக சேர்த்த படைகளில் இரண்டு மூன்று இருந்தன. ஆகஸ்டுமீ 2-ம் தேதி ஜெர்மனியர்கள் லக்ஸம்பர்க் தேசத்தில் நுழைந்தார்கள்; இரண்டு நாட்களுக்குப்பின் பெல்ஜியத்திற்குள் நுழைந்தார்கள்.

பிரான்ஸ் தனது காவற் படைகளைத் தனது எல்லைக்குள்ளேயே நிறுத்திக்கொண்டு, ஜூலைமீ 30-ம் தேதி தான் எல்லைப்படைகளைச் சேர்க்க ஆரம்பித்தது. ஜெர்மனிருஷியாவுக்குத் தீர்மானமாகத் தெரிவித்ததை யறிந்த பிறகு தான் பிரான்ஸ் தனது படைகளை யெல்லாம் சேர்க்கும்படி உத்தரவிட்டது. இங்கிலாந்து இந்த யுத்த விஷயமாக என்ன நினைத்திருந்தது என்பதை பிரான்ஸ் ஆகஸ்டுமீ 2-ம் தேதி வரையில் அறியவில்லை. ஆகஸ்டுமீ 2-ம் தேதி இங்கிலாந்தின் அந்நிய நாட்டு மந்திரியாகிய ஸர் எட்வர்ட் க்ரே என்பவர் "ஜெர்மன் கடற்படையானது பிரெஞ்சுக் கடற்கரைகளையாவது கப்பல்களையாவது எதிர்ப்பதற்கு

இங்கிலீஷ் வாய்க்காலுக்குள்ளாவது வடகடலின் வழியாக வாவதுவருமானால் பிரிட்டிஷ் கடற்படை தன்னாலான ரட்சையெல்லாம் கொடுக்கும்" என்று பிரெஞ்சு தூதரிடத்தில் உறுதிமொழி கூறினர். இந்த சங்கியானது இங்கிலாந்திலும் இங்கிலீஷ் சக்கராதிபத்தியம் முழுதிலும் உற்சாகத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது; ஜெர்மனியர்களுடைய தயவில் பெல்ஜியம் இருக்கும்படியும் ஆங்கிலேயர் விடமாட்டார்கள் என்ற சங்கதியையும் பிரான்ஸ் அறிந்துகொண்டது. ஆதலால் பிரான்ஸுக்கு அற்பசொற்ப மிருந்த கவலையும் நீங்கிவிட்டது. ஆகஸ்டுமீ 4-ம் தேதியன்று பிரிட்டிஷ் சக்கராதி பத்தியத்தின் வல்லமை முழுதும் ஜெர்மனிக்கு விரோதமாகக் கிளம்பியிருக்கின்றது என்று உலகம் முழுதும் அறிந்துவிட்டது.

இங்கிருந்து தான் சரியான யுத்தம் ஆரம்பம் ஆகின்றது. இங்கிலாந்து ஜெர்மனிக்குத் தீர்மானம் எழுதிவிட்ட நாளிலேயே ஜெர்மனி பெல்ஜியத்துடனும்பிரான்ஸுடனும் யுத்தம் ஆரம்பித்திருப்பதாகக் கூறிவிட்டது. இப்படி ஜெர்மனி கூறுவதற்கு முன்னமேயே, அதன் படைகள் பெல்ஜியத்திலும் பிரான்ஸிலும் புகுந்திருந்தன. இப்பொழுது இந்த இரண்டு தேசங்களுக்குள்ளும் ஜெர்மன் படைகள் தைர்யமாக நுழைய ஆரம்பித்தன. ஆகஸ்டுமீ 5-ந்தேதி லீஜ் கோட்டையானது தாக்கப்பட்டது; சுரங்கமிடுகின்ற ஒரு ஜெர்மன் கப்பல், கோனிகின் லூயிஸ் என்னும் பெயரையுடையது, வடகடலில் பிரிட்டிஷ் பீரங்கிகளின் சாமர்த்தியத்தால் அமிழ்த்தப்பட்டது. இப்பொழுது ஐந்து வல்லரசுகள் யுத்தகளத்தில் நின்றன; மேற்படைகளைச்சேர்த்து ஒரு கோடியே ஐம்பது லட்சம் ஜனங்கள் இப்பொழுது யுத்தத்தில் கைகலக்க ஆரம்பித்தார்கள்.

பிரிட்டிஷ் கடற்படையானது வடகடலில் பலமாய் ஒன்று சேர்ந்து நிற்கும்வரையில், ஜெர்மனியின்கடற்படை வெளியில் புறப்படத்துணியாது என்பது நிச்சயம். ஆதலால் கடற்படை யுத்தத்தைப் பற்றி ஒருவருக்கும் அவ்வ

ளவு கவலை ஏற்படவில்லை. ஜெர்மனியானது தனது இரு பக்கத்திலுமுள்ள இரண்டு தேசங்களுடன் போர்புரிய நேரிட்டுவிட்டதால்—இப்படி நேரிடுமென்று அது வெகு நாட்களாக அறிந்திருந்தது—ஜெர்மனி இவ்விரண்டு தேசங்களில் எந்த தேசம் சீக்கிரத்தில் யுத்தத்திற்குத் தயாராகாதோ, அந்த தேசத்தை விட்டு விட்டு, சீக்கிரத்தில் தயாராகக் கூடியதேசத்தைப் படையெடுத்து அடக்கித்தன்வசப்படுத்திக் கொண்டு, பின் மற்ற தேசத்தை ஒரு கைபார்க்கலா மென்று நினைத்தது. இவ்விரண்டு தேசங்களில் ருஷியாவானது மிகப்பெரியதாயும் போக்குவரவு கட்கு அதிகமாக வசதி யில்லாததாயும் இருப்பதாலும் ருஷியர்களுடைய படைகள் சேர்ந்து விட்டால், பின்னர் அப்படைகளை வெல்வது மிகக்கஷ்டமாகையாலும் ஜெர்மனியானது முதலில் பிரான்ஸைப் படையெடுக்க நிச்சயித்தது. தவிர, பிரான்ஸ் தனத்திலும் செல்வாக்கிலும் மிகுந்த தேசமாகையால், அதை ஜெர்மனி கைப்பற்றிக்கொண்டால், ஜெர்மனியின் யுத்தசமயத்தில் அதன்படைகளுக்கு மிகப் பெரிய ஆதாரமாய் விடும். இதுமாத்திர மன்று; சென்ற ஒரு நூற்றாண்டுக் குள்ளாக ஜெர்மனிய வீரர்கள் பிரான்ஸைக் கீழே தள்ளி மிதித்து பாரிஸுக்குள் மூன்று தரம் நுழைந்திருக்கின்றார்கள்; ஆதலால் அவர்கள் முன்னடைந்தஜெயத்தை மறுபடியும் ஞாபகப் படுத்தி அவர்களுடைய வீரத்தனத்தைக் கிளப்பிவிடுமாதலால், ஜெர்மனி பிரான்ஸையே முதலில் எதிர்ப்பதென்று நிச்சயித்து விட்டது.

இதற்காக, ஜெர்மனி தனது சைந்நியத்தில் ஐந்தில் நான்குபங்கை பிரான்ஸ்பக்கத்தில் அனுப்பி விட்டது; மிகுதி ஒருபங்கையும் ஆஸ்டிரியர்களுடைய சில சைந்நியங்களையும் ருஷியாவின்பக்கத்தில் அனுப்பிற்று. பிரான்ஸை எந்தப் பக்கத்தில் நின்று எதிர்த்து அந்த தேசத்தைப் படையெடுக்கலாமென்று ஜெர்மனி வெகு நாட்களாக ஆலோசனை செய்துகொண்டே யிருந்தது. பிரான்ஸின் கிழக்குப் பக்கத்தில், அதாவது ஜெர்மனியின் மேற்குப்

பக்கத்தில் பிரெஞ்சுக்காரர்கள் அடுக்கடுக்காக மிகப்பல மான கோட்டைகள்கட்டித் தங்களுடைய ராஜ்யத்தின் மீது எவரும் படையெடுக்க முடியாமல் தடுத்திருக்கிறார்கள். ஜெர்மனி பிரான்ஸைப் படையெடுப்பதற்கு இரண்டு வழிகளேயுண்டு. (1) பிரான்ஸின் கிழக்குஎல்லைப் புறத்தில் இருக்கும் பலமான கோட்டைகளையெல்லாம் தாக்கிக் கைவசப்படுத்திக் கொண்டு பிரான்ஸுக்குள் செல்லவேண்டும், அல்லது (2) பொதுத் தன்மையை வகித்திருக்கும் பெல்ஜியத்திற்குள் நுழைந்து பிரான்ஸின் வடகிழக்கு எல்லைவழியாக அந்த தேசத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். பிரான்ஸின் கிழக்கு எல்லையின் வழியாகப் படையெடுப்பதானால், ஜெர்மனிக்கு அளவற்றசேதம் உண்டாகும் என்பதில் சந்தேகமேயில்லை; ஆனால் ஜெர்மனிதான் அடையும் சேதத்திற்குக் கொஞ்சமும் பின்வாங்கவில்லை. பிரான்ஸில் கிழக்கெல்லையிலுள்ள கோட்டைகளையெல்லாம் கைவசப் படுத்துவதற்கு வெகு நாட்கள் செல்லும் ஜெர்மனிக்கு பிரான்ஸில் தாமதமாகும் ஒவ்வொரு நிமிஷமும் மிகவும் அபாயகரமானது; ஏனென்றால் ருஷியாவானது தனது லட்சக்கணக்கானபடைகளுடன் ஜெர்மனியின் கிழக்கு எல்லைக்குள் பிரவேசித்து விடும். ருஷியா படை சேர்ப்பதற்கு முந்தியே, ஜெர்மனி பிரான்ஸை அடித்து விட்டு, ருஷியாவின் பக்கத்தில்திரும்பி நிற்கவேண்டும். ஆதலால் பெல்ஜியத்திற்குள் நுழைந்து அதிவேகமாகச் சென்று பிரெஞ்சு சைந்நியங்களை அழித்து விடவேண்டுமென்று ஜெர்மனி நிச்சயித்துவிட்டது. உடனே லக்ஸம் பேர்க்என்னும் சிறு பிரதேசத்துக்குள் நுழைந்து பெல்ஜியத்திற்குள் நுழைந்து விட்டது. பெல்ஜியம் ஜெர்மன் சைந்நியங்கள் தன்னுள்ளே செல்ல விடுதற்கு மறுத்தபோது, ஜெர்மனி அதை எதிர்ப்பதாகப் பயமுறுத்திற்று.

வல்லரசுகளெல்லாம் தமக்கு விரோதமாக ஒன்று சேர்கின்றன வென்று அறிந்த ஜெர்மன் சக்கரவர்த்தி ஆகஸ்டு1ஆம் முதல் தேதி தமது அரண்மனையின் மேல் மாடி

ஜன்னலிலிருந்து தமது ஜனங்களைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்:—ஜெர்மனிக்கு ஓர் இருண்ட நாள் உண்டாயிருக்கிறது நமது கையில் கத்தியானது பலாத்காரமாகக் கொடுக்கப்படுகிறது. சமாதானம் என்பது முடியாத விஷயத்தில், கத்தியைக் கௌரதையுடன் உறையில்போடும்படியான விதத்தில் கத்தியை உபயோகிப்போமென்று நம்புகிறோம் யுத்தமானது ஏராளமான தற்பலிகளைக்கேட்கும்; ஜெர்மனியை எதிர்ப்பதென்றால் என்ன? வென்று நமது எதிரிகளுக்கு நாம் காட்டவேண்டும் கடவுளுக்கு முழந்தாளிட்டு நமது தைர்யம் முள்ள சைந்யத்திற்கு உதவி செய்யும்படி அவரைக் கேட்டுக் கொள்ளுங்கள்."

இவர் ஆரம்பிக்கும் பொழுதே "ஜெர்மனிக்கு ஓர் இருண்ட நாள் உண்டாயிருக்கிறது" என்றார். நிச்சயமாகவே, இது இருண்ட நாள்தான். இனிமேலும் அதற்கு இருண்ட நாட்களேதாம்.

அத்தியாயம் 6.

லீஜ் பிடிபட்டது.

வல்லரசுக ளெல்லாம் ஒன்றுட னொன்று முட்டிக்கொண்டு யுத்தம் செய்ய ஆரம்பிக்கவே, சிறிய அரசுகளாகிய ஸ்விட்ஸர்லாண்ட, ஸ்வீடன், துருக்கி, ஹாலன்ட், பெல்ஜியம் இவையெல்லாம் தாங்கள் பொதுவாயிருப்பதாக அறிவித்துக் கொண்டன; ஆயினும், இப்பொழுது யுத்தத்திற்குத் தயாராய் நின்று கொண்டிருக்கும் வல்லரசுகளுக்குப் பக்கத்தில் இச்சிறு தேசங்கள் இருப்பதால் எந்த சமயத்தில் என்ன நேருமோ? என்று பயந்து தங்களுடைய படைகளைச் சேகரித்துக் கொண்டு தயாராயிருந்தன. ஜெர்மனி தனது ஸ்வயகார்யம் பலிதமாகும் பொருட்டு, ஒருகட்சியிலும் சேராமல் பொதுவாக யிருந்த பெல்ஜியத்தின் மீது ஆக்கிரமிக்கவே, பெல்ஜியமும் படைகளைச்

சேகரித்துக் கொண்டிருந்ததினால் ஜெர்மனியை எதிர்த்து நிற்க முடிந்தது.

இங்கிலாந்து யுத்தத்தில் சேர்ந்து கொள்ளவே, ஜெர்மனியுடன் எதிர்த்து நிற்கும் அரசுகளுக்கு மிகவுங்கொண்டாட்டமாய் விட்டது. யுத்தத்திற்குத் துணிந்துவிட்ட தேசங்களின் தலைநகர்களில், ஜனங்களுக்கு உற்சாகமும் பூரிப்பும் அதிகரித்தது. தெருக்கள் தோறும் தேசகீதங்கள் பாடிக் கொண்டு சிறியோரும் பெரியோரும் சென்றனர். பேர்லினில் பொது ஜனங்கள் உற்சாக மிகுதியினால் கூட்டம் கூடி அந்நகரில் இருந்த ருஷியதூதரின் வாசஸ்தலத்திலும் பிரிட்டிஷ் தூதரின் வாசஸ்தலத்திலும் குட்டிக் கலகங்கள் செய்து, தங்களுடைய மனத்தில் வெகு நாட்களாகக் கொண்டிருந்த துவேஷத்தை இப்பொழுது காட்டிவிட்டார்கள். லண்டனிலும் பாரிஸிலும் ஸேண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலும் யுத்த சங்கதியினால் கொந்தளித்துக் கூட்டங்கள் கூடிய போதிலும் பெர்லினில் நடந்தது போல அவ்வளவு அலங்கோலங்கள் நடக்க வில்லை.

ஈஜிப்டின் காரியங்களை மேல் பார்த்து வந்த கிச்சனர் பிரபு ஈஜிப்டுக்குப் போகிறதாகத் தீர்மானித்து விட்டார் என்று ஆகஸ்டுமீ முதல்தேதி தந்திவந்தது. இப்பொழுது ராபர்ட்ஸ் பிரபுவுக்கு அப்புறம் யுத்த தந்திரங்களையும் சாதுர்யங்களையும் நன்றாக அறிந்தவர் கிச்சினர் பிரபு தான். ஆகையால் கிச்சினர் பிரபு ஈஜிப்டுக்குப்போகிறார் என்றதினால் இங்கிலாந்து இந்த யுத்தத்தில் சம்பந்தப்படமாட்டாது என்று ஊகிக்கப்பட்டது. ஆகஸ்டுமீ 3-ம் தேதியன்று அவர் டோவர் என்னும் துறை முகத்திலிருந்து ஈஜிப்டுக்குக் கப்பலேறினார். ஆகஸ்டுமீ 4-ம் தேதியன்று அவர் உடனே இங்கிலாந்துக்குத் திரும்பிவரவேண்டுமென்று ஆங்கிலேயர் அரசாங்கத்தார் தந்தியடித்து விட்டார்கள்; அவரும் அந்தநிமிஷமே திரும்பிவிட்டார். என்ன ஆச்சர்யம்! ஒரே நாளுக்குள் ஆங்கிலேயஜன சமுகமானது யுத்தம் ஆரம்பித்து விட்டது.

ருஷியச்சக்கர்வர்த்தி தமது ஜனங்கள் ஒரே மனிதனைப் போலக்கிளம்பி அகந்தை மிகுந்த ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக்களைத் தடுக்கவேண்டுமென்று ஒரு அறிக்கை செய்தார். லட்சக்கணக்கான ருஷியர்கள் சைந்நியத்தில் சேர்ந்து விட்டார்கள்.

ஜெர்மனியர்கள் பால்டிக் கடலில் உள்ள ஹாலண்ட் தீவுகளைக் கைப்பற்றிக்கொண்டார்கள். ஹாலண்ட் தேசம் தான் பொதுவாயிருக்க ஜெர்மனி சம்மதிக்குமா? என்று கேட்டது. ஜெர்மனி ஹாலண்டின் விஷயத்தில் பிரவேசிப்பதில்லை யென்று வாக்கு அளித்துவிட்டது. அங்கு ஜெர்மனிக்குக் கார்யமிருந்தால் தானே, ஹாலண்டுடன் யுத்தத்திற்குச் செல்லவேண்டும்.

ஆண்ட் வெர்ப்பில் யுத்த சட்டம் பகிரங்கபடுத்தப் பட்டது, ஆண்ட் வெர்ப்பிலிருந்தும் ப்ரஸ்ஸெல்ஸ் நகரத்திலிருந்தும் ஜெர்மனியர்கள் வெளியில் போய்விட வேண்டுமென்று ஓர் உத்தரவு செய்யப்பட்டு விட்டது.

பெல்ஜியர்கள் தேசாபிமானத்தினல் தூண்டப்பட்டுக் கோபம் மிகுந்து ஜெர்மனியர்களை எதிர்க்க ஆரம்பித்தார்கள். பெல்ஜிய அரசாங்கத்தார் "நமது அகந்தை மிகுந்த அண்டை வீட்டுக்காரன், நாம்நமதுகௌரவத்தை விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டபடியால், உடன்படிக்கைப் பத்திரத்தைக் கிழித்தெறிந்து நம்மீது ஆக்கிரமித்திருக்கிறான். நமது போர்வீரர்கள் அவர்களுடையபரிசுத்தமான கார்யத்தில் ஜெயமடைவார்களென்றுநம்புகிறோம்" என்று ஒரு பஹிரங்க அறிக்கை செய்தனர். ஆகஸ்டுமீ 5-ம் தேதி லீஜ்கோட்டை தாக்கப்பட்டது. லீஜ் கோட்டை என்று நாம் ஒருமையில் கூறிவிட்ட போதிலும் சுற்றுக் கோட்டைகளால் காக்கப்பெற்ற லீஜ் நகரத்தையே குறிக்கிறோம். லீஜ் நகரமானது தன்னைச் சுற்றிலும் பதினன்கு கோட்டைகளால் சூழப்பட்டிருக்கிறது; ம்யூஸ் என்னும் நதிக்கரையிலுள்ளது. இந்நகரத்தின் கோட்டைகளும் நாமூர் நகரத்தின் கோட்டைகளும் ஆண்ட்வெர்ப் கோட்

டைகளும் பெல்ஜியத்தில் மிகப்பலமானவை யென்றும் சாதாரண சைந்நியங்களால் அசைக்க முடியாதவை யென்றும் பிரசித்தி பெற்றிருந்தன. ஜெர்மனியர் களுக்கும் பிரெஞ்சுக்காரர் களுக்கும் சென்ற 40 வருஷங் களாக ஜென்மப் பகையுண்டா யிருந்தமையாலும் பிரெஞ் சுக் காரர்கள் தங்களுடைய கிழக்கு எல்லையை கோட்டை களாலும் கொத்தளங் களாலும் பலப்படுத்திக் கொண்டு விட்டதாலும் ஜெர்மனியர்கள் எப்பொழுதாவது பிரான் ஸைப்படை யெடுக்க நோக்கம் கொண்டால் லக்ஸம்பர்க், பெல்ஜியம் இந்த தேசங்களின் வழியாகத்தான் ஜெர்மனி யர்கள் செல்வார்கன் என்று பெல்ஜியர்கள் கருதி அங்ஙு னம் ஒருவேளை ஏற்படுகின்ற அந்நியர்களின் ஆக்கிர மிப் புக்களைத் தடுக்க வேண்டும் தங்களுடைய தேசம் காக்கப் படவேண்டும் மென்றும் லீஜ், நாமூர், ஆண்ட்வேர்ப் இம் மூன்று இடங்களிலும் பலமான சுற்றுக் கோட்டைகள் பல கட்டிக்கொண்டார்கள். லீஜ் நகரமும் நாமூர் நகரமும் ம்யூஸ் நதிக்கரையில் இருக்கின்றன. ஆண்ட்வெர்ப் நகர மானது வடக்கே ஷெல்ட் நதிக்கரையில் இருககின்றது. நாமூர் நகரமானது ஒன்பது கோட்டைகளால் சூழப்பட் டது. லீஜ் நகரத்துக்குச் சிறிது தென்கிழக்காக நாமூர் நகரம் இருக்கின்றது.

ஜெர்மனியர்கள் லீஜ் நகரத்தைத் தாக்க ஆரம்பித்த வுடனே, அந்நகரத்திற்குச் சிறிது வடக்கேயுள்ள விஸே, ஆர் ஜென்டா என்ற இரண்டு ஊர்களிலும் ஜெர்மனியர்கள் நெருப்பைக் கொளுத்தி குடிஜனங்களை அழித்து விட்டார் கள். இதுதான் ஜெர்மனியர் களுடைய முதலாவது மிரு கத்தனமான செய்கை. ஜெர்மனியர்கள் விஸே என்னும் நகரத்திற்கு வந்து ம்யூஸ் நதியின் வலதுகரையில் தங்கிக் கொண்டு அந்த நதியைக்கடந்து இடதுகரை சேர்வதற்கா கப்பாலம் கடடினார்கள். ஆனல் பெல்ஜியர்கள் தைர்யமாக அவாகளை எதிர்த்து அவர்களைப் பாலம் கட்டவிடவில்லை. உடனே ஜெர்மனியர் இவ்விடத்தில் ம்பூஸ் நதியைக் கடப்

பது முடியாத கார்யமென்று கருதி; அப்படியே வடக்கு நோக்கிச் சென்று ஹாலண்டின் எல்லைக்குள் பிரவேசித்து ஐஸ்டன் என்னும்நகரில் ம்யூஸ் நதியைக்கடந்து தெற்கு நோக்கிப் புறப்பட்டார்கள். லீஜ் நகரத்தை ஜெர்மனியர்கள் நெருங்க நெருங்க, யுத்தம் வெகு உக்கிரமாய் விட்டது. ஆகஸ்டு மீ 5-ம் தேதியன்று லீஜ் முற்றுகை யிடப்பட்டது. 6-ம் தேதியுத்தம் பயங்கரமாய் விட்டது; பெல்ஜியர்கள் உயிரைத் துரும்பாக மதித்து ஜெர்மனியர்கள் மீதுவிழுந்து அவர்களை ஓட ஓடத்துரத்தினார்கள்; ஜெர்மனியர்களுக்குள் அன்று ஒரு தினத்தில் மாத்திரம் 8000 வீரர்களும் ஏழு பீரங்கிகளும் நஷ்டம். பெல்ஜியம் தேசத்து அரசரேபோர்க்கோலம் பூண்டு யுத்தகளத்திற்குச்சென்றார்.

ஜெர்மனியர்களின் கடற் படையைச் சேர்ந்த சிலயுத்தக் கப்பல்கள் வட ஆப்பிரிக்காவில் பிரான்ஸுக்குச் சொந்தமான ஆல்ஜீரியக் கரையிலுள்ள சில பட்டணங்களை அழித்து விட்டனவென்று ஜெர்மனியர்கள் சொல்லிக் கொண்டார்கள். இங்கிலாந்திலிருந்து உடனே ஒருபடையெடுப்புச்சைந்நியம் பிரான்ஸினுடைய உதவிக்கு அனுப்ப வேண்டுமென்று இங்கிலாந்திலுள்ள சைந்நிய அதிகாரிகள் தீர்மானித்தார்கள்.

இதற்குள்ளாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத்தலைவராகிய வில்ஸன் என்பவர் ஐரோப்பிய அரசுகளுக்குள் நடக்கும் யுத்தத்தை நிறுத்திச் சமாதானத்தை ஸ்தாபிப்பதற்காகத் தான் மத்தியஸ்தரா யிருந்துஏற்பாடு செய்வதாக முன்வந்தார். ஆனால் இவர் இந்த யோசனையுடன் முன்வந்து இரண்டு மூன்று நாட்களுக் குள்ளாக அவருடைய மனைவியிறந்து போனார். அதனால் அவர் அவ் விஷயத்தில் அதிகமாக முயற்சிப்பதற்குக் கூடாதுபோயிற்று. ஆதலால் அவர் தமது குடிஜனங்களில் ஒருவரும் ஒரு கட்சியிலும் சேர்ந்து பரிந்து கொண்டு யாதொன்றும்செய்யக் கூடாதென்று கண்டிப்பாகத் தமது குடி ஜனங்களுக்கு உத்தரவு செய்து விட்டார்.

பிரெஞ்சுக் காரர்கள் ஆல்ஸேஸ் பிரதேசத்தில் படை யெடுத்துச் சென்று அங்கிருந்த ஜெர்மனியப் படைகளைத் துரத்தி விட்டு அதைக் கைவசப் படுத்திவிட்டாரகள். ஆல் ஸேஸ் என்ற பிரதேசமானது நியாயமாக பிரான்ஸுக்குச் சேர்ந்தது. 1870-1-ல் நடந்த யுத்தத்தில் ஜெர்மனியர்கள் இந்தப் பிரதேசத்தை பிரான்ஸினிடத்தி லிருந்து பிடுங் கிக் கொண்டார்கள். ஆதலால் அந்த பிரதேசத்தின் ஜனங் கள் பிரான்ஸினிடத்தில் அந்தரங்க அன்புடையவர்கள். பிரெஞ்சுக் காரர்கள் அதைப்பிடித்துக் கொண்டவுட னே, ஆல்ஸேஸ் குடிகளுக்கு உண்டான சந்தோஷத்திற் கோரளவே யில்லை. பிரெஞ்சு சைந்நியாதிபதி அங்கு "ஆல்ஸேஸ் நாட்டுப்புத்திரர்களே! பிரெஞ்சு யுத்த வீரர் கள் விசனத்துடன் நாற்பத்து நான்கு வருஷங்கள் காத்திருந்தபின் மறுபடியும் உங்களுடைய சிறந்ததேச த்தில் கால் வைக்கின்றார்கள். பழிக்குப் பழிவாங்குகின்ற பெரிய வேலையில் அவர்கள் முற்பட்டிருக் கிறார்கள்" என்று ஒரு அறிக்கையை வெளியிட்டார். பிரெஞ்சுக்கா ரர்கள் அடைந்த முதலாவது ஜெயம் இது தான்.

லீஜ் கோட்டைகள் ஆகஸ்டு மாதம் 18-ம்தேதி வரை யில் ஜெர்மனியர்களை எதிர்த்துக்கொண்டிருந்தன வென்று சொல்லப்பட்டது. அங்கு ஒரு பெல்ஜிய சைந்நியாதிபதி படுத்த படுக்கையிலிருந்து கொண்டே மகா தீரத்துடன் தமது சைந்நியங்களை ஜெர்மனியர்களுக்கு விரோதமாக நடத்திகொண்டிருந்தாரென்று சொல்லப்பட்டது. ஜெர் மனிய சைந்நியாதிபதி வான் எம்மிக் என்பவர் யுத்தகளத் தில் கொல்லப்பட்டாரென்று கூறப்பட்டது. ஆனால் லீஜ் கோட்டைகள் விழுந்து விட்டனவென்று உலகம் அறிவ தற்கு முன்னமேயே வெகு தூரத்தில் தெற்கே யிருக்கும் டினாண்ட் என்னும் நகரைஜெர்மனியர்கள் தாக்கினரென்று தந்தி வந்தது. லீஜ் கோட்டைகள் விழுந்த சங்கதி சொல் லப் படவேயில்லை. லீஜ் நகரத்தில் பெல்ஜிய சைந்நியாதி பதியா ய் இருந்த லீமான் என்பவர் இடிந்து விழுந்து

கிடந்த ஒரு கோட்டைச் சுவரின் கீழ்ஸ்மரணையற்று விழுந்து கிடந்தா ரென்றும் அவர் ஜெர்மனியர்களால் கைதியாக்கப் பெற்ரூ ரென்றும் சமாச்சாரம் வந்தது. அப்பொழுதுதான் லீஜ் கோட்டைகள் விழுந்திருக்க வேண்டுமென்று எல்லோரும் ஊகித்துக் கொண்டார்கள். ஜெர்மன் சைந்யாதிபதி வான் எம்மிக் என்பவர் லீஜில் கொல்லப்பட்டார் என்று சொல்லப் பட்டது. ஜெர்மனியர்கள் அவர் கொல்லப்பட வில்லை யென்ருர்கள். ஆனல் அவர் உயிருடனில்லை யென்றுபிரகு எல்லோருக்கும் தெரிந்து விட்டது. அவ்விஷயமாகப் பின்வரும் சங்கதிகள் சொல்லப்படுகின்றன. ஜெர்மன் இளவரசர் சைந்யாதிபதி வான்எம்மிக் என்பவரை வரவழைத்து லீஜ் கோட்டைகளை இன்னும் பிடிக்காமல் இருந்ததற்காக அவருடைய முகத்தில் ஒரு அறைஅறைந்தா ரென்றும் அவர் உடனே கோபம் மிகுந்து தமது கைத்துப்பாக்கியினல் ஜெர்மன் இளவரசரைச் சுட்டாரென்றும் ஆனல் குறிதவறி விட்டதென்றும் அதனல் தம்மைத்தாமே சுட்டுக்கொண்டு அவர் மரணமடைந்தா ரென்றும் சொல்லப்படுகிறது. சைந்யாதிபதி இளவரசரைச் சுட்டபொழுது குறிதவற வில்லையென்றும் ஆனல் ஜெர்மன் இளவரசருக்குப் பலமான காயங்கள் படவில்லையென்றும் சாதாரணமாகக் காயப் பட்டதுண்டென்றும் அதனல் தான் அவர் ஆகஸ்லாஷப்பேல் ஆஸ்பத்திரியில் சில நாட்கள் இருந்தா ரென்றும் சிலர் சொல்கின்றனர். நிற்க, லீஜ் கோட்டைகள் உக்கிரமாக எதிர்த்து நிற்பதைக் கண்ட ஜெர்மனியர்கள் உடனே ஜெர்மனியிலிருந்து பதினரறை அங்குல பீரங்கிகளைக் கொண்டுவந்து கோட்டைகளுக்கு எதிராக நிறுத்தித் தாக்கவே, கோட்டைக ளெல்லாம் இரண்டு குண்டுகளிலும் நான்கு குண்டுகளிலும் விழுந்து விட்டன வென்று சொல்லப்படுகிறது. இந்த பெரிய பீரங்கிகள் ஜெர்மனியர்களுடைய

வசத்தில் இருக்கின்றன வென்று மற்றத் தேசத்தார்களுக்குத் தெரியாதாம். அந்த பீரங்கிகளை உபயோகிக்கும் வித்தை ஜெர்மனியப் படை வீரர்கள் அறியார்களாம். பீரங்கிகளைச் செய்து கொடுக்கின்ற ஜெர்மனியத் தொழிற்சாலை (இத்தொழிற் சாலைக்குப் பெயர் க்ரூப் தொழிற்சாலை யிலுள்ளவர்களுக்கே இந்த பீரங்களின் மர்மங்கள் தெரியுமாம். இந்த பீரங்கிகளை ஒரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமானால், தண்டவாளங்களிட்டு அவற்றின் மேலேயே இழுத்துச் செல்ல வேண்டுமாம். இந்த பீரங்கிகளினாலேயே லீஜ் கோட்டைகள் தகர்ந்து விட்டன.

லீஜ் கோட்டையின் சைந்நியாதிபதியா யிருந்த லீமான் என்பவரை ஜெர்மனியர்கள் கைதியாகப் பிடித்தவுடன், அவருடைய கத்தியை அவருக்கே கொடுத்து அவரை யுத்தமரியாதைகளுடன் கௌரதையாக நடத்தினார்கள்.

அத்தியாயம் 7.

பெல்ஜிய யுத்தம்.

லீஜ் கோட்டைகள் அநேக நாட்கள் தாங்கி நின்றன. உலக சரித்திரத்தில் லீஜ் யுத்தமானது பெயர் பெற்றிருக்கும். லட்சக் கணக்கான ஜெர்மனியப் பெரும் படைகளை சில ஆயிரக்கணக்கான பெல்ஜியர்கள் எதிர்த்து நின்றது மிகவும் ஆச்சரியம். ஜெர்மனியர்கள் பிறவி முதல் யுத்தப் பயிற்சியுடையவர்கள், பேராசை மிகுந்தவர்கள், கோபமும் குரோதமும் பெருகிய ராட்சஸர்கள்; பெல்ஜியர்கள் தொழிலாளிகள், வியாபாரிகள், வியவசாயிகள், சமாதானமே ஸ்வபாவமாக உடையவர்கள். ஆதலால் பிரென்சுக்காரர்களுடைய சைந்நியமாவது, ஆங்கிலேயருடைய சைந்நியமாவது தங்களுக்கு உதவியாக வந்துவிடுமென்று கருதி கோட்டைகளை எதிர்த்து எதிர்த்து வரும் ஜெர்மனியர்களைத் துரத்தித் துரத்தியடித்தார்கள். ஜெர்மனியர்களுடைய ராட்சஸ பீரங்கிகளையும் லட்சியம் செய்யாது பெல்ஜியர்கள் தங்களுடைய கோட்டைகளை காத்துநின்றார்கள். ஜெர்மனியர்கள் யுத்தம் செய்வதாகக் கூறுவதற்கு முன்பாகவே தங்களுடைய சேனைகளை லக்ஸம்பர்க்குக்குள்ளும் பெல்ஜியத்திற்குள்ளும் நடத்திவிட்டதால், பிரென்சு சைந்நியங்களும் ஆங்கில சைந்நியங்களும் உடனே உதவிக்கு வரமுடியாமற் போயிற்று. லீஜ் கோட்டைகளில் இருந்த பெல்ஜியர்கள் "ஆங்கிலேயர்கள் எப்பொழுது வருவார்கள்?" என்றே எதிர்பார்த்து மிகுந்த ஆசையுடன் காத்துக்கொண்டிருந்தார்கள். என்ன செய்யலாம்? நேச அரசுகளில் ஒருவரும் உதவிக்கு வர முடியாமற்போயிற்று. கோட்டைகள் விழுந்துவிட்டன. சில பெல்ஜியர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். அநேகர் நாமூர் கோட்டையைக் காக்கும் பொருட்டு அங்கு சென்றார்கள்.

நாமூர் கோட்டைகள் லீஜ் கோட்டைகளைப்போலவே பலமுடையதாயினும் நெடு நாட்கள் நிற்க முடியவில்லை.

ஜெர்மனியர்களுடைய ராட்சஸ பீரங்கிகள் வெகு சீக்கிரத்தில் அவற்றை வீழ்த்திவிட்டன. அந்தூர் பெல்ஜியர்கள் எவருடைய உதவியும் இன்றி ஜெர்மனியர்களை எதிர்த்தார்கள். ஜெர்மனியப் படைகள் லீஜுக்கும் நாமூருக்கும் மாத்திரம் செல்லவில்லை. தெற்கே டினண்ட், வடக்கே ஹாஸ்ஸெல்ட், டாங்கர்ஸ் முதலிய இடங்களிலும் கிழக்கு பெல்ஜியத்தில் ஒரு வரிசையாக பரந்து நின்றுகொண்டன. வடக்கே ஹாஸ்ஸெல்ட் என்ற இடத்தில் பெல்ஜியர்கள் ஜெர்மனியர்களைத் தோற்கடித்துத் துரத்தினார்கள். ஆனாலும் ஜெர்மனியர்கள் வெள்ளம் போலத் திரண்டு வந்திருக்கிறார்களல்லவா? பெல்ஜியர்கள் என்ன சௌர்யம் காட்டியும், ஜெர்மனியர்கள் அவர்களைப் பின் தள்ளிக்கொண்டே இன்னும் வடக்கேயுள்ள "எர்ஷாட்" என்ற இடத்தை நோக்கிச் சென்றார்கள். இதற்குள்ளாக பிரென்சு சைந்நியங்கள் பெல்ஜியர்களுக்கு உதவி செய்வதற்காக பெல்ஜியத்திற்குள் வந்துவிட்டன. தெற்கே "டினண்ட்" என்னும் இடத்தில் ஜெர்மனியர்களுக்கும் பிரென்சுக்காரர்களுக்கும் ஒரு பெரிய பீரங்கி யுத்தம் நடந்தது. பிரென்சு வீரர்கள் "டினண்டி"லிருந்து ஜெர்மனியர்களைத் துரத்தினார்கள். புறமுதுகிட்டோடிய ஜெர்மனியர்கள் "ம்யூஸ்" நதியின் அக்கரை செல்வதற்குச் சக்தியற்றவர்களாகி, ம்யூஸ் நதியில் குதித்தார்கள். பிரெஞ்சு வீரர்கள் தண்ணீருக்கு மேல் தெரிகிற தலைகளையெல்லாம் சுட்டு வீழ்த்தினார்கள்.

இப்பொழுது தான் அதி பயங்கரமான யுத்தம் ஆரம்பமாகின்றது. யுத்தகளமானது 350 மைல் விஸ்தீர்ணத்தில் பரந்திருக்கிறது. இருகட்சியிலும் லட்சக்கணக்கான போர்வீரர்கள் உயிரைத் துரும்பாக மதித்து போர்க்களத்தில் வந்து நின்றார்கள்.

ஜெர்மனியர்கள் எவ்வளவு தான் தோல்வியடைந்தபோதிலும், எத்தனை தரம் தான் புறமுதுகிட்டோடும்படி நேரிட்டபோதிலும் சற்றும் பின் வாங்குவதாயில்லை; மேலும் மேலும் வந்து விழுந்தார்கள்; "லீஜ்" நகருக்குத்தெற்கிலும்

வடக்கிலும் தங்களுடைய படைகளை எங்கும் நிரப்பிவிட்டார்கள். "லீஜ்" நகரைத்தாண்டி, "டிர்லிமாண்ட்" என்னும் நகரத்தைத் தாக்கினார்கள். அதையும் கடந்து பெல்ஜியத்தின் ராஜதானி நகராகிய "ப்ரெஸ்ஸெல்ஸை" யும் தாக்கினார்கள். பெல்ஜியர்கள் வீராவேசத்துடன் எதிர்த்தார்கள். "ப்ரெஸ்ஸெல்ஸ்" நகரத்திலிருந்து ராஜ குடும்பமும் ராஜாங்கமும் ஆண்ட்வேர்ப் நகரத்திற்கு மாற்றப்பட்டது. ஜெர்மனியர்கள் பெல்ஜியர்களை ஜெயித்துவிட்டதினால் ராஜதானி மாற்றப்பட்டதென்று ஒருவரும் நினைக்கவேண்டாமென்று ஏதோ யுத்த தந்திர மர்மத்தை உத்தேசித்து, இங்ஙனம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் சொல்லப்பட்டது. பெல்ஜியர்கள் ஜெர்மனியர்களை எதிர்த்து நின்ற மாதிரியைப் பார்த்து ஜெர்மன் சக்கரவர்த்தி பிரமித்து விட்டார். இவ்வாறு பெல்ஜியர்கள் எதிர்க்காமலிருந்தால், இதற்குள்ளாக ஜெர்மனியர்கள் பிரான்ஸை ஜெயித்திருப்பார்களே! ஜெர்மனியர்களுடைய ஏற்பாடுகளும் யோசனைகளும் இப்பொழுது பாழாய்விட்டனவே! ஆதலால் ஜெர்மன் சக்கரவர்த்தி பெல்ஜியத்தில் இவ்வளவும் செய்துவிட்டு இப்பொழுது மறுபடியும் தாம் பெல்ஜியத்தினிடத்தில் விரோதம் வைக்கவில்லையென்றும் தமது படைகளை இப்பொழுதாவது எதிர்க்காமல் விடுவதானால் பெல்ஜியத்திற்கு ஒருதீங்கும் செய்வதில்லையென்றும் பெல்ஜிய அரசருக்குத் தெரிவித்து அவரை வசப்படுத்தப் பார்த்தார். ஆனால் பெல்ஜிய அரசர் இணங்கவில்லை. இவ்வளவு தூரம் தாம் ஒருவரே தைர்யமாக எதிர்த்து நின்றவர், தமது ஆயிரக்கணக்கான போர்வீரர்களை யுத்த களத்தில் தன் மதிப்பைக் காப்பாற்றும் பொருட்டு பலிகொடுத்தவர், வீராதிவீரனாகிய பெல்ஜிய அரசர் இப்பொழுது மித்திரத்துரோகி யெனப் பெயர் வாங்குவாரா?

டினாண்டை ஜெர்மனியர்கள் கைப்பற்றிக்கொண்டு அங்கிருந்து தென்கிழக்காக ந்யூஷாட்டோ என்னும் இடம் வரையில் பரவிக்கொண்டார்கள். வடக்கே டிர்லிமாண்ட்,

டீஸட், லொவெயின் முதலிய இடங்களைப் பயங்கரமாக ஜெர்மனியர்கள் தாக்கினார்கள். பெல்ஜியர்கள் ஜெர்மனியர்களின் தொகையில் எவ்வளவோ குறைந்திருந்ததினால் பின் வாங்க வேண்டிவந்தது. ஆனால் இப்பொழுது பிரெஞ்சு சைந்நியங்களுடன் சேர்ந்து கொண்டதினால், இரு சைந்நியங்களும் ஒத்து யுத்தம் செய்ய வேண்டியதாயிற்று.

ஆகஸ்டுமீ 23-ம் தேதிக்குள்ளாக ஜெர்மனியர்களுடைய சைந்நியங்கள் பெல்ஜியத்தில் கிழக்கு எல்லையிலிருந்து மேற்கு எல்லையாகிய ஆஸ்டன்ட் வரையிலும் பரந்து விட்டன. ஆகஸ்டுமீ 22-ம்தேதியன்று ஜெர்மனியர்கள் 400,00 போர் வீரர்களுடன் ப்ரஸ்ஸெல்ஸ் நகரத்திற்குள் நுழைந்து அதைக்கைப்பற்றிக் கொண்டார்கள். அரசாங்கமும் ராஜ குடும்பமும் அங்கிருந்து மாற்றப்படும் வரையில் பெல்ஜியர்கள் எதிர்த்து நின்றார்கள். பின்னர் பெல்ஜிய சைந்நியமானது அந்நகரைத் தானே காலி செய்து விட்டுவிட்டுப் போய்விட்டது. அந்நகரின் அதிபர் அந்நகர் ஜனங்கள் அமைதியாயிருக்க வேண்டுமென்றும் ஜெர்மனியர்களை எதிர்க்கக் கூடாதென்றும் ஒரு அறிக்கை செய்திருந்தார். ஜெர்மனியர்கள் ஜெயகோஷத்துடன் அந்நகரத்திற்குள் பிரவேசித்தார்கள்; அவர்கள் அன்று அடைந்த ஆநந்தத்திற்கு அளவேயில்லை. பெல்ஜியப்படைகள் ஆண்ட்வெர்ப்பை நோக்கிச் சென்றன.

ஜெர்மனியர்கள் நேர் மேற்காக கேண்ட் வரையில் சென்று தெற்கு நோக்கித் திரும்பின. பெல்ஜியத்தின் ஒரு பாகமாகிய ஹைனல்ட் என்ற பிரதேசத்தில் பிரான்ஸுக்கு வடக்கே பலமான யுத்தம் மும்முரமாக நடக்க ஆரம்பித்தது.

வடக்கே டிர்லிமாண்ட் என்னும் இடத்தில் நடந்த கடுமையான யுத்தத்தில் பெல்ஜியர்கள் காட்டின தைரியமும் ஸாகஸமும் மிகவும் மெச்சத்தக்கது. 240 பெல்ஜியர்கள் பதினாயிரம் ஜெர்மனியர்களை எதிர்த்து நின்று தாக்கினார்களென்றால் ஆச்சர்யமல்லவா?

ஆண்ட்வெர்ப்பில் பெல்ஜியர்கள் சுற்றுப் புறங்களி லுள்ள இடங்களை யெல்லாம் காலிசெய்து கொண்டு ஆண் ட்வெர்ப்பின் கோட்டை கொத்தளங்களை யெல்லாம் பலப் படுத்தி ஜெர்மனியர்களை எதிர்ப்பதற்குத் தயாராயிருந்தார் கள். ஆனால் ஜெர்மனியர்கள் ஆண்ட்வெர்ப்புக்குப் போக வில்லை. வடக்கு பெல்ஜியத்திலிருந்து ஜெர்மனியர்கள் தெற்கே புறப்பட்டுவிட்டார்கள். இதற்குள்ளாக இவர் கள் செய்த அக்கிரமங்கட்கு அளவில்லை. அநேக கிராமங் களில் தீயைக்கொளுத்தி விட்டார்கள். குடி ஜனங்களை யெல்லாம் சுட்டுக்கொன்றார்கள். பெண்டு பிள்ளைகளை யெல்லாம் அவமானப்படுத்தினார்கள்.

ப்ரஸ்ஸெல்ஸ் நகரத்தைக் கைப்பற்றிய பொழுது ஜெர்மனிய வீரர்கள் இரண்டு பெல்ஜிய உத்தியோகஸ்தர் களையும் ஒரு பெல்ஜிய சைந்யாதிபதியையும் தாங்கள் குதிரை மேலேறிக் கொண்டு, தங்களுடைய கால்களில் கட்டியிழுத்துக் கொண்டு சென்றார்களாம். என்ன அக் கிரமம்! எர்ஷாட் என்ற இடத்தில் நடந்த யுத்தத்திற்குப் பிறகு பெல்ஜியர்கள் தங்களினும் பதின்மடங்கு அதிகமான ஜெர்மனியர்களை எதிர்க்க முடியாமல் லோவியின் நகரத்தை நோக்கிச் சென்றார்கள். அப்படிச் செல்லும் பொழுது பெல்ஜியர்களின் ஸைந்நியத்தைச் சுற்றிலும் காவல்காத்துக் கொண்டு 288 பெல்ஜிய வீரர்களுடன் மேஜர் கில்ஸன் சென்றார். அவருடன்சென்ற 288 போர்வீரர்களில் ஏழு பேர்களே மிஞ்சினர். ஆனால் பெல்ஜிய ஸைந்நியம் முழு தும் லோவியின் போய்ச் சேர்ந்தது. அங்கும் ஜெர்மனியர் கள் பின் தொடர்ந்து சென்றார்கள். பெல்ஜியர்கள் எத் தகைய வீரர்களா யிருந்தபோதிலும் லட்சக்கணக்கான ஜெர்மனியர்களுக்கு முன் என் செய்யமுடியும்? அங்கிருந் தும் பெல்ஜியர்கள் பின் சென்றார்கள். லோவியின் என் பது ஒரு பெரிய கலாசாலை யுள்ளநகரம்; பெல்ஜியத்தில் மிகச் சிறந்த, உலகம் முழுதினும் கொண்டாடப் பெற்ற சித்திரவேலைப் பாடுகள் மிகுந்தது. பெல்ஜியத்திற்கே அழ

சையும் அந்தஸ்தையும் கொடுத்திருந்த நகரம் இதுதான். அந்நகரத்தில் இருந்த வாசகசாலையானது (லைப்ரரி) மிகப் பெயர்பெற்றது; உலகத்தில் பிரசித்திபெற்ற புஸ்தகங்கள் எல்லாம் அங்குசேர்க்கப் பட்டிருந்தன. பெரிய, பெரிய பண்டிதர்களும் புலவர்களும் இந்நகரத்தில் தங்களுடைய வித்தியா சாமர்த்தியங்களைக் கைக்கொண்டிருக் கின்றனர். உலகத்தில் வித்தைக்கு இருப்பிடமா யிருந்த இடங்களில் இதுவொன்று. இந்த ஊரானது இப்பொழுது எப்படி யிருக் கின்றது? பாழடைந்து, கலாசாலைகளும் சித்திரச்சாலைக ளும் வெறுங் குட்டிச்சுவர்களா யிருக்கின்றன. நகரமா னது கரிந்துபொரிந்து சாம்பலா யிருக்கின்றது. ஜெர்மனி யர்கள் லோவெயினை எரித்துக் கரித்துவிட்டார்கள். யுத் தம் செய்யும வீரர்களைக் கொன்றால் ஒருவரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள்; யுத்தத்தில் சிறிதும்சேராமல் சமா தானமாய் வாழும் குடிகளை, கிழவர்களையும் குழந்தைகளை யும் ஸ்திரீகளையும் அநியாயமாகக் கொல்வதும் யாதொரு பாவத்தையும் செய்யாத கட்டடங்களையும் புஸ்தகங்களை யும் தீயிட்டுக் கொளுத்துவதும் நாகரீகத்திற்கு அழகன்று. ஒருவேளை இதுதான் ஜெர்மனியர்களுடைய நாகரீகம் போலும்! அவர்களுடைய கல்வியின் பெருமையையும் நாகரீகத்தின் உயர்வையும் லோவெயின் நகரத்தில் அவர் கள் செய்த அடாத செய்கைகள் இப்பொழுது உலகின ருக்கு எடுத்துக் காட்டுகின்றன! லோவெயின் நகரஜனங் கள் உயிரோடு எரிக்கப் பட்டார்கள். நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் ஜெர்மனியர்களால் பிடிக்கப்பட்டு ரெயில் வண்டி களில் எங்கோ அனுப்பப்பட்டார்கள்.

ஜெர்மனியர்கள் இந்த அக்கிரமங்களை யெல்லாம் செய்துவிட்டு வடக்கே ஆண்ட் வெர்ப்பை நோக்கிச் சென் றார்கள், அங்கு தோல்வியடைந்து திரும்பினார்கள். ப்ரஷ் ஷியநாட்டு இளவரசர்களாகிய அடல்பேர்ட் என்பவரும் ப்ரேடேரிக்வில்லியம் என்பவரும் வுர்ட்டம் பேர்க்கைச் சேர்ந்த கார்ல் என்பவரும் ஜெர்மனியர்களுக்குள் கொல்

லப் பட்டார்கள். தெற்கே கோர்ட்ரை என்னும் இடத்தில் நடந்த யுத்தத்தில் ஜெர்மன் சக்கரவர்த்தி யினுடைய மருமகர் ஒருவர் பிரெஞ்சுக் காரர்களால் கைதிசெய்யப் பட்டார்.

ஜெர்மன் சக்கரவர்த்தி தமதுபடைகள் பிடித்துக் கொண்ட பெல்ஜியத்தின் பிரதேசங்களில் ஸைந்நியாதிபதி வான்டர் கால்ட்ஸ் என்பவரை யுத்தகவர்னராக நியமித்து இன்னொருவரை நியாயாதிபதியாகவும் நியமித்து விட்டார்.

அத்தியாயம் 8.

ருஷியாவும் ஸெர்வியாவும்.

நாம் இதுவரையில் ஜெர்மனிக்குக் கிழக்கே யுள்ள சங்கதிகளைப் பற்றிச்கவனித்தோம். இப்பொழுது ஜெர்மனி மேற்கிலும் ஆஸ்டிரியாவுக்குத் தெற்கிலும்உள்ள சங்கதிகளைப் பற்றி கவனிப்போம்.

ஜெர்மனி இருபக்கத்திலும் எதிரிகளால் நெருக்கப்படுவது போலவே, ஆஸ்டிரியாவும் தெற்கேஸெர்வியாவினாலும் வடகிழக்கே ருஷியாவினாலும் நெருக்கப்படுகிறது. மாண்டிநீக்ரோ என்னும் சிறுதேசமும் ஸெர்வியாவுடன் சேர்ந்து கொண்டதென்று முன்னமே கூறியுள்ளோம்.

ஆகஸ்டுமீ 10-ந்தேதி மான்டிநீக்ரோவர்கள் ஸ்பிஸ்ஸா என்ற பட்டணத்தையும் இன்னும் இரண்டு இடங்களையும் பிடித்துக்கொண்டார்கள். இரண்டு ஆஸ்டிரிய யுத்தக்கப்பல்கள் ஆண்டிவாரி என்ற பட்டணத்தைத்தாக்கின. ஆஸ்டிரியர்கள் க்ராக்கோ என்ற நகரத்திலிருந்து கீல்ஸ் என்ற நகரம் நோக்கிப் புறப்பட்டார்கள். ருஷியர்கள் லெம்பர்க் என்ற நகரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். ஆஸ்டிரியர்களும் ஸெர்வியர்களும்செய்த யுத்தங்களிலெல்லாம் ஆஸ்டிரியர்கள் ஸெர்வியர்களின் முன் நிற்க முடியா

து பின் சென்றார்கள். பெல்க்ரேட் நகரத்தை யுத்தம் ஆரம்பித்தவுடன் தீயைக்கொளுத்தி விட்ட ஆஸ்டிரியப் படைகளுக்கு ஸெர்வியப்படைகள் வந்தபொழுது எதிர்த்து நிற்க முடியவில்லை; ஷாபாட்ஸ் என்ற இடத்தில் படுதோல்வி யடைந்தார்கள். மாண்டி நீக்ரோவர்கள் காட்டாரோ என்ற நகரைத் தாக்கினார்கள்.

ருஷியர்கள் ஆயிரக்கணக்காகச் சேர்ந்து கொண்டு கிழக்கு ப்ரஷ்ஷியாவுக்குள் வெகுதாராளமாக நுழைந்தார்கள். அங்கிருந்த ஜெர்மன் படைகள் எதிர்த்தன. ஜெர்மன் படைகளைத் துரத்திக்கொண்டே, ருஷியக்குதிரைப் படைகள் அலட்சியமாக முன்சென்றன. கீல்ஸை நோக்கிச் சென்ற ஆஸ்டிரியர்கள் மறுபடியும் க்ராக்கோவை நோக்கித்திரும்பும்படி நேரிட்டது. ருஷியர்கள் பக் என்ற ஆற்றின் கரை வழியாகவும் ஸ்டைர் என்ற ஆற்றின் கரை வழியாகவும் ஆஸ்டிரியாவுக்குள் நுழைந்தார்கள். ஆஸ்டிரியர்கள் அட்ரியாட்டிக் கடலில் தங்களுடைய துறைமுகமாகிய ட்ரீஸ்ட் என்னும் நகரிலிருந்து தங்களுடைய கஜானாவை வியன்னாவுக்கு மாற்றி விட்டார்கள், இங்கிலீஷ்காரர்கள் எதிர்ப்பார்கள் என்று பயந்து, ஆகஸ்டு மாதம் 18-ம் தேதி யன்று ருஷியர்கள் கிழக்குப்ரஷ்ஷியாவுக்குள் நுழைந்து கடும்போர் புரிந்து நூற்றுக் கணக்கான ஜெர்மனியர்களைக் கைதிகளாகப் பிடித்ததுமன்றியில், ஐந்து இடங்களையும் பிடித்துக்கொண்டார்கள்; ஆஸ்டிரியர்களை காலீஷியாவில் ருஷியக் குதிரைப்படைகள் ஓடஓடத்துரத்தின.

ஆஸ்டிரியாவில் உள்கலகங்கள் கிளம்பின என்று சொல்லப்பட்டது. சில போர்ச் சேவகர்கள் யுத்தம் செய்ய மறுத்து விட்டார்கள்; ஆஸ்டிரிய அரசாங்கத்தார் அவர்களையும் அவர்களிடத்து அநுதாபம் காட்டியவர்களும் சுட்டுக்கொன்றுவிட்டனர். கிழக்குப் ப்ரஷ்ஷியாவில் ருஷியர்கள் ஆகஸ்டுமீ 20-ம் தேதி யன்று ஜெர்மனியர்களைப் புறமுதுகிட்டோடச் செய்து அநேகம் கைதிகளையும் பன்னிரண்டு பிரங்கிகளையும் பிடித்

துக்கொண்டார்கள். கம்பின்னன் என்ற இடத்தில் அதி பயங்கரமான யுத்தம் ஒன்று நடந்தது; அதில் ஜெர்மனியர்கள் தோற்று ஓடினார்கள்; ருஷியர்கள் அவர்களைத் துரத்திக்கொண்டே போய் இன்ஸ்டர்பரி என்ற இடத்தையும் கோல்டாப் என்ற இடத்தையும் பிடித்துக்கொண்டார்கள். கிழக்குப்ரஷியாவின் எல்லைப்புறத்திலுள்ள கிராமங்களிலிருந்த குடி ஜனங்கள் நாலா பக்கங்களிலும் ஓடினார்கள்.

ருஷியர்கள் இன்னொரு வழியாகக்கிழக்கு ப்ரஷ்ஷியாவுக்குள் பிரவேசித்து மூன்றுநாட்கள் இடைவிடாது யுத்தம் செய்துகொண்டே இருபதுமைல் தூரம் முன் சென்று லிக் என்ற இடத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். க்ராஸ்நிக் என்ற இடத்தில் ருஷியர்கள் ஆஸ்டிரியர்களை முறியடித்து எட்டு உத்தியோகஸ்தர்களையும் 250 பேர்களையும் நான்கு பீரங்கிகளையும் பிடித்துக்கொண்டார்கள். இதுமாத்திரமா? கிழக்கு ப்ரஷ்ஷியாவில் ருஷியர்கள் லிக் குக்கு இருபது மைலுக்கு மேற்கேயுள்ள ஆணரஸ் என்னும் நகரத்தையும் ஜோஹேன்னீஸ்பர்க், ஆர்ட் டேல்ஸ்பர்க், வில்லேன்பர்க், ஸோல்டௌ என்னும் நகரங்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இப்பொழுது இவர்கள் கிழக்கு ப்ரஷ்ஷியாவில் 40 மைல்தூரம் வரையில் நுழைந்து விட்டார்கள்; இன்னும் ஜெர்மனியின் ராஜதானி நகரமாகிய பேர்லினுக்கு 300 மைல்உண்டு. இந்தமுந்நூறு மைல்தூரத்தையும் ஒரேயடியாக நடந்து சென்று பெர்லினைக் கைப்பற்ற ருஷியர்கள் நினைத்திருந்தார்கள் என்று சொல்லப்பட்டது.

இவ்விதமாக ருஷியர்கள் ஜெர்மனிக்குள் சென்றுகொண்டிருந்ததினால், ஆஸ்டிரியர்கள் ருஷியாவைபலமாக எதிர்க்கும்படி நேர்ந்தது. ஆதலால் அவ்விஷயத்தை ஆஸ்டிரியர்கள் அறிவித்தார்கள். ஸெர்வியர்களிடத்தில் அடிப்படுகின்ற ஆஸ்டிரியர்கள் ருஷியர்களை எப்படி ஜெயிக்கப் போகின்றார்கள்? என்று எல்லோரும் பரிகசிக்கும்படி நேரிட்டது. ஆனால் இதுவரையில் கிழக்கு ப்ரஷ்ஷியாவில்

நடந்த யுத்தத்தில் ருஷியர்களுக்கு சேதம் அதிகம். ருஷியர்கள் தங்களுக்குள் கொல்லப்படுபவர்களையும் காயப்படுபவர்களையும் இத்தனைபேர் என்று கணக்கு எண்ணுமல் எதிரியை முறியடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் ஜெர்மனியர்களுடன் போர்புரிந்து மேன்மேலும் ஏறிச்சென்று மார்டென்பர்க், ஸென்ஸ்டர்க், பிஷாவ்ஸ்பர்க் என்ற இடங்களைப் பிடித்துக் கொண்டார்கள்; ஆஸ்டிரியாவில் காலீஷியாவிலும் அப்படியே டார்னப்போல் என்ற நகரத்தைக் கைவசப்படுத்திக் கொண்டு நீஸ்டர் நதியைக் கடந்தார்கள். இதுவரையில் ருஷியர்கள் வெகு லேசாகவே, மிகவும் லகுவாகவே கிழக்கு ப்ராஷ்ஷியாவுக்குள் நுழைந்து ஜெர்மனியர்களைத் தோற்கடித்தார்கள் என்று சொல்லவேண்டும். ஆனல் ஆகஸ்டுமீ 31-ம் தேதி புதிய ஜெர்மனியப்படைகள் பல கிழக்கு ப்ரஷ்ஷிய யுத்தகளத்திற்கு வந்துவிட்டன; இந்த ஜெர்மனியப்படைகளே சில இடங்களில் ஆக்கிரமிக்கத் தொடங்கினவென்று ஒரு ருஷிய உத்தியோக அறிவிப்பு கூறிற்று. இது முதல் ருஷியர்கள் கிழக்கு ப்ரஷ்ஷியாவில் முன்போல நின்று யுத்தம் செய்யமுடியவில்லை.

ஆனல் கலீஷியாவில் முன்போலவே ருஷியர்கள் முன்னேறி ஆஸ்டிரியப் பிணங்களின் மேல் ஏறி நடந்துகொண்டு லெம்பர்க்கை நோக்கிச் சென்ருர்கள். லெம்பர்க்குக்குக் கிழக்கே லாக்ஸோ என்ற இடத்தில் ருஷியர்கள் ஆஸ்டிரியர்களுடைய இருபது பீரங்கிகளையும் கொடிகளையும் பிடுங்கிக்கொண்டது மன்றியில் நூறு உத்தியோகஸ்தர்களையும் 4000 ஆஸ்டிரியர்களையும் கைதிகளாகப் பிடித்தார்கள். லெம்பர்க்கிலிருந்து பத்து மைல் தூரத்திலில் ஒரு இடத்தில் ருஷியர்கள் இரண்டு லட்சம் ஆஸ்டிரியர்களை முறியடித்து 150 பீரங்கிகளையும் அநேக கைதிகளையும் பிடித்துக் கொண்டார்கள். ஆனல் கிழக்கு ப்ரஷ்ஷியாவில் ஜெர்மனியர்கள் தங்களுடைய முற்றுகைப் பீரங்கிகளைக் கொண்டு வந்து விட்டார்கள் என்றும் திடிரென்று

அநேகம் துணைப்படைகள் வந்துவிட்டன வென்றும் அதனால் ருஷியர்கள் பின்செல்ல வேண்டி நேரிட்ட தென்றும் ருஷியர்களே அறிவித்தார்கள். இந்த சமயத்தில் ருஷிய சைந்நியாதிபதி யாகிய ஸாம்ஸ்னுப் என்பவர் கொல்லப்பட்டார். ஜெர்மனியர்கள் ருஷியர்கள் பிடித்திருந்த இடங்களை யெல்லாம் அவர்கள் விட்டுவிட்டுப் போகும்படியாகச் செய்து விட்டார்கள். பின்பு ஜெர்மனியர்களே போலண்டுக்குள் நுழைந்து கொண்டார்கள்.

ஆனால் கலீஷியாவிலோ நாளுக்குள்நாள் ருஷியர்கள் ஆஸ்டிரியர்களை விரட்டிக் கொண்டு மேலும் மேலும் புதிய புதிய இடங்களைப் பிடித்துக் கொண்டார்கள். செப்டம்பர் மீ 3-ம் தேதி லெம்பர்க் ருஷியர்களின் கைவசமாயிற்று; ஒரு வாரத்திற்குள் 40000 ஆஸ்டிரியர்கள் கைதிகளாக்கப்பட்டார்கள்; ப்ரேஸிம்ஸீல் என்ற நகரத்தின் கோட்டை முற்றுகை யிடப்பட்டது. இப்படி வல்லரசுகள் பிரமாத யுத்தம் செய்து கொண்டிருக்க, மாண்டிநீக்ரோ போன்ற குட்டிப் படைகளும் சும்மாயிருக்கவில்லை. மாண்டி நீக்ரோவர்கள் ஆஸ்டிரியாவைச் சேர்ந்த ஹேர்ஸிகோவினு பிரதேசத்திற்குள் நுழைந்து அங்கு போல்ஜானிட்ஸா என்னும் இடத்தில் ஆஸ்டிரியர்களை முறியடித்து கையானிட்ஸா என்ற இடத்தைப் பிடித்துக் கொண்டார்கள்; டோமஷாப் என்ற இடம் கலீஷியாவில் ருஷியர்களின் கைவசமாயிற்று. இவ்விதமாக ஆயிரக்கணக்கான ஆஸ்டிரியர்களைக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டே கலீஷியாவில் முன்னேறிக் கொண்டே வந்தார்கள்.

அத்தியாயம் 9.

இங்கிலாந்தும் பிரான்ஸும்.

1914-ஸு ஆகஸ்டுமீ 4-ம் தேதி ஜெர்மனியுடன் இங்கிலாந்து யுத்தம் தொடங்கி விட்டதென்று நாம் முன்னமேயே கூறியுள்ளோம். ஆங்கில ஜன சமுகமானது

கொதித்துக் கொத்தளித்து இவ்வளவு ஆங்காரத்துடன் இருக்கும் ஜெர்மனியை அழித்து விடுவதாகக் கையில் கங்கணம் கட்டிக்கொண்டு விட்டது. ஆகஸ்டுமீ 3-ம் தேதி யன்று கிச்சனர் பிரபு கப்பல் எறி ஈஜிப்டிக்குப் பிரயாணமானார். அப்பொழுது ஆங்கில அரசாங்கத்தார் யுத்தம் செய்யாமல் நின்று விடலாமென்று நினைத்திருந்ததாகத் தோன்றுகிறது. ஆகஸ்டுமீ 4-ம்தேதி, அதாவது கிச்சனர் பிரபு புறப்பட்ட மறுநாளே, ஆங்கிலேய அரசாங்கத்தார் அவர் ஏறிச்சென்ற கப்பலுக்குத் தந்தியடித்து அவரை இங்கிலாந்துக்குத் திரும்பிவரும்படி உத்தரவு அனுப்பினார்கள். யுத்தம் செய்ய வேண்டாமென்று இருந்த ஒரு ஜனசமூகம் ஒரே நாளுக்குள்ளாகயுத்தம்செய்யத்தான் வேண்டுமென்று தீர்மானித்து விட்டது. இங்கிலாந்து ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநிறுத்தும் பொருட்டுப்படாத பாடெல்லாம் பட்டு தன் முயற்சி வீணாகவே, ஜெர்மனியுடன் யுத்தம் செய்ய நிச்சயித்தது. கிச்சனர் பிரபு யுத்த மந்திரியாக நியமிக்கப்பட்டார். உடனே அவர் யுத்தத்திற்குச் செல்வதற்குச் வீரர்கள் தேவையென்று தமது ஜன சமுகத்தினிடத்தில் சொன்னார்; ஆயிரக்கணக்கான வீரர்கள் உடனே நான் முன்னே, நீ முன்னேயென்று சைந்நியத்தில் சேர்ந்தார்கள். பிரெஞ்சுக்காரர்களுடன் சேர்ந்து ஜெர்மனியர்களை எதிர்க்கும் பொருட்டு ஒருபடை யெடுப்புச் சைந்நியம் அனுப்பப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்தப்படை யெடுப்புச் சைந்நியமானது இங்கிலாந்திலிருந்து எப்பொழுது புறப்பட்டது, பிரெஞ்சுக்கரையில் எப்பொழுதும் வந்து சேர்ந்தது என்ற சமாச்சாரங்கள் ஒன்றும் ஒருவருக்கும் தெரியாது. ஆனால் இங்கிலாந்தில் எல்லாருக்கும்தெரியும். அவர்கள் தேசாபிமானத்தினால் மௌனமாயிருந்தார்கள். எந்த விஷயத்தைப்பற்றியும் முதலாவது சமாச்சாரத்தை வெளியிட விரும்பும் பத்திரிகைகளும் மௌனம் சாதித்தன.

திடீரென்று ஆகஸ்டு மீ 17-ந்தேதி ஆங்கிலேய படையெடுப்புச் சைந்நியமானது பிரான்ஸில் சாவதானமாய் சௌக்கியமாய்வந்து இறங்கிவிட்டதென்று பத்திரிகா அதிகாரிகள் தெரியப்படுத்தினார்கள். இவ்வளவு ரகஸ்யமாக ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்திற்கு ஒரு சைந்நியம் முழுமையும் அனுப்புவதென்றால், அது லேசான காரியமன்று. இங்கிலாந்திலிருந்து சைந்நியங்கள் பிரான்ஸுக்குப் புறப்பட்டு விட்டனவென்று எதிரிகளுக்குத் தெரிந்திருக்குமானால், ஒரு வேளை ஜெர்மனி தனது கடற்படையை அனுப்பி இங்கிலாந்தின் கரைப்படைச் சேனையை எதிர்த்தாலும் எதிர்த்திருக்கும். ஜெர்மனியர்கள் தோல்வியடைவது நிச்சயமானால் அப்போதைக்கு ஆங்கிலேயர்கள் சில அசௌகர்யங்களையாவது அடைய வேண்டி நேரிட்டிருக்கும். ஆதலால் இந்த சைந்நியம் ரகஸ்யமாக ப்ரான்ஸுக்கு வந்தது வெகு ஆச்சர்யம். எதிரிகள் எப்பொழுதும் தங்களுடைய விரோதிகளின் சைந்நியங்களுடைய நடத்தையைப் பற்றிக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். அப்பேர்ப்பட்ட கவனத்திற்குத் தப்பி ரகஸ்யமாகக் கார்யங்கள் நடைபெறுவதென்றால் அது ஆச்சர்யமல்லவா?

பிரான்ஸுக்குள் சுமார் நூறு வருஷங்களுக்கு முன் ஆங்கிலேயர் பிரவேசித் திருக்கிறார்கள்; ஆனால் அப்பொழுது எதிரிகளாகப் பிரவேசித்தார்கள்; இப்பொழுது ஸ்நேகிதர்களாக அவர்களுக்கு உதவி செய்யச்சென்றார்கள். நூறுவருஷங்களுக்கு முன் ஆங்கிலேயர் ஜெர்மனியர்களுடன் சேர்ந்து பிரெஞ்சுக் காரர்களுடன் யுத்தம் செய்தார்கள்; இப்பொழுது ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு ஜெர்மனியர்களுடன் யுத்தம் செய்கின்றார்கள்.

அப்பொழுது நமது மாட்சிமை தங்கிய ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் தமது படைகளைப் பின்வருமாறு வாழ்த்தியனுப்பினார்:— "எனது சக்கராதிபத்தியத்தின் க்ஷேம

த்திற்காகவும் கௌரவத் திற்காகவும் யுத்தம் செய்வதற்கு நீங்கள் ஸ்வதேசத்தை விட்டுச் செல்கிறீர்கள். நாம் ரட்சிப்பதாகப் பிரதிக்ஞை பண்ணியிருக்கிற பெல்ஜியம் தேசமானது எதிர்க்கப் பட்டிருக்கிறது; சக்திவாய்ந்த அதே எதிரியினால் பிரான்ஸ்படை யெடுக்கப் படப்போகிறது.

எனது யுத்தவீரர்களாகிய உங்களிடத்தில் எனக்குப் பரிபூர்ண நம்பிக்கையிருக்கிறது. கடமையென்பதே உங்களுக்கு ஞாபகத்திருக்கும் வார்த்தை. உங்களுடைய கடமை சிறப்புடன் செய்யப்படு மென்று எனக்குத் தெரியும். மிகவும் ஆழ்ந்த ஆத்திரத்துடன் உங்களுடைய ஒவ்வொரு செயலையும் பின்தொடர்ந்து நான் உங்களுடைய தினசரி முன்னேற்ற ஆவல் மிக்க திருப்தி யுடன் கவனிப்பேன். உண்மையாக உங்களுடைய நன்மை எனது நினைப்புக்களினின்றும் ஒரு பொழுதும் நீங்கியிராது.

கவுள் உங்களை ஆசீர்வதித்து உங்களை ரட்சித்து உங்களை ஜெயத்துடன் ஸ்வதேசத்துக்குத் திரும்பிக் க்ஷேமமாகக் கொண்டு வரும்படி நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

கிச்சனர்பிரபு போர்வீரர்கள் ஒவ்வொருவரும் தமது சம்பளப் புஸ்தகத்தில் கூடவே வைத்துக் கொள்ளும்படி சில புத்திமதிகளை எழுதிக் கொடுத்தார். அது பின்வருமாறு:—"பொது விரோதியினுடைய படை யெடுப்புக்கு விரோதமாக நமது பிரெஞ்சுத்தோழர்களுக்கு உதவி செய்யும்பொருட்டு அரசருடையபோர்வீரனுக நீ வெளித்தேசதிற்குச் செல்லும்படி உத்தரவு செய்யப் படுகிறாய். உனது தைர்யம், உனது சக்தி, உனது பொறுமை இவற்றையெல்லாம் விரும்பக் கூடிய ஒரு வேலையை நீ செய்யவேண்டியிருக்கிறது.

பிரிட்டிஷ் சைந்நியத்தின் கௌரவதையானது உனது தனிப்பட்ட குணத்தைப் பொறுத்திருக்கிறது என்று ஞாபகப் படுத்திக்கொள். பயிற்சிக்கு ஒரு திருஷ்டாந்தமாக

யிருப்பது மாத்திரம் அன்று, இந்த யுத்தத்தில் நீ உதவி செய்பவருடன் ஸ்நேக சம்பந்தங்களையும் வைத்துக்கொள் ளுதல் உனது கடமையாகும்.

நீ செய்யப்போகின்ற யுத்தங்களெல்லாம் ஒரு ஸ்நே கித தேசத்தில் அநேகமாக நடக்கப் போகின்றன. ஒரு பிரிட்டிஷ் யுத்த வீரனுடைய உண்மையான மாதிரியில் நீ பிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் உன்னைக் காட்டிக்கொள்வ தைத் தவிர நீ உன்தேசத்திற்குச் செய்யக்கூடிய மேம்பட்ட ஊழியம் ஒன்றும் இல்லை. சொத்துக்களை யழிக்கும்படி யாக எக்கார்யமும் ஒரு பொழுதும் செய்யாதே. கொள் ளையடித்தல் அவமானகரமான செய்கை யென்று எப்பொ ழுதும் நினைத்துக்கொள்.

நீ எங்கும் வரவேற்கப்படுவதும் நம்பப் படுவதும் நிச் சயம். உனது நடத்தையானது அந்த வரவேற்பையும் அந்த நம்பிக்கையையும் நியாயப்படுத்த வேண்டும்.

நீ சௌக்கியமாயும் திடமாயும் இருந்தாலொழிய, உனது கடமை செய்யப்படமாட்டாது. ஆதலால் சிற்றின் பங்களில் மிதமிஞ்சி விடாமல் அடிக்கடி ஜாக்கிரதையாக விருந்துகொள். இந்தப் புதிய அநுபவத்தில் சாராயம், ஸ்திரீயாகிய இவ்விரண்டினிடத்திலும் நீ தூண்டுதல்க ளைக் காண்பாய். நீ இரண்டு தூண்டுதல்களையும் முழுதும் எதிர்க்கவேண்டும்; எல்லா ஸ்திரீகளையும் முழுமரியாதையு டன் நடத்தவேண்டும்; ஆனால் எவ்விதமான நெருக்கத்தை யும் நீக்கவேண்டும்.

உனது கடமையை தைர்யமாகச் செய், கடவுளிடத் தில் பயப்படு, அரசருக்குக் கௌரதை செய்."

ஆ! ஆ! எத்தகைய உயர்ந்த உபதேசம்! இம்மாதி ரிக கொள்கைகளை பிரிட்டிஷ் யுத்த வீரர்கள் கைக்கொண் டிருக்கிறதினாலல்லவோ, அவர்கள் உலகு முழுதிலும் ஆணை செலுத்தி வருகிறார்கள்.

இவ்விதமாக பிரான்ஸில் வந்து இறங்கிய பிரிட்டிஷ் யுத்த வீரர்கள் வீண்காலம் போக்காமல் நேரே யுத்தகளம் சென்றார்கள். ஆகஸ்டுமீ 22-ம் தேதி பிரிட்டிஷ் படையானது பிரெஞ்சுப் படையுடன் சேர்ந்துகொண்டு பெல்ஜியத்தின் எல்லைப்புறத்தில் உள்ள மான்ஸ் என்ற நகரத்திற்கருகில் ஜெர்மனியர்களை எதிர்த்துக் கடுமையான யுத்தம் புரிந்தது. ஆகஸ்டுமீ 24-ம் தேதியன்று பிரிட்டிஷ் படைகளும் பிரெஞ்சுப் படைகளும் சார்லிராய் என்ற இடத்தில் ஜெர்மனியர்களை எதிர்த்து யுத்தம் செய்தன. யுத்தம் மிகப் பயங்கரமாக இருந்தது. ஜெர்மனியர்கள் அடைந்த சேதத்திற்கோ அளவேயில்லை; பிரிட்டிஷ் படைகள் முன்னின்று யுத்தம் செய்தனவாதலால், இரண்டாயிரம் பிரிட்டிஷ் வீரர்கள் கொல்லப்பட்டார்கள். பிரெஞ்சு சைந்நியாதிபதியாகிய ஜாப்ரி என்பவருடைய உத்தரவின் மேல் பிரெஞ்சுப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் சிறிது பின் சென்றன. ம்யூஸ் நதிக்குக் கிழக்கிலும் மேற்கிலுமாக ஒரு பயங்கரமான யுத்தம் நடந்தது. பிரிட்டிஷ்படைகளின் பீரங்கிசெயல்களும் துப்பாக்கிச்செய்கைகளும் மிகவும் வியக்கத்தக்கன. இப்பொழுதும் நேசப்படைகள் பின்செல்லவேண்டிவந்தது. ஆனால் பிரிட்டிஷ் படைவீரர்கள் பின்செல்ல இசையவில்லை; எதிரியை அடித்துத் துரத்த வேண்டுமென்றஒரு எண்ணத்தைத்தவிர, வேறுஎண்ணமே அவர்களிடத்தில் இல்லை. ஆயினும் சைந்நியாதிபதிகள் பின்செல்வதற்கு உத்தரவு கொடுத்து விட்டபொழுது, சாதாரண போர்ச் சேவகர்களால் என்செய்ய முடியும் இவர்களும் கீழ்ப்படிய வேண்டியதாயிற்று.

எந்த யுத்தத்திலும் யுத்ததந்திரமென்று ஒன்று உண்டு. அது புத்தியை உபயோகித்துச் சமயத்திற்குத் தக்கபடி செய்து யுத்தத்தில் ஜெயமடைவதுதான். நேசப் படைகள் ஏதோயோசனை செய்துகொண்டு ஒருதந்திரம் செய்ய ஆரம்பித்தார்கள். கடுமையான போர்புரிந்து ஜெயமடைவது நிச்சயமாய் விட்டசமயத்தில் பின்செல்ல ஆரம்

பித்தார்கள். இப்பொழுது நடந்த யுத்தங்களில் ஜெர்மனியர்கள் பட்டாளம் பட்டாளமாக அழிக்கப் பட்டார்கள். ஆனாலும் ஜெர்மனியர் வெள்ளம் போலப் பெருகிமுன் சென்றார்கள்.

லட்சக்கணக்காக ஜெர்மனியர்கள் மேல்விழுந்ததில் அவர்களை முறியடிப்பதற்கு தந்திரம் செய்ய வேண்டிவந்தது. தந்திரம் செய்கிற காரணத்தை வைத்துக் கொண்டு, நேசப்படைகள் ஓடவில்லை; கடுமையான போர்புரிந்து கொண்டு மெல்ல மெல்லப்பின் சென்றார்கள். ஜெர்மனியர்கள் பிரான்ஸூக்குள் நுழைந்து அதன் பிரதான நகரமாகிய பாரிஸைப்பிடித்து விடவேண்டுமென்று வைராக்கியம் வைத்துக்கொண்டு மிகவும் சந்தோஷத்துடன் முன்சென்றார்கள். அங்கே பாரிஸில் பிரெஞ்சுக் காரர்கள் அதைக் காக்கும் பொருட்டு வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். பிரான்ஸினுடைய ராஜதானியானது பாரிஸிலிருந்து போர்டோவுக்கு மாற்றப்பட்டது. முக்கியமான சமாசாரப் பத்திரிகைகளெல்லாம் போர்டோவிலிருந்தே வெளியாயின. ஸ்திரீகள், குழந்தைகள், கிழவர்கள் எல்லோரும் இஷ்டப் பட்டால் பிரான்ஸின் உள்நாட்டுப் புறங்களுக்குச் சென்றுவிடலாமென்று எச்சரிக்கப் பட்டார்கள். பாரிஸின் சுற்றுப்புறத்துள்ள இடங்களில் இருந்த வீடுகளெல்லாம் இடிக்கப் பட்டன. பாரிஸைக் காப்பதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ, அவ்வேற்பாடுகள் எல்லாம் செய்யப் பட்டன.

காம்பீன் காட்டில் பிரிட்டிஷ் குதிரைப்படைகள் ஜெர்மனியர்களைத் துரத்தியடித்துப் பத்து பீரங்கிகளைப் பிடித்துக் கொண்டன. ஆனாலும் ஜெர்மனியர்கள் தங்களுடைய தொகை மிகுதியால் முன்னேறிக் கொண்டே வந்தார்கள். ஜெர்மனியர்களுடைய குதிரைப்படைத் தலைவர்களில் ஒவ்வொருவரும் முதலாவதாகப் பாரிஸில் கால்வைக்க வேண்டுமென்று போட்டிபோட்டுக்கொண்டு தங்களுடைய படைகளை நடத்தினார்கள். சென்ற நாற்பது வருஷங்களாக ஜெர்

மனியர்களுக்கு இருந்த ஆசை இதுவே. பாரிஸ் பிடிபட்டு விடுமோ என்று எல்லோரும் பயந்தார்கள். பாரிஸிலுள்ள ஜனங்கள் ஊரை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் கிச்சினர் பிரபு எல்லோருக்கும் தைரியம் சொன்னார். பாரிஸ் நகரத்திலிருந்து 16 மைல்தூரத்தில் ஜெர்மனியர்கள் நிற்கும் படியாக பாரிஸ் கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன வென்றும் கோட்டைகளைப் பிடிக்காமல் நகரத்தில்துன்பத்தை விளைவிப்பதற்கு ஜெர்மனியர்களிடத்தில் அவ்வளவு தூரம் செல்லக்கூடிய பீரங்கிகள் இல்லை யென்றும் கிச்சினர் பிரபு சொன்னார். ஆகஸ்டுமீ 23-ம் தேதி முதல் ஆகஸ்டுமீ 30-ம் தேதி வரையில் பிரிட்டிஷ் படைகள் இடைவிடாது யுத்தம் செய்தன. இவ்வொரு வாரத்திற்குள் 15,000 பிரிட்டிஷ் வீரர்கள் மரணமடைந்தார்கள். ஆனால் ஜெர்மனியர்களுக்குள் 62,000 பேர் மரணமடைந்தனர். இவ்விதமாக ஜெர்மனியர்கள் ஆயிரக்கணக்காகக் கொல்லப்பட்டபோதிலும், மேலும் மேலும் சென்று பாரிஸுக்குப் பதின்மூன்று மைல்தூரத்தில் வந்துவிட்டார்கள். இதுவரையில் ஜெர்மனியர்களுக்கு அநுகூலமாக அடித்த காற்று இப்பொழுது பிரதி கூலமாக அடிக்க ஆரம்பித்து விட்டது. அவுர்ஸ் நதிக்கரையிலும் மார்ன் நதிக்கரையிலும் நடந்தயுத்தத்தில் ஆயிரக்கணக்கான ஜெர்மனியர்கள் கொல்லப்பட்டார்கள். பீரங்கிகளையும் காயமடைந்தவர்களையும் அங்கங்கே விட்டு விட்டு ஜெர்மனியர்கள் புறமுதுகிட்டோடினார்கள். எவ்வளவு வேகமாகஜெர்மனியர்கள் நேசப்படைகளை முன் தள்ளிக்கொண்டு பாரிஸுக்குப்பக்கத்தில் வந்தார்களோ, அதைப் பார்க்கிலும் அதிவேகமாக இப்பொழுது பின் செல்ல ஆரம்பித்தார்கள்.

அத்தியாயம் 10.

நேசப்படைகள்.

ஜெர்மனியர்கள் தாங்கள் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு திரும்பிச் செல்ல ஆரம்பிக்கவே, செப்டம்பர்மீ 10-ம் தேதியிலும் 11-ம் தேதியிலுமாக நேசப்படைகள் ஆறுயிரம் ஜெர்மனியர்களைக் கைதிகளாகவும் 15 பீரங்கிகளையும் பிடித்துக்கொண்டார்கள். மார்ன் நதிக்கரையில் நடக்கும் யுத்தமே பெரிதானதாயும் ஏதேனும் ஒரு முடிவைத் தெரியப்படுத்தக் கூடியதாயும் இருக்குமென்று இரு கட்சியாரும் நினைத்திருந்தார்கள். ஜெர்மனிய சைந்நியாதிபதி தமது ஜனங்களுக்கு அங்ஙனமே தெரிவித்திருந்தார். நேசப்படைகளின், அல்லது பிரெஞ்சுப் படைகளின் சைந்நியாதிபதியாகிய ஜாப்ரியென்பவரும் செப்டம்பர்மீ 8-ம் தேதி "நமது தேசத்தின் நன்மையானது பொறுத்திருக்கிற யுத்தத்தின் ஆரம்பத்தில், பின்னுக்குப் பார்க்கும்படியான நேரம் இது அன்றென்று நான் உங்களுக்கு ஞாபகப் படுத்த வேண்டும். எதிரிகளை எதிர்த்துப் பின்னுக்குத் துரத்திவிடுவதற்கே எல்லா முயற்சிகளும் செய்யப்பட வேண்டும். முன் செல்ல முடியாத ஒரு சைந்நியமானது தான் ஜெயித்த இடத்தை எவ்விதத்திலும் காப்பாற்றிக் கொண்டு, இடம் விட்டுக்கொடுப்பதைப் பார்க்கிலும் அந்த இடத்தில் கொல்லப்படுதற்குத் தயாராயிருக்க வேண்டும். இப்போதிய சந்தர்ப்பங்களில் யோசனை செய்வதற்கே இடம் இல்லை." என்று தமது படைகளுக்குத் தெரிவித்தார்.

ஜெர்மனியர்களுடைய வலது பக்கப் படையும், இடது பக்கப் படையும் மத்தியிலிருக்கும் படையும் துணைப் படைகளும் எல்லாமாகப் பின் செல்ல ஆரம்பித்துவிட்டன. நான்ஸியில் பத்துநாட் சண்டையில் 20,000 போர்வீரர்களையும் லூனவில்லி யுத்தத்தில் 11,000 போர்வீரர்களையும் ஜெர்மனியர்கள் இழந்து விட்டார்கள். நான்ஸி யுத்தமா

னது ஜெர்மன் சக்கரவர்த்தியின் கண்களுக்கு முன்பாகவே நடந்தது. அலாஸ்ட் என்ற இடத்தில் பெல்ஜியர்கள் ஜெர்மனியர்களை அடித்துத் துரத்தினர்கள். ஜெயிக்கப்பட்ட பெல்ஜியத்திற்குக் கவர்னராக ஜெர்மன் சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்ட சைந்நியாதிபதி வான்டேர்கால்ட்ஸ் என்பவர் ஆண்ட் வெர்புக்குச் சென்று பெல்ஜிய அரசாங்கத்தாரிடத்தில் தமது பக்கம் சேர்ந்துகொள்ளும்படி முன் போலவே போய்ச் சொல்லிப் பார்த்தார். பெல்ஜிய அரசாங்கத்தார் மறுத்துவிட்டனர்.

ஜெர்மனியர்களுக்கு ஏக்கம் ஒரு பக்கம், அவமானம்ஒரு பக்கம், விசனம்ஒருபக்கம், கோபம் ஒருபக்கம்எல்லாம்சேர்ந்துகொண்டுவிட்டது. பாரிஸுக்குப்பதின்மூன்றுமைல் தூரத்தில் சென்றுபின்னுக்குத் திரும்புவதென்றால்எவருக்குத் தான்வருத்தமாயிராது? அங்கங்குஜெர்மனியர்சிறுசிறுகூட்டங்களாக நேசப்படைகளிடத்தில் அகப்பட்டுக் கொண்டாாகள். ஜெர்மனியர்களைத் துரத்திக்கொண்டே சென்ற நேசப்படைகளுள் ஒரு பிரிட்டிஷ் படையின் சைந்நியாதிபதியாகிய ஸர்ஹோரேஸ் ஸ்மித் டோரியன் என்பவன் தமது உத்தியோகஸ்தர்களைப் பார்த்து "நீங்கள் நன்றாக யுத்தம் செய்தீர்கள்; ஆனால் யுத்தகளத்திற்கு இன்னும் 9 மைல் தூரம் நீங்கள் தள்ளிக்கொண்டு போக வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஜெர்மனியர்களை ஓட்டத்திலேயே வைக்க வேண்டுமென்று எதிர்பாக்கிறோம், என்றார். அவருக்கு அவ்வளவு சந்தோஷமும் உற்சாகமும் உண்டாய் விட்டன. ஜெர்மனியர்கள் ஓடுகிற ஓட்டத்தில் அவர்கள் செய்த அக்கிரமங்கட்குக் கணக்கு வழக்கில்லை. ஜெர்மனியர் ஸென்லிஸ் என்றபட்டணத்தைக் கைப்பற்றி 10 நாட்கள் வரையில் அங்குதங்கியிருந்து பின்னர் விநோதத்தின் பொருட்டு அந்நகரை அழித்து விட்டார்கள். அந்நகர அதிபரையும் இன்னும் இரண்டு பிரபுக்களையும். தெருவில் நிறுத்திச் சுட்டுக் கொன்றார்கள். அந்தப் பிரபுக்களுடைய மனைவி மக்கள் பக்கத்திலிருந்தாலும், அவர்களுடன் பேசவிட

வில்லை. சாராயக் கிடங்குகளிலிருந்து சாராயப்புட்டிகளை யெல்லாம் கொள்ளையடித்து ஜெர்மனியர்கள் மிதமிஞ்சக் குடித்துப் புட்டிகளை யெல்லாம் உடைத்துத் தெருக்களில் வீசியெறிந்தார்கள். அவர்கள் புறமுதுகிட்டு ஓடியபொழுதும், இப்படியேதான் காயப்பட்டவர்களையும் வியாதியஸ்தர்களையும் கவனியாமல் போட்டது போட்டது போலவே ஓடினார்கள். வழியெல்லாம் பிணக்குவைகள் நிறைந்தன. சைந்நியாதிபதி எம்மிக் என்பவருக்கு வீரத்தனம் இல்லையென்று கண்டித்த ஜெர்மன் இளவரசர் யுத்தகளத்திலினின்றும் ஓடினார்.

ஜெர்மனியர்கள் எயின் நதிக்கு வடக்குக்கரையில் நின்று கொண்டு எதிர்த்தார்கள். பாரிஸ்வரையில் வந்துவிட்டுத் திரும்பி ஜெர்மனியப் படைகள் எயின் நதிக்குப் போவதற்குள்ளாக, எயின் நதிக்கரையில் வேறுஜெர்மனியப் படைகள் பள்ளங்கள் தோண்டி ஜெர்மனியர்கள்நின்று யுத்தம் செய்வதற்கு எற்ற நிலைமைகளை எற்படுத்தித் தயாராக வைத்திருந்தன. செப்டம்பர்மீ 3-ம் தேதி ரீம்ஸ் என்ற நகரத்தை ஜெர்மனியர்கள் பிடித்துக் கொண்டார்கள்; அந்த ஊரில் பெரிய தனக்காரர்களா யிருந்த 81 பேரை அந்தஊர் அடங்கி அமைதியா யிருப்பதற்காக ஜாமீன் கைதிகளாகப் பிடித்துக் கொண்டு, ஊரில் ஏதேனும் கொஞ்சம் குழப்பம் எற்பட்டால் உடனே இந்த 81 பேர்களையும் கொன்று விடுவதாகவும் ஊரையே கொள்ளையடித்துக் கொளுத்தி விடுவதாகவும் ஜெர்மனிய சைந்நியாதிபதி அறிக்கை செய்வித்தார். ஆனால் கடவுள் கிருபையால் செப்டம்பர்மீ 13-ம் தேதியன்று அந்தஊர் மறுபடியும் நேசப்படைகளின் கைவசமாயிற்று.

எயின் நதியைக் கடந்து ஒருபக்கத்தில் நேசப்படைகள் இப்புறம் வந்து கொண்டிருக்கையில், பின்னுக்கு ஜெர்மனியர்கள் துரத்திக் கொண்டு வந்தார்கள். குறுக்கே யொருபாலம் இருந்தது. அப்பாலத்தைத் தாண்டிப் பிரிட்டிஷார் வந்துவிட்டனர். பாலத்திற்கு அப்புறம் ஜெர்மனி

யர் வந்துகொண்டிருந்தனர். குறுக்கேயுள்ள பாலத்தை பிடித்து விட்டால்தான், ஜெர்மனியர்கள் துரத்திவர மாட்டார்கள் என்று தோன்றிற்று. பாலத்திற்கு அடியில்வெடி மருந்தைவைத்து நெருப்பைக் கொளுத்திப் பாலத்தை உடைத்து விடவேண்டும். பன்னிரண்டு இஞ்சினீயர்கள்—எல்லோரும் பிரிட்டிஷார்—முயற்சி செய்தார்கள். ஒருவருக்குப்பின் ஒருவராக எதிரிகளுடைய குண்டுகளை லட்சியம்பண்ணாமல் பாலத்தின் அடிக்குப்பாய்ந்தார்கள். ஆனால்ஒருவர் பின் ஒருவராகச் சுடப்பட்டார்கள். இம்மாதிரிபதினொரு பிரிட்டிஷ் இஞ்சினீயர்கள் மாண்டார்கள். ஆனால்பன்னிரண்டாவதாக ஒருவர் திடீரென்று தாவிக் குதித்துப் பாலத்தின் அடியில் நெருப்பைக் கொளுத்திப் பாலத்தை உடைத்துவிட்டார்; உடனே ஒருஜெர்மனியன் அவரையும் சுட்டுக் கீழே விழ்த்தி விட்டான் ஆ! ஆ! என்ன தைரியம்.

ஜெர்மனியர்களுக்கும் நேசப் படைகளுக்கும் எயின் நதிக்கரையில் பலமான யுத்தம் அநேக நாட்களாக நடந்தது. சிறிது முன் செல்வதும சிறிது பின் செல்வதுமாக இருகட்சியாரும் இருந்தார்களே யொழிய, தீர்மானமான ஜெயம் தெரியும்படி யுத்தம் நடக்கவில்லை. செப்டம்பர் மீ 17-ம் தேதியன்று ஜெர்மனியர்கள் டிர்லிமாண்டி என்னும் நகரை மூன்றாவது தடவைதாக்கி ஆஸ்பத்ரியில் ஒருபாகத்தையும் அங்குள்ள கோவிலையும் விட்டு விட்டு மற்ற கட்டடங்கள் எல்லாவற்றையும் அழித்துவிட்டார்கள். கோவிலினும் கோபுரம் சேதப்படுத்தப்பட்டது. இன்னும் ரீம்ஸ்நகரைத்தாக்கி அங்குள்ள தேவாலயத்தை இடித்து விட்டார்கள். ரீம்ஸ்தேவாலயமானது ஐரோப்பாவில் அழகு மிகுந்த கட்டடங்களுள் ஒன்று; அற்புதமான சித்திரவேலைப் பாடுகள் அமைந்தது. இந்ததேவாலயத்தை இடித்து வீழ்த்தினதைப் பற்றி நாகரீக உலகமானது ஜெர்மனியர்களைச் சபித்தது. அறிவுள்ளோர் எல்லோரும் ஜெர்மனியர்களை இகழ்ந்தனர். பிரெஞ்சுப் போர்வீரர்கள் அந்த தேவாலயத்திற்

குள்ளிருந்து ஜெர்மனியப் படையைச் சுட்டதினால், ஜெர்மனியப் படை ரீம்ஸ் தேவாலயத்தைத் தாக்க வேண்டி நேரிட்டது என்று ஜெர்மனியர்கள் சாக்குப் போக்குச் சொன்னார்கள். என்ன வென்றாலும், இப்பொழுது அழிந்து பாழாய்க் கிடக்கும் லோவெயின், மாலின்ஸ், டேர்மாண்டி, ரீம்ஸ் தேவாலாயம் இவையெல்லாம் தற்காலத்திய ஜெர்மனியர்களுடைய மிருகத் தனத்தை ருசுப்படுத்து கின்றன. ஜெர்மனியர்கள் சென்ற விடத் தெல்லாம் பைசாசங் கள் போல நடந்தார்கள்; பெண்டு பிள்ளைகளை யெல்லாம் பற்பல அவமானங் கட்கு உட்படுத்திக் கொன்றார்கள். இவ்விதமாக எயின் நதிக்கரையில் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான மைல் விஸ்தீர்ணத்தில்ஒரு யுத்தம் நடப்ப தென்றால், ஒரு இடத்தில் ஒருவர் முன்னேறுவதும், இன்னொரு இடத்தில் அவரே பின் செல்வதுமாய்ப் பறபல விதங்களாகயுத்தங்கள் நடக்கும். அதுபோல வே எயின் நதிக்கரையிலும் இன்னாருக்குத்தான் ஜெயம் என்று சொல்ல முடியாமல், சண்டை நடந்து கொண்டிருந்தது. ஆனால் மொத்தத்தில் பார்த்ததால், நேசப்படைகள் ஜெர்மனியர்களை மேலும்மேலும் நெருக்கிக் கொண்டு வந்தன போலவே தோன்றிற்று.

இச்சமயத்தில் ருஷியர்கள் ஆஸ்டிரியாவைச் சேர்ந்த கலீஷியா நாட்டில் பிரவேசித்து, லெம்பர்க் என்னும் நகர்வரையில் ஆஸ்டிரியர்களைத் துரத்தியடித்துக் கொண்டே வந்து விட்டார்கள்; இதுமாத்திரமன்று, லெம்பர்க்கையும் பிடித்துக் கொண்டார்கள். அங்கிருந்தும் இன்னும்உள்ளே பிரவேசித்து ப்ரேஸிம்ஸில் என்னும் நகரின்கோட்டையையும் கைவசப்படுத்திக்கொண்டார்கள்.

இருபக்கத்திலும் யுத்தமானது இப்படி நடந்துகொண்டிருக்க, ஜெர்மன் சக்கரவர்த்தி ப்ரஸ்ஸெல்ஸ்நகரத்தில் தம்முடைய சிற்றரசர்களையும் பிரபுக்களையும் சைந்நியாதிபதிகளையும் வரவழைத்து அவர்களிடத்தில் ஏதோ யோ

சனை செய்தார். பின்தாமே லட்சக்கணக்கானபோர்வீரர்களைக் கூட்டிக்கொண்டு கிழக்குப்ரஷ்ஷியாவுக்கு ஜெர்மன் சக்கரவர்த்தி புறப்பட்டுப் போனார். ஜெர்மனியர்கள் மாலின்ஸ் என்னும் நகரத்தை மறுபடியும் தாக்கினார்கள். ஜெர்மனியப்படைகளில் மிகுதியும் ஆண்ட்வெர்ப்பை நோக்கிச் சென்றன. ஆண்ட்வெர்ப்பைத்தாக்க ஜெர்மனியர்கள் தீர்மானித்து விட்டார்கள் போலும்! முன்னொரு தரம் ஆண்டவெர்ப்பைத் தாக்குவதற்கு இவர்கள் முயற்சி செய்தார்கள்; ஆனால் அப்பொழுது தென்புறமிருந்து தாக்கினாகள். பெல்ஜியர்கள் ஷெல்ட் நதியின் அணைகளையெல்லாம் திறந்து விட்டார்கள்; ஜெர்மனியர்களில் அநேகர் தண்ணீரில் அமிழ்ந்தி யிறந்தார்கள்; அநேகர் நீந்தித்தப்பித்துக் கொண்டார்கள். அநேகர் தண்ணீரிலிருந்து தப்பித்துக்கொள்ள யத்தனிக்கும் போது பெல்ஜியர்களால் சுடப்பட்டார்கள். இவ்விதமாக ஜெர்மனியர்களுடைய படைகள் அலங்கோலமடைந்தன. இப்பொழுது ஜெர்மனியப்படைகள் ஆண்ட்வேர்ப்பைக் கிழக்கிலிருந்து தாக்குவதற்கு யோசனை செய்தன. ஆண்ட்வெர்ப்புக்குப் போகும் வழியில் ஜெர்மனியப்படைகள், தங்களுடைய வழக்கப்பிரகாரம் அநேக கொடூரங்கள் செய்துகொண்டே போயின.

ஆண்ட்வேர்ப்கோட்டைகள் முற்றுகையிடப்பட்டன. ஜெர்மனியர்கள் தங்களுடைய ராட்சஸ பீரங்கிகளைக் கொண்டுவந்து வைப்பதற்கு பெரியபெரிய மேடுகள் கட்டி இடங்கள் அமைத்துக்கொண்டார்கள்.

அத்தியாயம் 11.

கடற்படையும் ஆகாயப்படை

முன்காலத்தில் அரசர்களுக்குக் கரைப்படை யொன்றுதான் உண்டு; கரையிலேயே சகல யுத்தங்களும் செய்வார்கள். இப்பொழுது மனிதர்கள் கரையைப் போலவே கடலையும் வியாபாராதி வசதிகளுக்கும் மற்றும் உபயோகித்து வருவதால், கடலிலும் அரசர்கள் தங்களுடைய சௌகர்யத்தை உத்தேசித்தும் ஸ்வயரட்சைக் காகவும் படைகளை வைத்துக் கொள்ள வேண்டி வந்தது. இதேமாதிரியாக, தற்கால நாகரீகமும் கல்வியும் விருத்தியாக ஆக ஆகாயத்திலும் பறந்து அந்நியப் படைகளின் நிலைமைகளை அறிவதற்கும் அந்நியப்படைகளுக்கு சேதத்தையுண்டாக்குவதற்கும் ஆகாயவிமானங்களும் ஆகாயக் கப்பல்களும் தயார் செய்யப் பட்டன.

இங்கிலாந்து தேசமானது உலகில் முதன்மைபெற்று இருப்பதினாலும், நான்கு பக்கங்களிலும் சமுத்திரங்களினால் சூழப் பட்டிருப் பதினாலும் கடற்படையைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமாயிற்று. அப்படியே இப்பொழுது இங்கிலாந்தின் கடற்படைதான் முதன்மையாக நிற்கிறது. பொறுமையும் போதாமையும் கொண்ட வேற்றரசுகள் திடீரென்று பாய்ந்து இங்கிலாந்தின் மீது படை யெடுக்காதிருக்கும் பொருட்டு, இங்கிலாந்துக்குக் கடற்படை வேண்டியது தான். ஜெர்மனிக்கு மூன்று பக்கங்களில் பூமியும் ஒருபக்கத்தில் கடலும் இருக்கின்றன அந்தக் கடலும் அதற்கே சேர்ந்தது. அந்தக் கடலுக்கு எத்தனை படைக் கப்பல்கள் தேவையோ, அவற்றைத் தயார் செய்து வைத்துக் கொண்டால், நன்றாயிருந்திருக்கும். தன்னைக்காத்துக் கொள்ள வேண்டியதற்கு வேண்டிய கடற்படைகளுக்கு மிதமிஞ்சி ஜெர்மனிதயார் செய்ய ஆரம்பித்தபொழுதே, ஜெர்மனி தனது ஸ்வயரட்சயைக்காக்க கடற்படை வைத்திருக்கவில்லை

யென்றும் ஏதோ ஒருபிரதேசத்தை படை யெடுப்பதற்கே என்றும் ராஜதந்திர நிபுணர்கள் அறிந்து விட்டார்கள். ஐரோப்பாவில் உள்ள மற்றதேசங்கள் எல்லாம் தங்களைத் தாமேகாத்துக் கொள்வதற்கு எத்தனை கடற் படைகள் அவசியமோ அத்தனையே வைத்துக் கொண்டிருந்தன.

1914-ம் வருஷம் ஜூலை ம்௴ 31-ம்தேதி ஆங்கில அரசாங்கத்தார் ஐரோப்பாவின் தென்கிழக்கு மூலையில் புகை மிகுந்து கங்குள் பறப்பதைக் கண்டு ஏதோ பெருந்தீ பிடித்து விட்டதென்று நிச்சயித்து அத்தீ இங்கிலாந்துக்கும் பரவி விட்ட தென்றால் என்ன செய்கிறது என்று ஆலோசித்து முன்யோசனையாக கடற்படையாளர்களுக்குக் கண்டிப்பான உத்தரவுகள் கொடுத்து கப்பல்துரைகளெல்லாம் சுறுசுறுப்பா யிருக்கும்படி செய்தனர். மண்ணைக்கிணறுகள் உள்ள இடங்களுக்குப் பக்கத்தில் வரும்படியாக நேரிடும் எதிரியினுடைய ஆகாயக் கப்பல்களைச் சுட்டு வீழ்த்துவதற்காகப் பிரத்தியேகமான பீரங்கிகள் மேடைகளில் ஏற்றிநிறுத்தப் பட்டன. மத்தியதரைக் கடலிலுள்ள கப்பற்படை முழுதும் மால்ட்டா என்னும் தீவில்ஒன்று சேர்க்கப்பட்டது. வேல்ஸ்தேசத்தில் நிலக்கரிச் சுரங்கங்களின் சொந்தக் காரர்கள் நிலக்கரி முழுதையும் சேகரித்து வைக்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டார்கள். இங்கிலீஷ் சக்கராதி பத்தியத்திற்குட்பட்ட எல்லாதேசங்களிலும் இருக்கும் ஆங்கிலக் கடற்படையைச் சேர்ந்த வீரர்கள் அனைவரும் உடனே இங்கிலாந்து வந்துசேர வேண்டுமென்று உத்தரவு கொடுக்கப்பட்டது.

ஆகஸ்டு ம்௴ 4-ம்தேதியன்று ஜெர்மன் கடற்படை முழுதும் கீல்வாய்க்காலின் வழியாக வடகடலுக்கு வந்து விட்டன என்று கோப்பன்ஹேகன் என்ற நகரத்திலிருந்து ஒரு தந்திவந்தது.

மத்தியதரைக் கடலிலுள்ள ஆங்கிலேயக் கப்பற்படை யுத்தத்திற்குத் தயாராய்விட்டது. இக்கப்பற்படை

யைச் சேர்ந்த நாசகாரிகள் தமது முழுவேகத்துடன் பிரெஞ்சுக் கப்பற்படையுடன் சேர்வதற்குச் சென்றன. வெளியில் யுத்தத்திற்குத் தயாராகச் சென்ற கப்பல்களைத் தவிர, மால்ட்டாவில் இருந்த மூன்று கப்பல்களும் யுத்தத்திற்கு எந்தநிமிஷத்திலும் தயாராயிருக்கும்படியான ஸ்திதியில் இருந்தன. மால்ட்டா வென்பது மத்தியதரைக் கடலில் ஸிஸிலி என்னும் தீவுக்குத்தெற்கே 58 மைல்தூரத்தில் உள்ள தீவுக்கூட்டங்களில் முக்கியமானது; மத்தியதரைக் கடலில் ஆங்கிலேயர்களுக்கு ஆதாரபலமா யுள்ளது. இத்தீவுக்குப் பிரதானபட்டணம் வாலெட்டா என்றபெயருடையது. லண்டனிலிருந்து வாலெட்டாவுக்கு நேரே கப்பலில் எட்டு நாள் பயணம். இப்பொழுது யத்தம் ஆரம்பமான வுடனே, மால்ட்டாவில் ராணுவச் சட்டம் விளம்பரப் படுத்தப்பட்டது.

ஆப்பிரிக்காவிலுள்ள கானரீ தீவுகளுக்குப் பக்கத்தில் இரண்டு ஜெர்மனிய போர்க்கப்பல்கள் காணப்பட்டன என்று சொல்லப்பட்டது.

ஆஸ்டிரேலியா, கானடா, ந்யூஸீலாண்ட் முதலிய குடியேற்ற நாடுகளில் கடற்படைகள் சேர்க்கப்பட்டுத் தயார் செய்யப்பட்டன. ஆஸ்டிரேலியாவும் ந்யூஸீலாண்டும் தங்களுடைய கடற்படைகளை யெல்லாம் இங்கிலாந்திலுடைய அதிகாரத்திற்குள் வைத்துவிட்டன. அந்த அந்த தேசங்களின் ஆகாயப் படைகள் சொந்த தேசங்களின் எல்லைகளைத் தாண்டிப் பறந்தன. ஆப்பிரிக்காவிலுள்ள அல்ஜியர்ஸ் என்னும் நகரத்துக்குப் பக்கத்தில் பிரெஞ்சுக் கப்பற்படை யொன்று ஜெர்மன் யுத்தக் கப்பல்களாகிய "பான்தர்" "கோபன்", "ப்ரெஸ்லா" என்ற மூன்றையும் சமுத்திரத்தில் அமிழ்த்திவிட்ட தென்று சொல்லப்பட்டது. ஆனல் "பான்தர்" மாத்திரம் அமிழ்த்தப்பட்ட தென்பது வாஸ்தவமாயிற்று; ஏனென்றால் கோபனும் ப்ரேஸ்லாவும் தப்பித்துக்கொண்டு டார்டனேல்ஸ்ஜலஸந்திக்குள் நுழைந்துகொண்டன. 2,50,000பவுன்

விலை மதிப்புள்ள சரக்குகளைக் கொண்டுபோய்க் கொண்டிருந்த "பெல்ஜியா" என்னும் பெயருடைய ஜெர்மன் வியாபாரக் கப்பல் ஒன்றை பிரிட்டிஷார் பிடித்துக்கொண்டனர். மத்திய தரைக்கடலிலிருந்த ஜெர்மன் போர்க்கப்பல்கள் அல்ஜீரியக் கடற்கரையிலிருந்த சில பட்டணங்களை அழித்து விட்டனவென்று ஜெர்மனியர்கள் சொல்லிக் கொண்டார்கள். ஜெர்மன் கப்பற் படைகளுக்கு முக்கிய தலைவராய் வான் இங்கேனுல் என்பவர் நியமிக்கப்பட்டார். வடகடலில் வந்த ஜெர்மன் வியாபாரக் கப்பல்களெல்லாம் பிரிட்டிஷாரால் பிடிக்கப்பட்டன.

ஆகஸ்டுமீ 5-ம்தேதி லீஜ் நகரில் ஒரு ஜெர்மனிய ஆகாயவிமானத்தைக் கண்டு ஒரு பெல்ஜிய ஆகாயவிமானி உயரக் கிளம்பி ஜெர்மனிய ஆகாயவிமானம் இரண்டு துண்டாகும்படி வெட்டி விட்டுத் தன்னுடைய வழியில் தான் போய் விட்டான். ஜெர்மன் ஆகாயவிமானி கொல்லப்பட்டு இறந்தான்.

அங்கங்கு செல்லவேண்டிய வியாபாரக்கப்பல்களெல்லாம் ஜிப்ரால்டரில் கொஞ்சக் காலத்திற்குநிறுத்திவைக்கப்பட்டன. ஆகஸ்டுமீ 9-ம்தேதிஜெர்மன் ஜலமூழ்கிக்கப்பல்கள் சில ஆங்கிலயுத்தக் கப்பல்களை எதிர்த்தன. ஆங்கிலக் கப்பல்களுக்குச் சேதம் ஒன்றும் உண்டாகவில்லை. ஜெர்மன் ஜலமூழ்கிக் கப்பல் அமிழ்த்தப் பட்டது. வடகடலில் கப்பல் யுத்தம் நடந்தன வென்று சில நாட்கள் சொல்லப் பட்டன. ஆனல் அப்படி யொன்றும் பெரும் யுத்தங்கள் நடக்கவில்லை யென்று பின்னர்தெரியவந்தது. கப்பற் படை யுத்தங்களைப் பற்றி யுள்ள சமாச்சாரங்களே வெளியில் வருவது அபூர்வமாய்விட்டது.

"கோபன்," "ப்ரெஸ்லா" என்று சொல்லப்பட்ட இரண்டுஜெர்மன் போர்க்கப்பல்களும் டார்டனெல்ஸ் ஜலஸந்தியில் போகின்ற, வருகின்ற அந்நியர்களுடைய கப்பல்களையெல்லாம் பரிசோதனை செய்யஆரம்பித்தன ஆகஸ்டுமீ 16-

ம்தேதியன்று சில பிரெஞ்சுப் போர்க்கப்பல்கள் சில ஆஸ்டிரியப் போர்க்கப்பல்களை எதிர்த்து இரண்டை அமிழ்த்தி விட்டன, ஒன்றை எரித்து விட்டன. இன்னொன்று வடக்கு நோக்கி ஓடி விட்டது. பிரெஞ்சுப்படைக் கப்பல்கள் மற்றொரு ஆஸ்டிரியக்கப்பலை அமிழ்த்தி, அட்ரியாட்டிக்கடலில் கட்டாரோ வரையில் வியாபாரக்கப்பல்கள் பயமின்றிச் செல்லும்படி செய்துவிட்டன.

பிரான்ஸின் கிழக்கு எல்லையிலுள்ள நான்ஸி என்ற ஊருக்குப் பக்கத்தில் ஒரு ஆகாயவிமானி ஆகாயத்தில் கிழக்கு ஜெர்மன் எல்லைக்குள் நுழைந்து ஒரு ஜெர்மன் ஆகாயக் கப்பலில் இரண்டு வெடிக் குண்டுகளை எறிந்து அழித்து விட்டான். ஒரு ஜெர்மன் ஆகாயவிமானி பிரெஞ்சுக் கொடிகளைப் பறக்கவிட்டுக் கொண்டு ஆகாயத்தில் கிளம்பி லூனவில்லி என்னும் நகரத்திற்கு மேலே பறந்து மூன்று வெடிக்குண்டுகளை எறிந்தான்; நல்லவேளையாக அதிக சேதம் ஏற்படவில்லை.

பிரெஞ்சுக்காரர் அமிழ்த்தியதாகச் சொல்லப் பட்ட ஆஸ்டிரிய யுத்தக் கப்பலிலிருந்தவர்களுக்குள் 201-பேர் இறந்தனர்; 101-பேர் ரட்சிக்கப் பட்டனர்.

ஒரு ஜெர்மன் ஆகாயக் கப்பலானது டென்மார்க்குக்குமேலே 1000 அடி உயரத்தில் பறந்து வடக்குநோக்கிச் சென்றதென்று ஆகஸ்டுமீ 20-தேதி சொல்லப்பட்டது. இதற்கு முன்னமேயே எத்தனை ஆகாயக் கப்பல்களும் சாதாரண யுத்தக் கப்பல்களும் அழிக்கப் பட்டுவிட்டன. "ஆம்பியான்" என்ற ஒரு இங்கிலீஷ் கப்பல் சுரங்கம் தட்டித் தண்ணீரில் அமிழ்ந்தி விட்டது.

ஜெர்மனியின் மேற்கு எல்லையிலுள்ள ஸ்ட்ராஸ்போர்க் என்னும் நகரிலிருந்து ஒருஜெர்மன் ஆகாயக்கப்பல் பறந்து பேடன்வில்லி என்னும் நகரில் வரக்கண்ட பிரெஞ்சுக்காரர்கள் அதைச்சுட்டுவீழ்த்திவிட்டார்கள்; டேர்மாண்டி பக்கத்தில் ஆஷ என்ற நகரத்திற்கு மேலேபறந்து வந்த

ஒருஜெர்மன் ஆகாயவிமானம் தீப்பிடித்துக் கீழேவிழுந்து தூள் தூளாகி விட்டது; அதிலிருந்த உத்தியோகஸ்தர்கள் கொல்லப்பட்டார்கள்.

வடகடலில் ஜெர்மனியர்கள் சுரங்கங்களைப் போட்டு நிறப்பிவிட்டார்கள்; வியாபாரக் கப்பல்களின் கதியெல்லாம் அதோகதியாய் விட்டது. டென்மார்க்கு தேசத்தைச் சேர்ந்தஇரண்டு வியாபாரக் கப்பல்கள் சுரங்கம் தட்டி அமிழ்ந்திவிட்டன. ஜெர்மனியர்கள் "ஹையாடெஸ்," "ஸிட்டி ஆவ்வின் செஸ்டர்" என்ற இரண்டு இங்லீஷ் கப்பல்களைப் பிடித்து அமிழ்த்தி விட்டார்கள் மத்திய தரைக்கடலிலிருந்து ஜெர்மனியக் கப்பற்படையும் ஆஸ்டிரியக் கப்பற்படையும் துரத்தப்பட்டன.

ஆகஸ்டுமீ 24-ம் தேதியன்று இரவு ஒரு ஜெர்மன் ஆகாயக்கப்பல் ஆண்ட்வேர்ப்புக்கு மேலேபறந்து மூன்று வெடிக் குண்டுகளை எறிந்தன. இரண்டுவீடுகள் அழிக்கப்பட்டன; அநேகர் கொல்லப்பட்டனர். ஆண்ட்வெர்ப்பிலிருந்து ஆறுமைல் தூரத்தில் அந்த ஆகாயக்கப்பல் பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது; அதில் இருந்த ஜனங்கள் பிடிபட்டார்கள்.

ஆனால் ஒரு வெடிக்குண்டு அரண்மனைக்குப் பக்கத்தில் விழுந்தது; ஆயினும் அரண்மனையில் சேதம் ஒன்றும் உண்டாகவில்லை.

ஒரு ஜெர்மன் ஆகாயவிமானி பாரிஸ் நகரத்திற்கு மேல்பறந்து ஒரு வெடிக்குண்டை எறிந்தான்; சேதம் உண்டாகவில்லை.

ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதி ஹேலிகோலாண்ட் பக்கத்தில் ஒரு கப்பல் யுத்தம் நடந்தது. பிரிட்டிஷ் ஜலமூழ்கிக் கப்பல்கள் ஹேலிகோலாண்ட் வரையில் சென்று ஜெர்மனியர்களுடைய கடற்படையின் தன்மையை ஆராய்ந்து கொண்டு வந்தன. உடனே பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் சில புறப்பட்டு ஜெர்மன் போர்க்கப்பல்களை எதிர்த்தன.

இந்த யுத்தத்தில் 5 ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் சமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்டன. இந்த ஐந்து ஜெர்மன் யுத்தக் கப்பல்களிலும் இருந்த 1,200 ஜெர்மனியர்களுக்குள் 330 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்; பாக்கி எல்லோரும் யுத்தத்தில் இறந்தார்கள். பிரிட்டிஷ் கப்பல்களில் சில சேதமடைந்தன. பிரிட்டிஷாருக்குள் கொல்லப்பட்டவர்களும் காயப்பட்டவர்களும் 96 பேர் ஜெர்மன் கடற்படை மந்திரியாகிய வான்டிர்ப்பிட்ஸ் என்பவருடைய புத்திரன் இந்த யுத்தத்தில் காயமடையாமல் பிரிட்டிஷாரால் தப்புவிக்கப் பெற்றான்.

செப்டம்பர்ீ 3-ம் தேதி "ஸ்டீடி," "லின்ஸ்பெல்" என்ற இரண்டு பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்கள் வடகடலில் சுரங்கங்களில் அடிபட்டு அமிழ்ந்துவிட்டன. ஆறு பேர் தவறிவிட்டார்கள்; இருவர் காயமடைந்தார்கள்.

என்றாலும், ஜெர்மன் கடற்படை ஜெர்மனியின் கரையோரங்களை விட்டு வெளியேற முடியாமல் பிரிட்டிஷ்கடற்படைகளால் சுற்றிலும் சூழப்பட்டன. ஹெலிகோலாண்டுக்குத் தெற்கே ஆறு மைல் தூரத்தில் ஜெர்மன் சிறு யுத்தக்கப்பலாகிய "ஹீலா"வை துளைகருவி யந்திரம் இட்டுத் துளைத்து அமிழ்த்திவிட்டு "இ-9" என்னும் பிரிட்டிஷ்ஜல மூழ்கிக் கப்பல் தான் சேதமடையாமல் ஜாக்கிரதையாகத் திரும்பி வந்தது. தென்னமெரிக்கக் கடற்கரைக் கருகில் "கேப்ட்ராவல்கர்" என்ற ஜெர்மன் வியாபார யுத்தக் கப்பலை "கார்மேனியா" என்ற பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் எதிர்த்து சமுத்திரத்தில் அமிழ்த்திவிட்டது. ஜெர்மனியர்கள் ஆயுதங்களும் மருந்துகளும் கொண்டு சென்ற ஒரு சிறு கம்பல் அழிக்கப்பட்டது. "கோனிக்ஸ்பெர்க்" என்ற ஜெர்மன் யுத்தக்கப்பல் "பெகாஸஸ்" என்ற பிரிட்டிஷ் யுத்தக் கப்பலை எதிர்த்து உடைத்துவிட்டது. இப்பொழுது இந்த "கோனிக்ஸ்பெர்க்" கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் சுற்றிலும் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களால் அடைபட்டுக் கிடக்கிறது. "ஆவுஜ்" என்ற ஒரு பிரிட்டிஷ் ஜல

மூழ்கிக் கப்பலைக் காணவில்லை. காணமற்போன காரண மும் தெரியவில்லை.

"ஈஜிப்ட்" என்ற பெயரையுடைய ஒரு வியாபாரக் கப் பல் இங்கிலாந்துக்குச் சென்று கொண்டிருக்கும் வழியில் ஆயுதந் தரித்த இன்னொரு வியாபாரக் கப்பலால் தடுக்கப் பட்டது. ஆனால் "ஈஜிப்டு" அதைலட்சியஞ் செய்யாமல் தன முழுவேகத்துடன் முன்னுக்குச்சென்றது. ஆயுதம்தாங்கி யவியாபாரக்கப்பலானது "ஈஜிப்டை"த் துரத்திக் கொண்டே யுத்தக்கப்பல்களுக் கெல்லாம் கம்பியில்லாத்தந்தியினால்சமா ச்சாரம் தெரியப்படுத்தி தனக்குத் துணைவரும்படி கூப்பிட் டது. ப்ளிமத் துறைமுகத் தண்டையில் வரும்பொழுது, சிலபிரிட்டிஷ் யுத்தக்கப்பல்களும் பிரெஞ்சு யுத்தக்கப்பல்க ளும்எதிரேவரவே, " ஈஜிப்ட்" நின்றது. அப்பொழுது தன் னை நிற்கும்படி உத்தரவு செய்த ஆயுதம் தாங்கிய கப்பல் பிரெஞ்சுக் கப்பல்என்று " ஈஜிப்ட்" கண்டுகொண்டது.

அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் இருக்கும் ஜெர் மன் யுத்தக்கப்பல்களுக்கு நிலக்கரியும் ஆகாரமும் கொண் டுசென்ற "ஸ்ப்ரீவால்ட்" என்ற ஆயுதந்தாங்கிய ஜெர்மன் வியாபாரக் கப்பலும் இரண்டு கரிக்கப்பல்களும் செப்டம் பர்மாதம் 12-ம் தேதி "பெர்விக்" என்ற பிரிட்டிஷ் யுத்தக் கப்பலால் பிடிக்கப்பட்டன. பிடிபட்ட இக்கப்பல்களில் 6000டன் நிலக்கரியும் 180டன் ஆகாராதி சாமான்களும் இருந்தன.

செப்டம்பர் மாதம் 22-ம் தேதி ஆண்ட் வெர்ப்புக்குப் பக்கத்தில் வெளிக்கோட்டை களுக்குமேலே ஒரு ஆகாயக் கப்பலானதுதோன்றிற்று. பெல்ஜியர்கள் சோதனைதீபங்களி னல் அதைப்பார்த்து விட்டார்கள். ஆகலால் அதுதான் வந் த வழியைப்பார்த்துக் கொண்டு திரும்பிவிட்டது.

செப்டம்டர் மீ 23-ம் தேதியன்று பிரிட்டிஷ் ஆகாய விமானிகள் இருகட்சியாகப்பிரிந்து ஒருகட்சியார் கோலோ ன் என்றநகரத்தின் பக்கமாகச் சென்றார்கள்; இன்னொரு

கட்சியார் டஸ்ஸெல்டார்ப் என்றநகரத்தின் பக்கமாகச் சென்றார்கள். கோலோன் பக்கத்தில் பூமிகள் மூடுபனியால் நிறைந்திருந்த தினால், அங்குசென்ற ஆகாயவிமானிகள் தாங்கள் போடும் வெடிக்குண்டுகள் எங்கே தேவாலயங்களில் விழுந்து விடுமோ அல்லது குடிஜனங்களைத் துன்பப்படுத்துமோ என்றுபயந்து பேசாமல் திரும்பிவந்து விட்டனர். டஸ்ஸெல்டார்ப் பக்கத்தில் சென்ற ஆகாயவிமானியாகிய லெப்டினெண்ட் காலட் என்பவர் நானூறு அடி உயரத்திலிருந்து கீழேகட்டப்பட்டிருந்த ஆகாயக் கப்பல் சாலையில் மூண்றுவெடிக் குண்டுகளை யெறிந்தார். அச்சாலையின் சிலஜென்னல்கள் உடைந்துவிட்டனவாம். இதற்குமேல் நடந்தசேதம் ஒன்றும் வெளியில் தெரியவில்லை.

"ஹோக்," "க்ரெஸ்ஸி" "அபௌக்கிர்" என்ற மூன்று யுத்தக்கபபல்கள் ஜெர்மன் ஜலமூழ்கிக் கப்பல்களினால் அமிழ்த்தப்படடன. "லோவஸ்டாப்ட்" என்ற பிரிட்டிஷ்யுததக்கப்பல் தனது சாமர்த்தியத்தால் கண்டது.

காமரூன் நதியின் சமீபத்தில் ஒரு ஜெர்மனிய வியாபாரக் கப்பலும் ஒரு பீரங்கிக்கபபலும் "கம்பர்லாண்ட்" என்று பெயருள்ள ஒரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பலால் பிடிபட்டன ஆஸ்டிரியா தனக்குப் பக்கத்திலிருக்கும் அட்ரியாட்டிக்கடலில் சுரங்கங்களைப் போட்டு நிரப்பி விட்டது. இத்தாலியைச் சேர்ந்த ஒரு துளைக்கருவி கப்பல் அங்கு சுரங்கம் தட்டி அமிழ்ந்து விட்டது. உடனே இத்தாலி கோபம் கொண்டு ஆஸ்டிரியாவை அதட்ட, ஆஸ்டிரியா இனிமேல் அவ்வாறு சுரங்கங்களினால் ஆபத்து நடவாது என்றுவாக்கு அளித்தது.

"எல்ஸினோர்" என்ற ஒரு கப்பலை "லீப்ஸிக்"என்ற ஜெர்மன் யுத்தக்கப்பல் அமெரிக்காவில் சிலிக்கருகில்அமிழ்த்தி விட்டது. இந்த "எல்ஸினோர்" கப்பலுக்குச் சொந்தக் காரர் அமெரிக்கர்; ஆனால் இது இங்கிலாந்தில் பதிவு செய்யப் பட்டது.

அக்டோபர்மீ முதல் தேதியன்று பிரிட்டிஷாரும் சில இடங்களில் சுரங்கங்களிட்டுவிட்டு ஜெர்மனியர் சுரங்கங்களிட்டிருப்பதினாலும் ஜெர்மனிய ஜலமூழ்கிக் கப்பல்கள் இதற்காக வேலை செய்வதினாலும் தாங்களும் அப்படியே பதிலுக்குப் பதில் செய்ய வேண்டியிருக்கிறது என்று தெரிவித்தார்கள்.

அக்டோபர்மீ 4-ம் தேதி ஒரு நார்வேக் கப்பலும் "டாடன்" என்ற ஒரு பிரிட்டிஷ் கப்பலும்சுரங்கங்களில் அடிபட்டு அமிழ்ந்திவிட்டன. அக்டோபர்மீ 5-ம் தேதி வடகடலில் ஒரு டச்சுக்கப்பல் சுரங்கம் தட்டி அமிழ்ந்திவிட்டது.

பால்டிக் கடலில் ஒரு ஆகாய விமானம் உடைந்து விழுந்து, அதில் இருந்த இரண்டு ஜெர்மன் ஆகாயவிமானிகள் தண்ணீரிலேயே பதினைன்கு மணி நேரம் இருந்தார்கள். அவ்வழியே சென்ற, ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்த ஒரு கப்பல் அவர்களைத் தப்புவித்து விட்டது. ஜெர்மனியின் கப்பற்சாலைகளில் வெகு மும்முரமாக புதிய யுத்தக் கப்பல்களும் ஜலமூழ்கிக் கப்பல்களும் நாசகாரிக் கப்பல்களும் தயார் செய்யப்பட்டன. அக்டோபர்மீ 7-ம் தேதி எம்ஸ் நதிக்கருகில் ஒரு பிரிட்டிஷ் ஜலமூழ்கிக் கப்பல் ஒரு ஜெர்மன் துளைகருவிப் படகு நாசகாரியை துளைகருவி யந்திரமிட்டு தண்ணீரில் அமிழ்த்திவிட்டது. அமிழ்ந்திய கப்பலில் 80 ஜனங்கள் இருந்தனர். அவர்கள் தப்பினார்களோ என்னவோ ஒருவருக்கும் தெரியாது. அந்த ஜனங்களை ரட்சிப்பதற்காக ஒரு ஜெர்மனிய யுத்தக்கப்பல் வேகமாக ஓடிவந்தது. பிரிட்டிஷ் ஜலமூழ்கிக் கப்பல் தண்ணீருக்குள் மூழ்கி ஹார்விச் நகருக்கு ஓடிவிட்டது.

அக்டோபர்மீ 8-ம் தேதி இரண்டு பிரிட்டிஷ் ஆகாய விமானிகள் ஜெர்மனியின் எல்லைக்குள் பறந்து டஸ்ஸெல்டார்ப் என்னும் நகரிலுள்ள ஆகாயக் கப்பல் சாலையின்மீது மூன்று வெடிக் குண்டுகளைப் போட்டார்கள். அங்கிருந்த ஆகாயவிமானங்களில் இருந்த காற்று தீப்பிடித்துக்

கொண்டு எரிவது 500 அடி உயரத்தில் தென்பட்டது. நூற்றுக் கணக்கான மைல்களைத் தாண்டி இவ்வளவுதூரம் வந்து எதிரிகளுடைய எல்லையில் தைர்யமாகப் பிரவேசித்து வெடிக்குண்டு எறிவதென்றால் அது சாதாரணமான கார்ய மல்ல; மிகவும் ஆச்சர்யம். ஜெர்மனியர்களும் கீழே யிரு ந்து கொண்டு ஆகாயவிமானிகளைச் சுட்டார்கள்; ஆகாய விமானங்கள் சேதம் அடைந்தன; ஆனால் அவற்றில் இருந் தமனிதர்கள் சௌக்கியமாக வந்து சேர்ந்தார்கள்.

ஆண்ட்வேர்ப் நகரம் தாக்கப் பட்டபொழுது பிரிட் டிஷ் கப்பற்படைகள் பெல்ஜியர்களுக்கு உதவியாகச் சென்றிருந்தன. ஆயினும்ஆண்ட்வேர்ப்பைஜெர்மனியர்கள் பிடித்துக் கொண்டார்களாதலால் அங்கு சென்றிருந்த பிரிட்டிஷ் கப்பற்படைகள் மூன்றில் இரண்டு பத்திரமாக ஆஸ்டண்ட் வந்துசேர்ந்தன; ஒன்று ஜெர்மனியர்களால் தடுக்கப்பட்டு ஹாலண்டுக்குள் போய்ச்சேர்ந்தது. அவ் வொரு படையில் மனிதர்களும் உத்தியோகஸ்தர்களுமாக இரண்டாயிரம்பேர் இருந்தனர். இவர்கள் ஹாலண்டில் தங்களுடைய ஆயுதங்களை யெல்லாம் வைத்து விட்டு சாதாரண குடிஜனங்களைப் போல இருக்கவேண்டி நேரிட் டது.

அக்டோபர்மீ 10-ம் தேதி பால்டிக் கடலில் ஜெர்மன் ஜலமூழ்கிக் கப்பல்கள் "அட்மிரல் மக்கராப்" என்ற ருஷிய யுத்தக்கப்பலை எதிர்த்துத் துளைகருவிக் குண்டுகளால் சுட் டன. ஆனால் "மக்கராப்" தப்பிவிட்டது. 11-ம் தேதி அதே ஜலமூழ்கிக் கப்பல்கள் "பல்லாடா," "பாயான்" என்ற இரண்டு ருஷிய யுத்தக்கப்பல்களை எதிர்த்தன. இவ் விரண்டு யுத்தக் கப்பல்களும் ஜலமூழ்கிக் கப்பல்களைச் சுட்டன. ஒரு ஜல மூழ்கிக்கப்பலானது "பல்லாடா" வை ஒருதுளை கருவிக்குண்டினால் சுட்டு அமிழ்த்தி விட்டது. பால்டிக் கடலில் ப்ரஷ்ஷியா தேசத்து இளவரசராகிய ஹென்ரி என்பவர் அநேகம் போர்க்கபபல்களுடன் சுற்றிக் கொண்டிருந்தாரென்று அப்பொழுது சொல்லப்பட்டது.

அக்டோபர்மீ 15-ம் தேதி பிரிட்டிஷ் யுத்தக்கப்பலாகிய "ஹாக்கே" என்ற பெயருடைய கப்பல் வடகடலில் ஜெர்மன் ஜலமூழ்கிக் கப்பலினால் அமிழ்த்தப்பட்டது. "ஹாக்கே"கப்பலில் 400 பேர் இருந்தனர்; 50 பேர் தான் ரட்சிக்கப்பட்டனர். வடகடலில் வருகின்ற எதிரிகளின் யுத்தக்கப்பல்களைப் பிடிப்பதற்கோ அல்லது அவற்றை அழித்து விடுதற்கோ வேண்டிய சமாச்சாரம் கொடுப்பவர்களுக்கு 1000 பவுன் வரை இனாம் கொடுக்கப்படுமென்றும் எதிரிகளுடைய யுத்தக்கப்பல்களைக் கண்டு துரத்துவதற்கு வேண்டிய சமாச்சாரம் கொடுப்பவர்களுக்கு 200-பவுன் வரை இனாம்கொடுக்கப்படுமென்றும் இங்கிலாந்தின் கடற்படை யதிகாரிகள் விளம்பரப்படுத்தினார்கள்.

அக்டோபர்மீ 17-ம் தேதியன்று டச்சுக் கடற்கரைக்கு அருகில் ஒரு பிரிட்டிஷ் யுத்தக்கப்பலும் சில பிரிட்டிஷ் நாசகாரிகளும் சேர்ந்துகொண்டு நான்கு ஜெர்மன் நாசகாரிகளை எதிர்த்து அவற்றைச் சமுத்திரத்தில் அமிழ்த்திவிட்டன. ஜெர்மனியர்களுடைய ஜல மூழ்கிக்கப்பல்களில் ருஷியக்கடற்கரை யோரங்களில் வந்து சேஷ்டை செய்கின்றனவென்று ருஷியர்கள் கடல்களில் சுரங்கங்களிட்டு நிரப்பி விட்டார்கள்.

ஜெர்மனியர்கள் ஆண்ட்வேர்ப்பைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்து நேரே ஆஸ்ட்ன்டேக்குச் சென்று அதையும் கைவசப் படுத்திக் கொண்டு ப்ரான்ஸின் வடகரையிலுள்ள கலேய் என்ற நகரத்தை எப்படியாவது பிடித்து விடவேண்டுமென்று தீர்மானித்து லட்சக் கணக்கான படைகளை அந்தப்பக்கம் அனுப்பினார்கள் அப்பொழுது பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்களும், நாசகாரிகளும் பீரங்கிக் கப்பல்களும் அநேகம்வந்து கடலிலிருந்து கொண்டு கரையில் இருக்கும் ஜெர்மனியர்களை எதிர்த்தன. ஜெர்மனியர்கள் பட்டாளம் பட்டாளமாக அப்படியே அழிக்கப் பட்டார்கள். இப்பொழுது மாத்திரம் பிரிட்டிஷ் கப்பற்படை

வராமல் இருந்திருந்தால், நிச்சயமாக ஜெர்மனியர்கள்கலே யைக் கைப்பற்றி யிருப்பார்கள்.

"க்ளிட்ரா" என்றகப்பலானது நார்வேக் கரைக்குச் சமீபத்தில் சுரங்கம் தட்டி அமிழ்ந்தி விட்டது. அட்லாண் டிக் மகாசமுத்திரத்தில் கார்ல்ஸ்ரூஹி என்ற ஜெர்மனிய யுத்தக்கப்பல் 13-பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்களைச்சமுத் திரத்திற்குள் அமிழ்த்தி விட்டது. அக்டோபர்மீ 24-ம் தேதி ஒரு பிரிட்டிஷ் நாசகாரியானது டச்சுக் கடற்கரை க்கு அருகில் ஒரு ஜெர்மன் ஜல மூழ்கிக் கப்பலை அமிழ் த்தி விட்டது. ப்ரான்ஸில் போலோன் என்ற ஊரிலிருந்து ஹாவெர் என்ற ஊருககுப் போய்க் கொண்டிருந்த ஒரு பிரெஞ்சுக் கப்பல் சுரங்கம் தட்டி அமிழ்ந்தி விட்டது. அதிலிருந்த 2,400 பெல்ஜியர்கள் தப்பு விக்கப் பட்டார் கள். சுமார் இருபது பேர்மரித்திருக்கலாம். அயர்லாண்டுக் கு வடமேற்குக் கரையில் "மாங்ஸெஸ்டர்காம் மெர்ஸ்" என்ற பிரிட்டிஷ் வியாபாரக் கப்பலொன்று சுரங்கம் தட்டி அமிழ்ந்தி விட்டது. அக்கப்பலின் தலைவரைச் சேர்த்துப் பதினன்குபேர் இறந்தனர்; பதின்மூன்றுமணி நேரத்திற் குப் பின் முப்பதுபேர் ஒருபடகேறிக்கரை சேர்ந்தனர். "யார்க்" என்றஒரு ஜெர்மனிய யுத்தக் கப்பலும் ஒருபிரி ட்டிஷ் ஜலமூழ்கிக் கப்பலும் சுரங்கங்களில்அடிபட்டு அமி ழ்த்தப்பட்டன.

அமெரிக்காவில் சிலி கடற்கரைக்குச் சமீபத்தில் 5 ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் மூன்றுபிரிட்டிஷ் கப்பல்களைக் கண்டு எதிர்த்து இரண்டை அமிழ்த்தி விட்டனவென்றும் இன்னொரு பிரிட்டிஷ் யுத்தக்கப்பல் ஓடிவிட்டதென்றும் நவம்பர் மீ 5-ம் தேதிசொல்லப் பட்டது. நவம்பர் மீ 14-ம் தேதி இரண்டு ஜெர்மன் ஜலமூழ்கிக் கப்பல்கள் டோவர் ஜலஸந்தியில் சுடப்பட்டு அமிழ்த்தப் பட்டன.

இன்னும் அநேககப்பல்கள் இருகட்சியாருக்கும்சேத மாயிருக்கின்றன. ஜெர்மன் கப்பற்படை யுத்தம்செய்வ தற்கு வெளியேவர முடியாது அங்கங்கே அடைப்பட்டுக்

கொண்டன. கரையில் நடக்கின்ற யுத்தத்தைப்போலக் கடலில் அவ்வளவு பயங்கரமான யுத்தம்நடக்கவில்லை. ஆகாயக் கப்பல்கள் தங்கள்கட்சியாருடைய எதிரிகளின் போக்குவரவைக் கவனித்து தங்களுடைய கட்சியாருக்குச் சொல்லிக் கொண்டு வருகின்றன.

அத்தியாயம் 12.

ஆண்ட்வெர்ப் பிடிப்பட்டது.

ஜெர்மனியர்கள் ஆண்ட்வேர்ப் கோட்டைகளை முற்றுகை போட்டுத் தாக்கிக்கொண்டிருந்தார்களென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். ஆணட்வேர்ப் சுமார் முப்பது கோட்டைகளால் சூழப்பட்டது. இவற்றை ஜெர்மனியப் படைகள் தென்மேற்கே யிருந்து பெரிய பெரிய ஜெர்மன் பீரங்கிகளாலும் ஆஸ்டிரியப் பீரங்கிகளாலும் தாக்கின. லீயர், வால்ஹேல்ம், வேவர் முதலிய கோட்டைகள் முதலில் எதிர்க்கப்பட்டன. பெல்ஜியர்களுடைய கடைசி யிருப்பிடம் இதுவேயாதலால் அவர்கள் உயிரைத் துரும்பாகக் கருதி மேன்மேலும் புரண்டு வருகிற ஜெர்மனியப் படைகளின் மீது விழுந்து, படைக்குப் பின் படையாக அழித்துவிட்டார்கள். ஆயினும் ஜெர்மனியர்கள் விடுவதாயில்லை. சமுத்திரத்திலிருந்து அலைகள் மோதுவதுபோல, ஜெர்மனியர்கள் கோட்டைகளின் மீது மோதினார்கள். ஆண்ட்வேர்ப் கோட்டைகளைச் சுற்றி சிறிய கம்பிகளால் வேலிகள் கட்டப்பட்டிருந்தன. ஜெர்மனியர்கள் அந்த வேலிகளைப் பிடுங்கி யெறியும் பொருட்டு அவற்றைத் தொடும்படி நேரிட, அவர்கள் பின் சக்தியினால் பாதிக்கப்பட்டு அப்படி அப்படியே உயிரிழந்தார்கள்.

எத்தனை பேர் இறந்து போயிக் கொண்டிருந்தாலும் எங்கிருந்தோ, ஜெர்மனியர்கள் வந்து கொண்டே யிருந்தார்கள். ஜெர்மனிக்குள் ருஷியன் ஒருவனாவது கால்

வைக்கவில்லை யென்றும் ஜெர்மனியர்களை தண்டபடாமல் பாரிஸை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்களென்றும்; பெல்ஜியர்கள் ருஷிய அரசர்களுக்கும் பிரிட்டிஷ் தனவந்தர்களுக்குமாக யுத்தம் செய்கிறார்களென்றும் கோட்டைகளை பெல்ஜியர்கள் ஜெர்மனியர்களின் வசம் சரணாகை ஒப்புவித்து விடும்படிக்கும் ஒருபஹிரங்க அறிக்கை ஆண்ட்வெர்ப்பை முற்றுகை போட்டிருக்கும் ஜெர்மன் சைன்னியங்களின் அதிபதியின் கையெழுத்திடப்பட்டு ஒரு ஆகாய விமானியால் ஆங்காங்கு போடப்பட்டது.

கடைசியாக பெல்ஜியர்களுக்கே ஆண்ட்வெர்ப்கோட்டைகள் ஜெர்மனியர்களுடைய ஆக்கிரமிப்பை நெடுநாள் தாங்கி நிற்கமுடியாது என்று தெரிந்துவிட்டது போலத் தோன்றுகிறது. ஆண்ட்வெர்ப் நகரத்தின் சைந்நிய அதிபர் நகரமாது நினமிஷந்தோறும் தாக்கப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறதென்றும் ஆதலால் ஓடிப்போகவிரும்பும் ஜனங்கள் உடனே போய்விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்களென்றும் ஆனால் இதனால் நகரமானது ஜெர்மனியர்களுக்குலகுவில்பணிந்துவிடுமென்று நினைக்கவேண்டாமென்றும் நகர அதிபருக்கு அறிவித்தார். ஜெர்மன் சைந்நியாதிபதியும் ஆண்ட்வெர்ப் நகரத்தைத் தாம்தமது படைகளைக்கொண்டு 9-30-மணிக்குத் தாக்கப் போவதாகச் சொல்லியனுப்பினர். உடனே அநேக ஜனங்கள் அந்நகரத்திலிருந்து டச்சு எல்லைக்கு ஓடினார்கள் பெல்ஜிய அரசாங்கமும் ஆண்ட்வெர்ப்பிலிருந்து ஆஸ்டண்டுக்குமாற்றப்பட்டது.

ஜெர்மனியர்கள் முதலாவது ஷெல்ட் நதியைக் கடந்து ஆண்ட்வெர்ப்புக்குச் செல்ல ஆரம்பித்தார்கள்; ஆனால் முடியவில்லை. உடனே நேதி நதியைக்கடக்க ஆரம்பித்தார்கள்; அவர்களுடைய பெரிய பீரங்கிகளின் உதவியைக்கொண்டு பெல்ஜியர்களைப்பின் தள்ளிக்கொண்டே நேதி நதியைக் கடந்து விட்டார்கள். ப்ரேர்க்கம் என்றகோட்டையானது அவர்கள் கைவசமாயிற்று. சுமார் பதினாயிரம் ஜனங்கள்

வரையில் ரூஸன்டால் என்னும் நகருக்கு ஓடினார்கள். ஐயோ! பாவம்! பெல்ஜியர்களுக்கு நேரிட்டகதிதான் என்ன?

பெல்ஜியம் அரசர் ஆண்ட்வேர்ப்பை விட்டுவிட்டு டச்சு எல்லைப்புறத்துக் கிராமமாகிய ஸேல்ஸேட் என்ற இடத்துக்குப் போய்விட்டார் என்றுசொல்லப் பட்டது நகரமானது பயங்கரமாகத் தாக்கப்பட்டது. நியாயஸ் தலமானது ஒருபக்கம் இடிந்து விழுந்து விட்டது. ஆகாயவிமானங் களிலிருந்து ஜெர்மனியர்கள் எறியும் ஆகாயவிமானங்களும் ஜெர்மனியர்களுடைய பீரங்கிகளி லிருந்து புறப்படும் குண்டுகளும் நகரத்தின் ஒருபாகத்தில் நெருப்பைக் கொளுத்திவிட்டன. ஆண்ட்வேர்ப்பின் தென் னண்டையிலிருந்து நியாயஸ்தலங்கள் வரையிலும் நெருப் புப் பிடித்துக் கொண்டது. அங்குள்ளகாட்சி பங்களாவி லிருந்த சிங்கங்களும் மற்றும்கொடிய மிருகங்களும் விஷ ஜெந்துக்களும் நகரத்தின் அலங்கோலத்தை அதிகப்படுத் தாமலிருக்கும் பொருட்டு பெல்ஜியர்களாலேயே கொல்லப் பட்டன.

கடைசியாக ஜெர்மனியர்களுடைய கையேமிஞ்சி விட் டது. பெல்ஜிய சைந்நியமானது பின்செல்லவேண்டி நேர் ந்தது. பெல்ஜிய அரசாங்கத்தார் கேட்டுக்கொண்டதின் மேல், ஆங்கில அரசாங்கத்தார் மூன்று கடற்படைகளை அ னுப்பியிருந்தார்கள். அக்டோபர் மாதம் 5-ம் தேதி வரை யில் பெல்ஜியர்களும் பிரிட்டிஷ் கடற்படைகளும் நேதி நதியை பலமாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் கடற்படைகளின் வலது பக்கத்தில் இருந்த பெல்ஜியப் படையானது பின்னுக்குச் செல்லும்படி நேரவே, எல்லாப் படைகளுமே பின்னுக்குச்சென்று உள் கோட்டைகளில் நின்றன. 7-ம் தேதியும் 8-ம் தேதியும் நேசப்படைகள் உள்கோட்டைகளைத் தாங்கி நின்றன. கணக்கற்று வந்து விழுகின்ற ஜெர்மனியப்படைகளுக்குமுன் ஒரு சிறு பெல் [illegible]

பெல்ஜியப்படை பின்னுக்குச் செல்லவேண்டி வந்து விட்டது. பெல்ஜிய சைந்நியாதிபதியும் பிரிட்டிஷ்சைந்நியாதிபதியும் நகரத்தைக்காலி பண்ணிவிடுவதென்று தீர்மானித்தார்கள். உடனே பெல்ஜியப்படைகளும் பிரிட்டிஷ் படைகளும் நகரத்தை விட்டு விட்டுப்பின் சென்றன. பெல்ஜிய அரசர் சிறிது காயமடைந்தவர் போற் காணப்பட்டார். அவரும் அவரது சைந்நியங்களும் பத்திரமாக ஆஸ்டெண்டு போய்ச்சேர்ந்தன. பெல்ஜியர்கள் ஊரை விட்டு வெளியே போவதற்குள் எண்ணெய்க் கிணறுகளையும் களஞ்சியங்களையும் நெருப்பிட்டு எரித்து அழித்து விட்டார்கள். நகரத்திற்குள் ஜெர்மனியர்கள் நுழைவதற்கு முன், நகரமானது காலி செய்யப்பட்டுவிட்டது. ஆண்ட்வேர்ப் நகரத்தைப் பிடித்த ஜெர்மன் சைந்நியாதிபதியாகிய பேஸெல்லேர்என்பவரை ஜெர்மன் சுக்கரவர்த்தி மிகவும் மெச்சிக்கொண்டு டேக்கோரேஷன்டுமேரிடே என்ற பட்டமும் கொடுத்தார்.

ஜெர்மன் சைந்நியாதிபதி ஆண்ட்வேர்ப் நகரில் "குடிஜனங்கள் விரோத செய்கைகள் செய்யாதிருந்தால், அவர்களுடைய சொத்துக்கள் ரட்சிக்கப்படும்; கீழ்ப்படியாவிட்டால், யுத்த சட்டங்களின்படி தண்டிக்கப்படுவார்கள்; உங்களுடைய நகரமானது அழிக்கப்பட்டுவிடும்" என்று ஒரு அறிக்கை செய்தார். பெல்ஜியர்களும் பிரிட்டிஷாரும் நகரைக் காலி பண்ணுவதற்கு முன், தாங்களே எழு கோட்டைகளை இடித்து அழித்து விட்டார்கள்.

அத்தியாயம் 13.

இந்தியாவும் யுத்தமும்.

இங்கிலாந்தின் ஏகச் சக்ராதிபத்தியத்திற் குட்பட்டு இன்பமநுபவித்து வரும் இந்தியாவானது இங்கிலாந்துக்குச் சமீபத்தில் நின்று எதிரியுடன் போராடாமல் இருக்க முடியுமா? இருக்குமா?.

1914-ம் வருஷம் ஆகஸ்டு மீ 3-ம் தேதியே, அதாவது இங்கிலாந்து ஜெர்மனியுடன் போர் புரிவதா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே, இங்கிலாந்துக்கு இந்தியாவிலுள்ள ஒவ்வொரு படையையும் ஒவ்வொரு பீரங்கிகளையும் வேண்டும் பொழுது ஒப்புவிக்க இந்திய அரசாங்கத்தார் தயாரா யிருக்கிறார்களென்றும் இந்தியர்கள் ராஜவிஸ்வாசிகள் என்பதை இங்கிலாந்து பரிபூர்ணமாக நம்பலா மென்றும் நமது ராஜப்பிரதிநிதியவர்கள் இங்கிலாந்துக்குத் தந்திமூலமாக உறுதி மொழிகொடுத்து விட்டார். அப்படியே இந்திய ஜனசமூகமும் தயாராய் விட்டது. அதே தேதியில் வங்காளக் கவர்னரவர்கள் டாக்கா என்னும் நகரத்தில் இருந்தார். அன்று காலை 11 மணிக்கு அவருக்கு ஏதோ ஒரு தந்தி வந்ததாம்; அதன் மேல் அவர் சட்டசபைக் கூட்டம் முதலிய சகலவேலைகளையும் நிறுத்தி விட்டு கல்கத்தா நகரத்திற்கு அன்று மத்தியானமே புறப்பட்டு விட்டார். ஜெர்மனியும் இங்கிலாந்தும் ஒன்றுடனொன்று யுத்தத்திற்குத் தயாராய் விட்டனவென்று உலகம் அறிவதற்கு முன்னாலேயே இந்தியாவானது எழுந்திருந்து இங்கிலாந்துக்குப் பக்கத்தில் நின்றது. கல்கத்தாத் துறைமுகத்தில் ஆறு ஜெர்மன் வியாபாரக் கப்பல்கள் இருந்தன; அவை அவ்விடத்தை விட்டுநகரக் கூடாதென்று உத்தர விடப்பட்டன; துறைமுக அதிகாரிகள் அக்கப்பல்களை ஜாக்கிரதையாகப் பார்த்துவந்தார்கள். உடனே கல்கத்தாவிலுள்ள ஜெர்மன் வியாபாரக் கம்பெனிகளெல்லாம் மூடப்பட்டன. வங்காளத்தில் ஒருவைத்தியப்படை தயார்செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் வைத்தியர்களுடைய சபையொன்றுகூட்டப்பட்டது. நேப்பாளதேசத்து மகாராஜா அவர்களும் மைசூர், காஷ்மீர், பவநகர்முதலிய ஸமஸ்தானங்களின் அதிபர்கள் எல்லோரும் தங்களுடைய தேசங்களின் தனத்தை யெல்லாம் சக்கரவர்த்தி யவர்களிடத்தில் இந்த யுத்தத்திற்காக ஒப்புவிக்கத் தயாராயிருப்பதாக உறுதி

கூறினர்கள். படையெடுப்புச் சைந்நியங்களின் செலவுக்காக மைசூர்மகாராஜா அவர்கள் ரூபா ஐம்பதுலட்சம் இந்திய அரசாங்கத்தாரிடத்தில் கொடுத்தார். ஹைதராபாத் நவாப் அவர்கள் ரூபா அறுபதுலட்சம் இந்திய அரசாங்கத்தாரிடத்தில் கொடுத்தது மன்றியில் தம்முடைய தேசத்தின் தனமெல்லாம் சக்கரவர்த்தியவர்களின் வசமிருப்பதாக நினைத்துக் கொள்ளலாமென்று உறுதிபுகன்றார். திருவாங்கூர், கொச்சி முதலிய தேசாதிபர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு லட்சம் கொடுத்தார்கள். வெங்கிடகிரி ராஜா அவர்கள் 3லட்சம் கொடுத்தார். ஜோதிபுரிமகாராஜா அவர்களும் பாலன்பூர் ஸசின் முதலிய தேசங்களின் நவாப்புகளும தங்களுடைய தனத்தை மாத்திரம் அன்று, தங்களுடைய உயிரையும் கொடுக்கத் தயாரானர்கள். வங்காளிகள் வருஷாவருஷம் ஆகஸ்டுமீ 7-ம் தேதி கொண்டாடும் வருஷாந்திரக் கொண்டாட்டமானது இவ்வருஷத்தில் நின்றுவிட்டது.

அங்கங்கு வியாபாரங்களின் நிலை குலைந்து விட்டது. இந்தியாவுக்கு ஜெர்மன் சரக்குகளும் ஆஸ்டிரியச் சரக்குகளும் ஏராளமாக வந்துகொண் டிருந்தன. இப்பொழுது அவை நின்றுவிட்டன. பிரதான நகரங்களில் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத சாமான்களின் விலைவாசிகள் ஏறிப்போயின.

ஊர்கள் தோறும், கிராமங்கள் தோறும் குடிஜனங்கள் ஒன்று சேர்ந்து தங்களாலியன்ற உதவியை அரசாங்கத்துக்குச் செய்வதாகத் தீர்மானித்தார்கள். முஹம்மதிய ஸமஸ்தானங்களின் நவாப்புகளும் இந்து தேசங்களின் அரசர்களும் இங்கிலீஷ் அரசாட்சியினிடத்தில் தங்களுக்குள்ள விஸ்வாசத்தை இப்பொழுது தங்களால் முடியுமான உதவிகளை யெல்லாம் செய்து ருசுப்படுத்துவதாகக் கிளம்பினர்கள். கன்று காலிகள், குதிரைகள், கோவேறு கழுதைகள், ஆடுகள், தோல், ஈயம், மிருக வைத்தியத்திற்கு அல்லது ரணவைத்தியத்திற்குஉதவும்படியான ஆயுதங்கள்

இவையெல்லாம் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யகூடாதென்று அரசாங்கத்தார் உத்தரவிட்டனர். ஆங்காங்கு இந்தியத்துறை முகங்களைச் சமீபித்து வந்த ஜெர்மனிய அல்லது ஆஸ்டிரியக்கப்பல்களெல்லாம் பிடிக்கப் பட்டன. முஹம்மதியர்களுடைய பள்ளி வாசல்களிலும் கிறிஸ்தவர்களுடைய தேவாலயங்களிலும் ஹிந்துக்களுடைய கோவில்களிலும் இங்கிலீஷ் அரசாங்கத்தார் வெற்றியடையவேண்டுமென்று சர்வசக்தியுள்ளகடவுளை நோக்கிப்பிரார்த்தனைகள் செம்யப்பட்டன. கல்கத்தா, சென்னை முதலிய இடங்களிலுள்ள வக்கீல்களும் கொஞ்ச நாட்களுக்குச் சட்ட புஸ்தகங்களையெல்லாம் கீழே வைத்துக் கைகளில் ஆயுதம் எடுக்கலாமென்று யோசனை செய்தார்கள். துறை முகங்களில் கண்டிப்பான நியந்தனைகள் ஏற்படுத்தப்பட்டன. சூர்யன் அஸ்தமித்த பிறகுஎந்தக்கப்பல்களும்துறை முகங்களுக்குள் வரவோ அல்லது துறை முகங்களிலிருந்து செல்லவோ கூடாதென்றும், கப்பல்கள் அஸ்மித்தபிறகு கரையைச் சமீபிக்குமானால் அவைவிடியும் வரையில் கரையிலிருந்து 5 மைல் தூரத்தில் நிற்கவேண்டுமென்றும் அப்படி நிற்காமல் துறை முகங்களுக்கு வெளியே கப்பல்கள் வருமானால், அக்கப்பல்கள் எவரைச் சேர்ந்ததாயினும் சரியே, சுடப்படுமென்றும் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. ஐரோப்பியர்கள் ஆயுதங்களை அநுமதிச்சீட்டு இன்றி வைத்துக்கொள்ளலாமென்ற ஸ்வதந்திரமானது. யுத்தம் ஆரம்பமானது முதல் ஆஸ்டிரியர்களுக்கும் ஜெர்மனியர்களுக்கும் இல்லாது போயிற்று. யுத்தத்தினால் இந்தியாவில் நேரிடும் துன்ப நிவிர்த்திக் காக ராஜப் பிரதிநிதியவர்களாலும் சென்னை கவர்னர் அவர்களாலும் இரண்டு நிதிகள் ஆரம்பிக்கப் பட்டன. இந்தியாவிலுள்ள சிற்றரசர்களும்நாவாப்புகளும் பிரபுக்களும் ஜமீந்தார்களும் ஏராளமான பணத்தை மேற்படி நிதிகளுக்குக் கொடுத்து உதவினார்கள். ஏழைகளும் தங்களா லியன்றதைக் கொடுத்தார்கள். அந்த அந்த ஊரிலுள்ள ஸ்திரீகளும் தங்களுக்

குள் இயன்ற தொகையை வசூல் செய்து மேற்படி நிதிகளுக்கு அனுப்பினார்கள்.

இந்தியாவில் பற்பல இடங்களிலிருந்த ஜெர்மனியர்கள் அர்சாங்கத்தாரால் கைதிகளாகப் பிடிக்கப் பட்டு ஆமத் நகரத்திற்குக் கொண்டு போகப் பட்டார்கள். அவர்கள் ஒன்றாக அங்கு அடைக்கப் பட்டார்கள். இந்தியப் படைகளை ஐரோப்பிய யுத்தத்திற்கு அனுப்புவதென்று அர்சாங்கத்தார் தீர்மானித்தார்கள். இந்தத் தீர்மானத்தினால் ஜனங்களுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை ஆப்கானிஸ்தானத்து அமீர் தாம் பொதுவாயிருப்பதாக வாக்கு அளித்தார். சென்னை ராஜதானியானது யுத்தத்திற்கு சில குதிரைகளையும் வைத்தியத்திற்கு வேண்டிய சகல ஆயுதங்களும் மருந்துகளும்ஆகாராதிகளும் உத்தியோகஸ்தர்களும் சேர்ந்த ஒரு ஆஸ்பத்திரிக் கப்பலையும் கொடுத்தது.

இந்தயுத்தத்தினால் இந்தியாவுக்கு வியாபாரம், கைத்தொழில் முதலிய விஷயங்களில் பற்பலவிதக் கஷ்டங்களும் மாறுதல்களும் ஏற்பட்ட போதிலும் இந்தியா இங்கிலாந்தினிடத்தில் விஸ்வாஸமும் நம்பிக்கையும் உடையது என்பதை ரூபிக்கும்படியாக எதிரிகள் இந்தியாவுக்குச் சமீபத்திலேயே வந்துவிட்டார்கள். "எம்டன்" என்னும் பெயருடைய ஒருஜெர்மனியச் சிறுயுத்தக் கப்பல் 3500டன் உள்ளது, வங்களாக் குடாக்கடலுக்கு புகுந்து செப்டப்பர்மீ 10-ம் தேதிக்குமேல் 14-ம் தேதிக்குள்ளாக "இந்தியா," "லொவெட்," "கில்லின்," "டிப்ளோமட்," "ட்ராப்பாக்" என்ற பெயர்களையுடைய ஐந்துவியாபாரக் கப்பல்களை அமிழ்த்திவிட்டது என்று சொல்லப்பட்டது. இக்கப்பல்களில் இருந்த ஜனங்கள் செப்டம்பர்மீ 12வ எமடன் பிடித்துவைத்திருந்த "காபிங்கா" என்ற கப்பலில் ஏற்றி கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டார்கள் அமிழ்த்தப்பட்ட கப்பல்கள் ஒவ்வொன்றும் 3400டன் முதல் 7600-டன்வரையு மிருந்தன. உடனே வங்காளக் குடாக் கடல்பந்தோபஸ்து இல்லையென்றும்கப்பல்கள் அவ்வழியே

செல்லக் கூடாதென்றும் உத்தரவிட்டு, பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் எம்டனைத் துரத்திக்கொண்டிருக்கின்றன வென்றும் அரசாங்கத்தார் அறிவித்தனர். அமிழ்த்தப்பட்ட ஐந்து கப்பல்களின் உத்தியோகஸ்தர் களும் ஜனங்களும் "எம்டன்" கப்பலின் ஜனங்களுடைய பெருந்தன்மையையும் நற்குணத்தையும் பற்றி மிகவும் புகழ்ந்தார்கள். அந்த "எம்டன்" கப்பலில் கல்கத்தாவுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்த ஒருவர் உத்தியோகஸ்தரா யிருந்தாரென்றும் அவருக்கு வங்காளக் குடாக்கடலைப்பற்றி நன்றாகத் தெரியுமென்றும் சொல்லப்பட்டது.

"எம்டன்" எங்கிருந்து வங்காளக் குடாக்கடலுக்குள் வந்தது என்று பலரும் ஆச்சர்யப்பட்டார்கள். சீன தேசத்தில் ஜெர்மனியர்களுக்குச் சொந்தமாயிருந்த கயாச் சோக் குடாக்கடலில் எம்டனும் இன்னும் நான்கு, ஐந்து யுத்தக்கப்பல்களும் இருந்தன. ஜப்பான் ஜெர்மனியுடன் யுத்தம் தொடங்கி கயாச்சோவைத்தனது போர்க்கப்பல்களினால் படையெடுத்த பொழுது இக்கப்பல்களெல்லாம் அங்கிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டன. "எம்டன்" சுற்றும் ஜப்பானியப் போர்க்கப்பல்களால் சூழப்பட்டுக் கொண்டது. உடனே அது துறை முகத்தில் தங்கிக் கொண்டு தனது சாதாரண நிறத்தை மாற்றி பிரிட்டிஷ் போர்க்கப்பலினுடையநிறத்தைப் போட்டுக்கொண்டு தனக்குச் சொந்தமாயுள்ள மூன்று புகைக்குழாயுடன் நான்காவதாக ஒரு புகைகுழாயையும் தரித்துக்கொண்டு வெகு தைர்யமாகப் பிரிட்டிஷ்போர்க்கப்பலைப் போலவே ஜப்பானியப் போர்க்கப்பல்களினூடே வெளியேவர, ஜப்பானியக் கப்பல்கள் அதை உண்மையான பிரிட்டிஷ்கப்பல் என்றே எண்ணி தமது கொடியைத் தாழ்த்திவந்தனம் செய்து வாழ்த்துக்கள் கூறினவாம். எம்டனும் ஆங்கில அரசாட்சிக்கு வாழ்த்துக்கள் கூறிவெளியே வந்து தப்பித்து ஓடிவிட்டது. அதுஎங்கெல்லாமோ சென்று, கடைசியாக எப்படியெல்லாமோவங்காளக் குடாக்கடலுக்குள் நுழைந்துகொண்டது.

செப்டம்பர்மீ 14-ம் தேதி "எம்டன்" "க்ளான் மத்தீஸான்" என்ற கப்பலைப் பிடித்து அமிழ்த்திவிட்டது. அதிலிருந்த ஜனங்கள் "டோவர்" என்ற கப்பலில் ஏற்றி ரங்கூனுக்கு அனுப்பப் பட்டார்கள். "க்ளான் மத்தீஸான்" என்ற கப்பலின் வேலைக்காரர்களைக் கொண்டு தனக்கு நிலக்கரி எடுத்து நிரப்பும்படி செய்து அவர்களுக்கு தலைக்கு அரை டாலர் வீதம் சம்பளம் கொடுத்தாராம். இன்னும் "க்ளான் மத்தீஸான்" ஜனங்களை ஏற்றிக்கொண்டு போவதற்காக "எம்டன்" கப்பலின் தலைவர் "டோவர்" கப்பலின் தலைவரிடத்தில் ஏதோ ஒரு தொகை பணமும் கொடுத்தனராம். "க்ளான் மத்தீஸான்" என்பது 4775 டன் உள்ளது. இக்கப்பல் அமிழ்த்தப்பட்ட சமாச்சாரம் ரங்கூனில் தெரிந்தவுடனே, ரங்கூன் துறைமுக அதிகாரிகள் அங்கு துறைமுகத்திலுள்ள தீபங்களெல்லாம் இரவில் ஏற்றப்படக்கூடாதென்று உத்தரவு செய்யப்பட்டது.

செப்டம்பர்மீ 22-ம்தேதி திடீரென்று சென்னைமாநகரம் எம்டனால் தாக்கப்பட்டது. இரவு 9-மணிக்கு எம்டன் சென்னையையடுத்து நின்றுகொண்டு தனது சோதனை தீபங்களினால் குறிபார்த்துக் கொண்டு அடுக்கடுக்காக ஐந்து ஆறுகுண்டுகளை எறிந்தது. பர்மாஎண்ணெய்க் கம்பெனியைச் சேர்ந்த இரண்டு எண்ணெய்க் கிணறுகள் பற்றிக்கொண்டன; மூன்று பேர் கொல்லப்பட்டனர்; அநேகருக்குப் பலமான காயங்கள் உண்டாயின; துறை முகத்துக்கு வடக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் பீரங்கிகள் எம்டனைச்சுட ஆரம்பித்தன; மூன்று குண்டுகள் தாம் சென்னைமா நகரத்துப் பீரங்கிகளிட மிருந்து சென்றன; உடனே எம்டன் தனது சோதனைதீபங்களை அணைத்துக் கொண்டு இருட்டில் மறைந்துவிட்டது. அன்றிரவு சென்னைமாநகரம் அல்லோலகல்லோலப்பட்டு விட்டது; சமுத்திரக் கரையில் குடியிருந்தவர்கள் எல்லோரும் குண்டுகளுக்குப் பயந்து குடிசைகளைத் தூக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். இரண்டு மூன்று தினங்களுக்குள் சுமார் எழு

பதினாயிரம் ஜனங்கள் வரை ஓடிவிட்டார்கள் என்று சொல்லப்பட்டது. சில கட்டடங்களும் சேதம் அடைந்தன. பொய் சொல்லி ஜனங்களைக் கலவரப்படுத்துவதையே தொழிலாக உடைய சில புரட்டுக்காரர்கள் இல்லாத பொய்களையெல்லாம் கட்டிவிட்டு ஏழை ஜனங்களைப் பயப்படுத்தினார்கள்.

செப்டம்பர் மீ 23-ம் தேதி காலையில் "எம்டன்" புதுச்சேரி மார்க்கமாகச் சென்றதென்று சொல்லப்பட்டது. மூன்று யுத்தக் கப்பல்கள் எம்டனைப் பிடிப்பதற்கு அனுப்பப்பட்டனவென்று செப்டம்பர் மீ 24-ம் தேதி சொல்லப்பட்டது. புதுச்சேரியிலும் காரைக்காலிலும் உள்ள தீபஸ்தம்பங்கள் ஏற்றப்படக் கூடாதென்று உத்தரவு ஆயிற்று.

யுத்தகளத்திற் சென்று யுத்தம் செய்வதற்கு அநேக இந்திய அரசர்கள் முன்வந்தார்கள். இங்கிருந்து அநேக இந்தியப் படைகள் ஐரோப்பாவுக்கு அனுப்பப் பட்டன. இந்திய அரசாங்கத்தில் பெரிய உத்தியோகங்களி லுள்ள பலரும் இன்ஜினீயர்களும் யுத்தகளத்திற்குச்சென்றார்கள்.

அக்டோபர் மீ 3-ம்தேதி வங்காளக்குடாக் கடற்பாதையானது கூடுமான வரையில் பந்தோபஸ்தா யிருந்ததென்று சொல்லப்பட்டது. எம்டன் நேரே கொழும்பைத் தாண்டிச் சென்று அரபிக் கடலுக்குள் புகுந்து மினிக்காய்த் தீவுகளுக் கருகில் சிலகப்பல்களை அமிழ்த்திவிட்டது. பின்னர் இரண்டு மூன்று வாரங்களுக்கு அதைப் பற்றி யொன்றும் தெரி வில்லை. திடீரென்று மறுபடியும் தோன்றி பழைய இடத்திலேயே சிலகப்பல்களை அமிழ்த்திவிட்டு இரண்டு கரிக்கப்பல்களைத் தன்னுடனேயே இட்டுக் கொண்டு சென்றது. அமிழ்த்தப் பட்ட கப்பல்களில் இருந்தவர்கள் எல்லோரையும் "எம்டன்" தப்புவித்துக் கரைக்கு அனுப்பி விட்டது. "எம்டன்" தலைவரைப் பற்றி அமிழ்த்தப் பட்ட கப்பல்களில் இருந்தவர்கள் அனைவரும் புகழ்ந்தனர். பின்னர் "எம்டன்" திடீரென்று பினு

ங்குப் பக்கத்தில் தோன்றி அங்கு நின்று கொண்டிருந்த ஒரு சிறு ருஷியயுத்தக் கப்பலையும் ஒரு பிரெஞ்சுநாசகாரியையும் அமிழ்த்தி விட்டு ஓடி விட்டது. இதற்குப் பின் “எம்டன்” கொழும்புக்கும் ஆஸ்டிரேலியாவுக்கும் மத்தியிலுள்ள **கோக்கோஸ்** தீவிற்குச் சென்று அங்குதந்திக் கம்பியை யறுப்பதற்கு முயற்சி செய்தது. அப்பொழுது அங்கிருந்து ஐம்பதுமைல் தூரத்தில் இருந்த ஸிட்னி என்ற ஆஸ்டிரேலிய யுத்தக்கபபல் “எம்டன்” இருக்கும் இடம்அறிந்து கொண்டு உடனே யங்குவேகமாக ஓடிச்சென்று அதனுடன் யுத்தம்செய்து எம்டனை எரித்துவிட்டது. “எம்டன்” தலைவர்காயப்படாது கைதியாக்கப் பட்டார். ஜெர்மன் சக்கரவர்த்தியின் மருமகர் ஒருவர், 19-வயது வாலிபர் எம்டனில் இருந்தார். அவரும் இப்பொழுதும் கைதியா யிருக்கிறார். ஆனால் இவ்விருவரிடத்தினின்றும் இன்னும் எம்டனிலிருந்த உத்தியோகஸ்தர்களிடத்திலிருந்தும் அவர்களுடைய கத்திகளை ஆங்கிலேயர்கள் வாங்கவில்லை; அவர்கள் சகலயுத்த கௌரதைகளுடன் நடத்தப்படுகிறார்கள்.

எம்டனிலிருந்தவர்களில் உத்தியோகஸ்தர்களும் மனிதர்களுமாக 45-பேர் நான்கு பீரங்கிகளுடன் அயேஷா என்றகப்பலில் ஏறித்தப்பித்துக் கொண்டு விட்டார்களென்றும் அவர்களுடன் ஒருகரிக்கப்பலும் இருக்கிறதென்றும் கடற்படை யதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள். எம்டன் அழிக்கப்பட்ட சமாச்சாரம் கேட்டு எல்லோரும் சந்தோஷித்தார்கள்.

இந்தியப்படைகள் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டனவென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். இந்தியாவிலிருந்து மேற்படி படைகள் அனுப்பப்பட்டது முதல் அக்டோபர்மீ முதல் தேதிவரையில் அப்படைகளைப் பற்றியொன்றும் தெரியவில்லை. மேற்படி படைகள் பிரான்சில் மார்ஸேல்ஸ் நகரத்தில் வந்து இறங்கினவென்றும் பிரஞ்சு

ஜனங்கள் மிகவும் மரியாதையுடனும் மதிப்புடனும் வரவேற்றார்களென்றும் அக்டோபர்மீ முதல் தேதி தந்தி வந்தது. பிறகு வெகுநாட்களாக அவற்றைப்பற்றி ஒன்றும் தெரியப்படுத்தப்படவில்லை. பிறகு எங்கோ ஒருகோட்டையில் காவலாக வைக்கப்பட்டன வென்று, தெரிய வந்தது.

இந்தியப்படைகள் யுத்தத்தில் எவ்வாறு நடந்துகொள்ளுமோ என்று ஆங்கிலேயர் சந்தேகித்தார்களோ? என்னவோ? தெரியவில்லை. ஆனால் மெல்ல மெல்ல இந்தியப் படைகளை கொடூரமான யுத்தகளத்தில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். ஒரு சமயத்தில் ஜெர்மனியர்கள் நேசப் படைகளைத் தோற்கடித்து ஓட்டிவிடுவார்கள் போல இருந்தது. ஜெர்மனியர்களுடைய கைமிஞ்சிவிட்டது. நேசப் படைகள் பின்னுக்குச்சென்று விடுதலே நலமென்று தோன்றிய சமயத்தில் வங்காள ஈட்டிப்படைவீரர்கள் தங்களுடைய தலைவரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு திடீரென்று ஜெர்மனியர்களின் முன்னே பாய்ந்தார்கள். ஜெர்மனியர்களுடைய பீரங்கிகளெல்லாம், அடங்கிவிட்டன. ஜெர்மனியர்கள் புறமுதுகிட்டு ஓட ஆரம்பித்தார்கள். ஆனால் நமது ஈட்டிப்படை வீரர்கள் அவர்களை உயிருடன் ஓடவிட்டு விடுவார்களா? தங்களுடையநீண்ட ஈட்டிகளினால் வலது பக்கமும் இடது பக்கமுமாக மாறிமாறிக்குத்தி ; ஆயிரக்கணக்கான ஜெர்மனியர்களைக் கொன்றுவிட்டார்கள். சாமர்த்திய சாலிகளாயுள்ள ஜெர்மனியர்கள் ஓடி மறைந்து கொண்டார்கள். வங்காள ஈட்டிப்படை வீரர்கள் திரும்பவும் தங்களுடைய சைந்யத்தின் இருப்பிடத்திற்கு வந்தபொழுது அவர்களுடைய சகோதரப்படைகள் கொண்டாடினகொண்டாட்டத்திற்கு அளவில்லை. யுத்தகளத்திலேயே அவர்கள் முன்சென்ற போக்கையும் அவர்கள் செய்த செய்கையையும் கண்டு கொண்டாடாத ஐரோப்பியப்படைகளே யில்லை. எல்லோரும் பார்த்து பிரமித்துவிட்டார்கள். இந்தியர்களுடைய

சரீரங்களிலும் வீரத்தனமுள்ள இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறதென்பது இப்பொழுது ருசுவாயிற்று.

இன்னொரு சமயத்தில் ஜெர்மனியர்கள் தங்களுடைய நிலைமைகளைப் பலமாக ஸ்தாபித்துக்கொண்டு யுத்தம் செய்தார்கள். அந்த நிலைமையை விட்டு விட்டு அவர்கள் பின்னுக்குச் செல்வதாயில்லை. ஜெர்மனியப்படைகளுக்குப் பின்னால் கொஞ்சதூரத்தில் ஜெர்மனியர்களுடைய மருந்துச்சாலை வைக்கப்பட்டிருந்தது. அந்த மருந்துச்சாலையை நேசப் படைகள் அழிக்க வேண்டியது அவசியமாயிற்று. அந்த மருந்துச் சாலைக்குச் சிறிது தூரத்தில் ஒரு ஆறு இருந்தது. ஒருநாள் இரவு அந்த ஆற்றின் கரையில் சிலர் படகினின்றும் இறங்கினார்கள். ஆறுபேர் தங்களுடைய வாய்களினால் கத்திகளைக் கவ்விக் கொண்டு அந்த மருந்துச் சாலையைச் சுற்றியிருந்த காட்டுக்குள் தவழ்ந்து தவழ்ந்து சென்று மருந்துச் சாலையினருகில் சென்று அங்கு காவலிலிருந்த படைவீரர்களை இரண்டுமூன்றுபேர் அறியாமல் கொன்று விட்டு திடீரென்று மருந்துச் சாலையில் தீயைக் கொளுத்தி விட்டார்கள். மருந்துச் சாலை முழுதும் அழிந்து விட்டது. இந்த ஆறுபேர்களும் பத்திரமாகத் தங்களுடைய படகுக்கு வந்து தங்களுடைய சகோதரர்களுடன் சேர்ந்து கொண்டு தங்களுடைய சைந்நியம் இருந்த இடத்திற்குத் திரும்பிவந்து விட்டார்கள். மறுநாட்காலையில் ஜெர்மனியர்கள் தங்களுடைய பலமான நிலைமையைவிட்டுவிட்டுப்பின் புறம் போகவேண்டி நேர்ந்தது. இவ்வரிய செயலைச் செய்த ஆறுபேர்களும் எப்படையைச் சேர்ந்தவர்கள் என்றால், நமது நாட்டுக் கூர்க்க வீரர்களேயாவார். இன்னொரு சமயத்திலும் இப்படியே இருட்டில் வாய்களில் கத்திகளைக் கவ்விக்கொண்டு ஜெர்மனியர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களின் மீதுபாய்ந்து நமது இந்தியப் படைகள் அவர்களை நாசம் செய்துவிட்டன. இம்மாதிரியாக நமது இந்தியப் படைகள் ஐரோப்பாவில் தங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டிக்கொண்டு வருகின்றன.

இன்னும் இந்தியாவிலுள்ள 30 கோடி ஜனங்களும் ஆங்கிலேயர் வெற்றிபெற வேண்டுமென்று எப்பொழுதும் விரும்பிக்கொண்டிருக்கிறார்கள். யுத்த நிதிகளுக்கு இந்தியர்கள் வேண்டிய பணம் கொடுத்திருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் ஆங்கிலேயர்களுக்கு உதவியாக என்ன எல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் இந்தியர்கள் செய்யத் தயாராயிருக்கிறார்கள். இந்திய ராஜப் பிரதிநிதியவர்களுடைய புத்திரர் ரணக்களத்தில் காயப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்; பம்பாய்க் கவர்னரவர்களுடைய புத்திரர் ஜெர்மனியர்களிடத்தில் கைதியா யிருக்கிறாரென்று சொல்லப்பட்டது.

அத்தியாயம் 14.

துருக்கியும் யுத்தமும்.

இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் ஆரம்பமாகிச் சில தினங்களுக்குள் துருக்கி படைசேர்க்க ஆரம்பித்தது. யுத்தத்தில் சேராத தேசங்களெல்லாம் தாம் பொதுவாயிருப்பதாக அறிவித்துக்கொண்டன. அங்ஙனமே துருக்கியும் தான் பொதுவாயிருப்பதாக அறிவித்துக்கொண்டது; ஆனால் படை சேர்க்கும்படி உத்தரவு செய்துவிட்டது. அப்போதே துருக்கியின் முயற்சிகள் பெரிய காரியங்களைப் பின் கொண்டு நடக்கின்றன வென்றும் பலர் அநுமானித்தார்கள். துருக்கியானது பல்கேரியப் பிரதேசத்தின் பக்கத்தில் தனது படைகளைக் கொண்டுவந்து நிறுத்திற்று. அதன் அபிப்பிராயம் இன்னதென்று ஒருவருக்கும் தெரியவில்லை. ஆனால் துருக்கியில் சில வருஷங்களாக ஜெர்மனியர்களுடைய செல்வாக்கு அதிகரித்துக் கொண்டிருந்தது; முக்கியமான உத்தியோகஸ்தர்கள் ஜெர்மனியர்களாயிருந்தார்கள்; முக்கிய சைந்நியாதிபதியும் ஒரு ஜெர்மனியரே. துருக்கியானது சிலவருஷங்களாக

ஒரு மாறுதலை அடைந்து வந்தது. வாலிபக்கட்சியார் இள ம்பி துருக்கியை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டு மென்று விரும்பினார்கள். ஜெர்மனியர்கள் துருக்கிநல்ல நிலைமைக்கு வருதற்குத் தங்களால் இயன்ற உதவிபுரிவ தாக வாக்களித்துத் துருக்கிக்குள்ளே நுழைந்து கொண் டார்கள். ஆதலால்தான் துருக்கிபடை சேர்க்க ஆரம்பித் தவுடனே, மற்றதேசங்கள் சந்தேகப்படுவதற்குக் காரணம் எற்பட்டது. ஆனால்துருக்கி தான் பொதுவாயிருப்பதா கத் தெரிவித்தது. உடனே இதன்பக்கத்தில் இருந்த பல் கேரியாவும் படைசேர்க்க ஆரம்பித்து விட்டது. துருக்கி யில் யுத்தமந்திரிக்கு, 30-லட்சம் பவுன் யுத்தகடன் கொடு ப்பதென்று உத்தரவாய் விட்டது.

மத்தியதரைக் கடலில், இருந்த "கோபன்," "ப்ரெ ஸ்லா" என்றஇரண்டு ஜெர்மனியக் கப்பல்களும் துருக்கி யைச் சேர்ந்த டார்டனேல்ஸ் ஜலசந்தில் நுழைந்து அபய மடைந்து கொண்டன வென்று ஆகஸ்டு ஸ்ரீ 12-ம் தேதி பத்திரிகா அதிகாரிகள் அறிவித்தார்கள்.

டார்டனெல்ஸ் ஜலஸந்திக்குள் நுழைந்து கொண்ட "கோபன்," "ப்ரெஸ்லா" என்ற இரண்டு ஜெர்மனியப்போ ர்க்கப்பல்களும் இப்பொழுது தங்களுடையசொந்தக்கடல் களில் இருப்பது போல நினைத்துக்கொண்டு அவ்வழியே வருகின்ற அநேக கப்பல்களைப் பரிசோதனை செய்து நிறுத் திக்கொண்டனவென்றும் "ஸகேலியன்" என்றஒருபிரெஞ் சுக்கப்பலில் இருந்த கம்பியில்லாத் தந்தி யந்திரத்தை உ டைத்தெறித்து விட்டனவென்றும், துருக்கிப்படைகள் "கோபன்" "ப்ரெஸ்லா" என்ற கப்பல்களில் இருந்த ஜெர்மனியர்களுடன் சகோதரர்கள் போல நேசம் கொண் டிருக்கின்றனவென்றும் மேற்படி ஜெர்மன் கப்பல்கள் து ருக்கியால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டனவென்றும்சமாச் சாரம் வந்தது. ஆயினும் மேற்படி கப்பல்களில் ஜெர்மனி யக் கொடிகளை பறந்துகொண்டிருந்தன. இன்னும் துருக் கிப்படைகளை அவ்வழியாக வருகின்ற கப்பல்களை யெல்

லாம் யாதொரு காரணமும் தெரிவிக்காமல் அநேக நாட்கள் நிறுத்திவைத்து விட்டன. இச்சங்கதிகளை யெல்லாம் கேள்விப்பட்டு க்ரீஸ் துருக்கியின் இச்செய்திகளுக்குக் காரணமென்னவென்று கேட்டது. துருக்கி தன்னுடைய ரக்ஷைக்காகவே படை சேர்ப்பதாகவும் வேறெந்த தேசத்தினிடத்திலும் தனக்கு விரோத எண்ணம் கிடையாது என்றும் பதில் சொல்லிற்று.

இப்படிச் சில நாட்கள் சென்றன. இதற்குள் நேச அரசுகள் துருக்கி ஜெர்மனியக் கப்பல்களை டார்டனெல்ஸுக்கு வெளியே அனுப்பிவிட வேண்டுமென்று சொல்லின. அதற்கு துருக்கி தான் அக்கப்பல்களை விலைக்குவாங்கி, அக்கப்பல்களுக்கு முஹம்மதியப் பேர்களை கொடுத்துவிட்டதென்று பதில் கூறிற்று. ஆனால் தினந்தோறும் ஜெர்மனியிலிருந்து ரோமேனியா வழியாக ஜெர்மனிய உத்தியோகஸ்தர்கள் வண்டிக்கணக்கான யுத்த தளவாடங்களுடன் வந்துகொண்டிருந்தார்கள். இன்னும் துருக்கியானது தனது படைகளில் சிலவற்றை ஸூவேஸ் வாய்க்காலின் பக்கம் அனுப்பிற்று. சின்ன ஆசியாவில் எங்கும் படைகள் சேர்க்கப்பட்டன.

தன் எல்லைக்குள்ளிருந்த அந்நிய தேசத் தபாலாபீஸ்களை யெல்லாம் துருக்கி நீக்கிவிட்டது. அந்நியர்களை தனது அரசாங்க அதிகாரிகளே விசாரணை செய்யவேண்டும் என்று புதிய உத்தரவு ஒன்று துருக்கி பிறப்பித்துக் கொண்டது; அதாவது இதற்கு முன் ஒரு பிரெஞ்சுக்காரன் துருக்கியில் வசிப்பானானால் அவன் செய்யும் குற்றங்களை துருக்கியிலிருக்கும் பிரெஞ்சு ஸ்தானாதிபதியே விசாரிக்கவேண்டும்; இம்மாதிரியே அங்கு வசிக்கும் அந்நிய தேசத்து ஜனங்கள் செய்யும் குற்றங்களை அந்த அந்த தேசத்து ஸ்தானாதிபதியே விசாரிக்கவேண்டும் என்று ஒரு சட்டம் இருந்தது. இப்பொழுது அந்த சட்டமானது எடுபட்டு, அதற்குப் பதிலாக துருக்கியில் எந்தத் தேசத்தினராலும் அவர்கள் செய்யும் குற்றங்களை துருக்கி யர

சாங்கத்தின் அதிகாரிகளை விசாரிக்க வேண்டுமென்று ஒரு நூதன சட்டம் ஏற்பட்டது.

"கோபன்," "ப்ரெஸ்லா" இந்த இரண்டு ஜெர்மனியத்துருக்கிக் கப்பல்களும் கருங்கடலுக்குள் நுழைந்து ருஷியக் கரைகளைத் தாக்கின, டார்டனேல்ஸ் ஜலஸந்தியானது துருக்கியினால் அந்நியக் கப்பல்களுக்கு மூடப்பட்டது. டார்டனேல்ஸ் ஜலஸந்தியின் கரைகளில் பெரிய பீரங்கிகள் வைக்கப்பட்டன. இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷியா இம்மூன்று அரசுகளும் இவற்றையெல்லாம் பார்த்து உடனே துருக்கியானது தனது கப்பல்களிலிருந்த ஜெர்மனிய வேலைக்காரர்களை நீக்கிவிட வேண்டுமென்று துருக்கிக்கு எழுதிக்கேட்டன. துருக்கி அப்படிச்செய்ய மறுத்துவிட்டது. பாக்தாத், மெஸப்போட்டேமியா இந்த இரண்டு பிரதேசங்களிலு மிருந்த துருக்கி உத்தியோகஸ்தர்கள் அவ்விடங்களிலுள்ள பிரிட்டிஷ் குடிகளை கடுமையாக நடத்த ஆரம்பித்தார்கள். துருக்கியினுடைய இந்த அடாத செய்கைகளை யெல்லாம் பொறுத்துக் கொண்டு, இங்கிலாந்து துருக்கி இனிமேலாவது ஜெர்மனிய வேலைக்காரர்களை அதனுடைய கப்பல்களினின்றும் நீக்கி விட்டு டார்டனேல்ஸ் வழியாகச் செல்லும் பிரிட்டிஷ் வியாபாரக்கப்பல்களை எவ்விதத்திலும் தொந்தரவு செய்யாமல் இருப்பதனால் துருக்கியின் ஸ்வதந்திரங்களுக்கும் ஒற்றுமைப் பாட்டுக்கும் ஒரு கெடுதியும் வாராமல் தான் பார்த்துக் கொள்வதாக உறுதி கூறிற்று.

இங்கிலாந்தினுடைய இந்த வார்த்தைகள் துருக்கியின் செவிகளில் ஏறவேயில்லை. ஈஜிப்டுதேசத்தின் எல்லை வரையில் ரோட்டுகள் போடப்பட்டன. ஸிரியாவிலுள்ள படைகள் தெற்கே அனுப்பப்பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடத்தில் வெறுப்பையும் விரோதத்தையும் உண்டாக்கும்படியான புஸ்தகங்களும் துண்டுபத்திரிகைகளும் பிரசுரிக்கப்பட்டுப் பரப்பப்பட்டன ; இந்தியாவிலும் மேற்படி துண்டுப் பத்திரிகைகள் பரப்பப்பட்டிருந்தாலும் இருக்கலாம்.

எத்தனையோ ஒற்றர்கள் ஈஜிப்டு தேசத்திற்கும் இந்தியா தேசத்திற்கும் அனுப்பப்பட்டார்கள்.

இவ்விதமாக நாளுக்குநாள் துருக்கி செய்துவந்த பற் பல செய்கைகளும் ஜெர்மனியின் தூண்டுதல்களினால் செய் யப்பட்டவையே என்று நேச அரசுகள் அறிந்துகொண் டன. கருங்கடற்கரையில் ருஷியா தேசத்தைச் சேர்ந்த ஒடெஸ்ஸா நகரத்தைத் துருக்கியின் இரண்டு, மூன்று துளை கருவிப்படகுகள் அணுகி ஒரு ருஷியப் பீரங்கிக்கப்பலை கடலுக்குள் அமிழ்த்தி, அநேகரைக் காயப்படுத்தியும் கொன்றும், செய்துவிட்டுசில ருஷியக் கப்பல்களையும் ஒரு பிரெஞ்சுக் கப்பலையும் சேதப்படுத்தி விட்டன என்று தெரியவந்தது. இனிமேல் நேசஅரசுகள் துருக்கியின் செயல்களை எப்படிப் பொறுக்க முடியும்? துருக்கிக்கப் பல்கள் ஒடெஸ்ஸா நகரத்தைத் தாக்கினதற்குக் காரணமென்ன வென்று நேச அரசுகள் துருக்கியைக் கேட்டன. நேசஅரசுகளுக்குக் கிடைத்த பதில் திருப்தி யாயில்லை. ருஷியாவானது துருக்கியிலிருக்கும் தனது தூதரை அவருடைய உத்தியோகஸ்தர்களுடன் ருஷியா வுக்குத் திரும்பிவந்துவிடும்படி உத்தரவு செய்துவிட்டது. இங்கிலாந்து நவம்பர்மீ முதல்தேதி தனக்கும் துருக்கிக் கும் யுத்தம் ஆரம்பித்திருக்கிறதாகத் தெரியப்படுத்திற்று. அதேதேதியில் இந்தியா தேசத்து ராஜப்பிரதிநிதியவர்கள் துருக்கி சென்ற மூன்று மாதங்களாகச்செய்துவந்த அடா தசெய்கைகளையும் இங்கிலாந்து எவ்வளவு பொறுமை யுடன் சகித்திருந்ததையும் ஜெர்மனியின் தூண்டுதல்களி னால் துருக்கிநெடுநாட்களாகத் தன்னுடன்ஸ்நேகமாயிருந்த இங்கிலாந்துடன் விரோதித்துக்கொண்டு விட்டது என்ப தையும்நீண்டதோர் அறிக்கையாக எழுதி இந்தியாதேசத் துச்சிற்றரசர்களுக்கும்ஜனங்களுக்கும்தெரிவித்தார். அதே தேதியில் நேச அர[illegible]ின் தூதர்கள் எல்லோரும் அவ ரவர்களுடைய பிரயாணச்சீட்டுக்களைத் துருக்கியினிடத்

தில் கேட்டார்கள். இவர்களுக்குப் பிரயாணச் சீட்டுக்கள் கொடுக்கப்பட்டுவிட்டன.

ஆயினும் துருக்கியின் முதல்மந்திரி நேசஅரசுகளிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாரென்றும் துருக்கியரசாங்கத்தாருக்குத் தெரியாமலே "கோபன்" "ப்ரெஸ்லா" என்ற இரண்டுயுத்தக்கப்பல்களும் ருஷியக்கரைகளைத்தாக்கினவென்றும் சொல்லப்பட்டது. துருக்கியரசாங்கத்தாருக்கு இந்த யுத்தத்தில் தலையிடப்பிரியமில்லையென்றும் துருக்கியின் வாலிபக்கட்சியாரே இந்தயுத்தத்தை துருக்கிக்கும் இழுத்துவிட்டனரென்றும் சொல்லப்பட்டது. ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்து மூன்றுவாரத்துக்குள்ளாகவே ஒரு நாள் துருக்கியின் இளவரசராகிய இஸ்ஸூத்தீன் என்பவர் துருக்கியின் மந்திரிகளை யெல்லாரையும் கூட்டி ஒருசபைசேர்த்து இந்த யுத்தத்தில் துருக்கிசேரலாமா? கூடாதா என்பதைப்பற்றி ஆலோசனைசெய்தார். அப்பொழுது மந்திரிகளைத்தவிர, வேறுயாரும் அந்த அந்தரங்கசபைக்கு வரக்கூடாதென்று அவர் தெரிவித்திருந்தும், யுத்தமந்திரியாகிய அன்வர் பாச்சா துருக்கியின் சேனாதிபதியாகிய ஜெர்மனியரையும் கூட்டிக்கொண்டு வந்தார். இது இளவரசருக்குப்பிடிக்கவில்லை. ஆயினும், அவர் இதைப்பற்றி முதல் மந்திரியிடத்தில் மாத்திரம் குறிப்பாகக் கூறிவிட்டு மந்திரிகளைப் பார்த்து இந்த யுத்தத்தில் துருக்கிசேரக்கூடாதென்பது தனது அபிப்பிராய மென்று கூறி மற்றவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டார். அப்பொழுது அன்வர்பே துருக்கி யுத்தத்தில் ஜெர்மனியின் பக்கம் சேரத்தான் வேண்டுமென்றும் அப்படிச் செய்வதினாலுண்டாகும் நன்மைகள் இன்னின்னவை யென்று விவரமாகத் தெரியப் படுத்தும்படி ஜெர்மனிய சேனாதிபதியைக் கேட்டுக்கொண்டார். உடனே இளவரசர் கோபம் மிகுந்து, ஜெர்மனிய சேனாதிபதி அந்நிய தேசத்தினரென்றும் அவர் துருக்கியின் மந்திரிகளில் ஒருவரல்லரென்றும் அன்வர்பே அவரை அந்த சபைக்குக் கூட்டிக்கொண்டு வந்த

தே தப்பு என்றும் ஆதலால் அவர் அபிப்பிராயம் சொல்லக் கூடாதென்றும் சொன்னார். இதன் மேல் அன்வர்பே யும் ஜெர்மன் சேனாதிபதியும் அவ்வறையை விட்டுப் போக நினைத்து எழுந்திருக்கும் பொழுது அன்வர்பே தனது வாளைத் தொட்டாரென்றும், இளவரசர் தம்மைக் கொல்வ தற்காகத் தான் வாளை உருவுகின்றாரோ என்று நினைத்துத் தமது கைத்துப்பாக்கியை எடுத்து அன்வர்பேயைச் சுட்டு விட்டார். அன்வர்பேய்க்குச் சிறு காயம் உண்டாயிற்று. உடனே சபையோர் விலக்கினார்கள். அன்வர்பேயும் ஜெர் மன் சேனாதிபதியும் வெளியே போய்விட்டார்கள்.

இதனால் துருக்கியில் இந்த யுத்த விஷயத்தில் இர ண்டு கட்சி ஏற்பட்டிருக்கிறது என்று அன்வர்பேயின் தலை மையின் கீழ் இருக்கிற வாலிபக் கட்சியாரே ஜெர்மனியரின் தூண்டுதல்களினால் இப்பொழுது கலந்து விட்டனரென் றும தெரிகிறது. இதற்குள்ளாகப் பண்டகள் ஸினை தீபகற் பத்திற்கு அனுப்பப்பட்டன. இந்தியா, ஈஜிப்டு முதலிய எல்லா முஹம்மதிய தேசங்களிலும் உள்ள முஹம்மதியர் கள் துருக்கி இந்த யுத்தத்தில் சம்பந்தப் பட்டுக்கொண்ட தைப்பற்றி மிகவும்விசனித்தார்கள்; ஆங்கில ராஜாங்கத்தி னிடத்தில் இப்பொழுதும் ராஜ பக்தி யுள்ளவர்களாகவே யிருக்கிறதாகவும் எவ்வித உதவியும் செய்யத்தயாராயிருக் கிறதாகவும் வாக்களித்தார்கள் ஹைதராபாத் நிஜாம் அவர் களும், ஆகாகான் முதலிய பிரபுக்களும் முன்னின்று இந் திய முஹம்மதியர்களுடைய ராஜ பக்தியை வெளிப்படுத் தினார்கள்.

"மினெர்வா" என்ற ஒரு சிறு பிரிட்டிஷ் யுத்தக் கப் பல் அக்காபா என்ற துறைமுகத்தைத் தாக்கி அதைப்பிடி த்துக் கொண்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அரேபியா விலிருக்கும் முஹம்மதிய பரிசுத்த ஸ்தலங்களைத் தாக்கு வதில்லையென்று உறுதி கூறினார்கள். ஆங்கிலேயப் போர்க் கப்பல்களும் ப்ரெஞ்சுப் போர்க்கப்பல்களும் டார்டனெல் ஸைத் தாக்க ஆரம்பித்தன கான்ஸ்டாண்டி நோபிலில்

தினந்தோறும் ஜெர்மனிய உத்தியோகஸ்தர்கள் வந்திறங்கி கொண்டேயிருந்தார்கள். பாஸ்ரா என்ற நகரிலுள்ள பிரிட்டிஷ் தூதரும் பிரிட்டிஷ் வியாபாரிகளும் துருக்கியால் தடைப்படுத்தப்பட்டு நிறுத்தி வைத்துக்கொள்ளப் பட்டார்கள்.

துருக்கியின் முதல் மந்திரி ராஜிநாமா கொடுக்கத் துணிந்தார்; அப்பொழுது யுத்தக்கட்சியார் அவரையுத்த சட்டத்தின்படி தண்டித்து விடுவதாகப் பயமுறுத்தினார்கள் என்றும் துருக்கி சுல்தான் அவர்கள் யுத்தம் வேண்டாமென்று சொன்னபொழுது ஜெர்மனியர்கள் தாங்கள் கொண்டு வந்திருக்கும்பெரிய பீரங்கிகளினால் அவருடைய அரண்மனையையே தாக்கி விடுவதாகப் பயமுறுத்தினார்களென்றும் சொல்லப்பட்டது. வேறு சில மந்திரிகள் ராஜிநாமா கொடுத்துவிட்டார்கள்.

சின்ன ஆசியாவில் ஆர்மீனியாவின் எல்லை வழியாக காக்கேஸியப்படைகள் ருஷியர்களால் நடத்தப்பெற்றுப் படையெடுத்து சின்ன ஆசியாவுக்குள் 45-மைல் தூரம் வரையில் நுழைந்து அஸப்பயாஸித் என்றபட்டணங்களைப் பிடித்துக்கொண்டன. எர்ஸ்ஸிரம் என்னும் இடத்தில் துருக்கிப்படைகள் சுமார் ஒரு லட்சம் பேர் வரையில் ஜெர்மனிய உத்தியோகஸ்தர்களின்கீழ் இப்பொழுது ருஷியப்படைகளுடன் யுத்தம் செய்து கொண்டிருக்கின்றன. துருக்கிப்படைகளும் தோற்றுவருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது; ஒரு சமயத்தில் ருஷியர்களும் தோற்றார்கள் என்று சொல்லப்பட்டது.

கருங்கடலில் துருக்கியின் துறைமுகமாகிய ட்ரேபிஸாண்ட் என்னும் நகரை ருஷிய யுத்தகப்பல்கள் தாக்கிக் கொண்டிருக்கின்றன. ருஷியத் துறைமுகமாகிய பாட்டூம் என்னும் நகரத்தை துருக்கியின் யுத்தக்கப்பல்கள் தாக்கிக் கொண்டிருக்கின்றன.

அத்தியாயம் 15.

ஜப்பானும் யுத்தமும்.

ஜப்பான் என்பது சில அழகிய தீவுகள் சேர்ந்த ஒரு ராஜ்யம்; சீனதேசத்துக்குகிழக்கே ஜப்பான்கடலினாலும் கொரியா வாய்க்காலினாலும் பிரிக்கப்பட்டுத் தனித்திருக்கின்ற ஒரு ராஜ்யம். ஐரோப்பாக்கண்டத்தில் க்ரேட் பிரிட்டன் என்னும் தேசம் இருப்பது போல ஆசியாக்கண்டத்தில் ஜப்பான் தேசம் இருக்கிறது. இதை பசிபிக் மகா சமுத்திரத்து க்ரேட் பிரிட்டன் என்று பூமி சாஸ்திரிகள் கூறுகின்றார்கள். இதன் விஸ்தீர்ணம் 1,48,456 சதுர மைல் உள்ளது; ஜனத்தொகை சுமார் 4,50,00,000. இது க்ரேட் பிரிட்டனை விடப்பெரிது. ஜனங்கள்கைத்தொழில்களிலும் சித்திர வேலைப்பாடுகளிலும் ஊக்கம் மிகுந்தவர்கள்; அன்பு, தயை, தாட்சண்ணியம் முதலிய உத்தம குணங்களையுடையவர்கள். ஜப்பான் தேசத்திற்கு சமாதான காலத்தில் 2,30,000 போர்வீரர்களும் யுத்த காலத்தில் 20,00,000 போர் வீரர்களும் உண்டு; 2,000 பீரங்கிகளும் உண்டு. இன்னும் ஜப்பானுக்கு 16 பெரிய யுத்தக்கப்பல்களும் 6 சிறு யுத்தக்கப்பல்களும் 9 ஆயுதம் தாங்கிய சிறு யுத்தக்கப்பல்களும் 21 சாதாரண யுத்தக்கப்பல்களும் 57 நாசகாரிகளும் 55 துளை கருவிப்பட்குகளும் 12 ஜல மூழ்கிக்கப்பல்களும் 3 பழய யுத்தகக்ப்பல்களும் 9 பீரங்கிக் கப்பல்களும் உண்டு. சிலவருஷங்களுக்கு முன் ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் நடந்த யுத்தத்தில் ஜப்பான் அடைந்த ஜெயத்தினால் அது தனது கரைப்படையையும் கப்பற்படையையும் விருத்தி செய்ய ஆரம்பித்தது. க்ரேட்பிரிட்டனைப்போலவே ஜப்பானும் சுற்றிலும் கடல்களாற் சூழப்பட் டிருப்பதால், கரைப்படையை விட அதற்குக் கடற்படையே மிகவும் அவசியம்ஆயிற்று. ஜப்பானுடைய கடற்படை உபயோகிக்கும் ஆயுதங்களின் அமைப்பில் அநேக ரகஸ்யங்களும் இருக்கின்றன வென்று சொல்லப்படுகிறது.

இப்பொழுது ஐரோப்பாவில் வல்லரசுகளுக்குள் யுத்தம் ஆரம்பமானவுடன், ஆகஸ்டுமீ 6-ம் தேதியே ஜப்பான் தனக்கும் இங்கிலாந்துக்குமுள்ள உடன்படிக்கையின்படி நடக்கத் தயாராயிருக்கிறது என்று இங்கிலாந்தினிடத்தில் கூறிவிட்டது. அட்மிரல்தேவா என்பவரின் தலைமையின் கீழ் ஜப்பானியப் படைக்கப்பல்கள் யுத்தத்திற்குத் தயாராய் விட்டன. சீனக்கடலில் இருந்த ஜெர்மனிய யுத்தக்கப்பல்கள் எங்கு சென்றுவிட்டன என்று தெரியவில்லையென்றும் ஆனால்பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்களுக்குக் கெடுதியை உண்டுபண்ணுவதற்குத் தயாராயிருக்குமென்றும் ஊகிக்கப்பட்டது. ஆதலால் பிரிட்டிஷாருடைய நன்மைகளைக் காப்பாற்ற வேண்டுமானால் ஜப்பான் கயாச்சோ பிரதேசத்தைக் கைப்பற்ற வேண்டியது அவசியமாயிற்று.

கயாச்சோ என்னும் பிரதேசமானது சீனதேசத்தில் ஒருபாகம். இரண்டு ஜெர்மன் பாதிரிகளை சீனதேசத்தார் கொன்றுவிட்டார்கள் என்றதொரு காரணத்தை முன்னிட்டு ஜெர்மனிதான் வெகுநாட்களாகக் கண்வைத்திருந்த கயாச்சோப் பிரதேசத்தை தனக்கு 99 வருஷங்கட்குக் குத்தகைக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று சீனதேசத்தைக் கட்டாயப் படுத்தி வாங்கிக்கொண்டார்கள். அங்கே அவர்கள் ஏராளமான பணத்தைச்செலவு செய்து அந்தப் பிரதேசத்தை வெகு சீக்கிரத்தில் விருத்தி செய்து கொண்டார்கள். உலகத்தில் ஜெர்மனிக்குள்ள குடியேற்ற நாடுகளில் கயாச்சோ தான் ஜெர்மனியர்களால் வெகு அருமையாகப் பாராட்டப்பட்டு வந்தது. இப்பொழுது ஜப்பானியர்கள் இங்கிலாந்துடன் செய்திருக்கும் உடன்படிக்கையின் பிரகாரம் ஆசியாவில் இங்கிலாந்தினுடைய நன்மைகளைக் கவனிக்க வேண்டியவர்களானார்கள். ஆதலால் ஜப்பானியக் கடல்களிலும் சீனக்கடல்களிலும் ஜெர்மனிக்குப் போர்க் கப்பல்கள் இருக்குமாயின் அவற்றை ஜெர்மனி உடனே அக்கடல்களினின்றும் [illegible] வேண்டுமென்றும் அல்லது அக்கப்பல்களிலிருக்

கும் ஆயுதங்களை நீக்கிவிட்டு அவற்றைச் சாதாரணக் கப்பல்களாக்கிவிட வேண்டுமென்றும் கயாச்சோவை ஜப்பானிடத்தில் ஒப்புவித்துவிட வேண்டுமென்றும் ஜப்பான் கடைசியில் கயாச்சோவை சீனதேசத்திற்கு ஒப்புவித்து விடுமென்றும் இதற்கு பதில் ஜெர்மனி ஆகஸ்டுமீ 23-ம் தேதி பகலுக்குள் ஜப்பானுக்குத் திருப்திகரமாகக் கொடுக்காத விஷயத்தில் ஜப்பான் தனது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளைத் தானே செய்துகொள்ளுமென்றும் ஜப்பான் ஜெர்மனிக்கு ஆகஸ்டுமீ 16-ம் தேதியன்று தெரிவித்தது.

உடனே அமெரிக்க ஐக்கிய நாடுகள் யோசனை செய்தன போலத் தோன்றுகிறது; ஏனென்றால் அமெரிக்காவினுடைய நன்மைகளும் கவனிக்கப் படுமென்று ஜப்பான் அமெரிக்காவுக்கு உறுதிகூறிற்று. இம்மாதிரியாக ஜப்பான் ஜெர்மனிக்கு அறிவித்ததைப் பற்றி சீன அரசாங்கத்தார் ஆச்சர்ய மடைந்து தங்களுடைய சாமர்த்தியத் தினாலும் அறிவினாலும் தாங்களே கயாச்சோவைக் கைப்பற்றிக் கொள்ள எண்ணியிருப்பதாகத் தெரிவித்தார்கள். ஜெர்மனியிடத்திலிருந்து கயாச்சோவை அமெரிக்கா தனக்கு வாங்கிக் கொடுக்கும்படிக்கு சீன தேசமானது அமெரிக்காவை வேண்டிக் கொண்டது. அமெரிக்காவுக்கு இவ்விஷயத்தில் பிரவேசிக்க இஷ்டமில்லை. ஆனால் ஜப்பான் கயாச்சோவில் தவிர சீனதேசத்தின் மற்ற எந்த இடத்திலும்எவ்வித யுத்தக் கார்யங்களையும் செய்யக் கூடாதென்று அமெரிக்காவானது ஜப்பானிடத்தில் கண்டிப்பாகச் சொல்லிவிட்டது.

முன்னொரு சமயத்தில் ருஷியாவும் ஜப்பானும் யுத்தம் செய்து முடிந்தவுடன் ஜப்பான் போர்ட் ஆர்தர் என்னும் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அப்பொழுது ஜெர்மனி அவ்விடத்தை விட்டுவிட்டு ஜப்பான் போய்விட வேண்டுமென்று அதிகாரத்துடன் கூறிற்று. ஜப்பான் அப்பொழுது தான் ருஷியாவுடன் யுத்தம் செய்து ஓய்ந்திருந்ததி

னால், போர்ட் ஆர்தரை விட்டுவிட்டது. இப்பொழுது ஜப்பான் தனக்கு ஜெர்மனி முன் எப்படி அதிகாரத்துடன் எழுதிற்றோ அப்படியே அதிகாரத்துடன் ஜெர்மனிக்கு எழுதிற்று. ஆகஸ்டுமீ 23உ பிறந்துவிட்டது. ஜெர்மனி ஜப்பானுக்குப்பதில் கூறவில்லை. ஜப்பான் ஜெர்மனியுடன் யுத்தத்திற்குத்தயாராய்விட்டது. ஜெர்மனியர்களும்துறை முகத்தைச் சுற்றிக்கடல்களில் சுரங்கங்களைவாரிஇறைத்து விட்டார்கள். ஜெர்மனியானது அங்கிருந்த ஜப்பானிய தூதரிடத்தில் ஜப்பானுக்குப் பதில் சொல்வதற்கு ஜெர்மனிக்குப்பிரியமில்லை யென்று ஆங்காரத்துடன் கூறிற்று. 1914வரு ஆகஸ்டுமீ 23உ ஜப்பான் ஜெர்மனியுடன் யுத்தம் செய்யப்போவதாக அறிவித்து விட்டது.

கயாச்சோவை ஜெர்மனியினிடத்திலிருந்து பிடுங்குவதற்குத் தீர்மானித்து ஜப்பான் யுத்தம் ஆரம்பித்தவுடனே, அநாவசியமாகக் கயாச்சோவில் ஜனங்கள் கொல்லப்படக் கூடாது என்றும் ஆதலால் யுத்தம் நெடுநாள் நடக்கும்போலிருக்கிறது என்றும் ஜப்பானிலிருந்து உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்டது. ஜப்பானியப் போர்க்கப்பல்கள் கயாச்சோவின் பிரதான நகரமாகிய ஸிங்டாவைத் தாக்க அரம்பித்தன. ஜெர்மனியர் கடல்களில் இட்டிருக்கும் சுரங்கங்களைக் கண்டு எடுக்கும் கப்பல்கள் முன் சென்று சுமார் ஆயிரம் சுரங்கங்கள் வரையில் எடுத்துவிட்டு கயாச்சோவைச் சேர்ந்த ஏழு தீவுகளை ஜப்பான் கைவசப்படுத்திக்கொண்டது.

பிரிட்டிஷ் படைகளும் பிரிட்டிஷ் போர்க்கப்பல்களும் கயாச்சோவைப் பிடிப்பதில் ஜப்பானுக்கு உதவி செய்தன. செப்டம்பர்மீ 25-ம் தேதி வரையில் ஜப்பானியர் கடல்களிலிருந்த சுரங்கங்களை யெல்லாம் நீக்குவதும் கடற்கரையிலிருந்து ஸிங்டா வரையிலும் இருந்த பாதைகளை யெல்லாம் சீர்ப்படுத்துவதும் இடையிடையே ஜெர்மனியர்களுடன் யுத்தம் செய்வதுமே ஜப்பானியப் படையெடுப்புச் சைந்நியத்தின் வேலையாயிருந்தது. செப்டம்பர்மீ 28உ

ஜெர்மனியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் ஒரு கடுமையான யுத்தம் நடந்தது. ஜப்பானியர் ஸிங்டாவிலுள்ள இரண்டு கோட்டைகளைத் தாக்கினார்கள். ஜப்பானியர்களுக்குள் 150பேர் சேதம் ஏற்பட்டது; ஜெர்மனியர்களுக்குள் ஏற்பட்ட சேதம் தெரியவில்லை. ஆனால் ஜப்பானியர் கைதிகளாக 50-ஜெர்மனியர்களையும் 4-யந்திர பீரங்கிகளையும் பிடித்துக் கொண்டார்கள்; இன்னும் ஜப்பானியர்கள் ஸிங்டாவுக்குப் பக்கத்திலுள்ள லாவோசி துறைமுகத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அக்டோபர்மீ 7-ம் தேதி "கார் மோரான்" என்ற ஜெர்மன் சிறுயுத்தக்கப்பலும் இரண்டு பீரங்கிகப்பல்களும் கியாச்சோக் குடாக்கடலில் அமிழ்த்தப்பட்டன. ஜெர்மனிய கப்பற்படைகள் பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள மார்ஷல் தீவுகளில் ஒளிந்து கொண்டிருந்தனவென்று கருதி ஜப்பானியக் கப்பற்படைகள் அங்குசென்று மார்ஷல் தீவைக் கைப்பற்றிக் கொண்டன. "இல்டிஸ்," "ஸிங்டா" என்ற இரண்டு கோட்டைகள் அழிக்கப்பட்டனவென்றும் அப்பொழுது ஜப்பானிய ஆகாயவிமானிகள் உயரவிருந்து வெடிக்குண்டுகளை யெறிந்தார்களென்றும் சொல்லப்பட்டது.

இடையில் ஒருஜப்பானியத் துளைகருவிப்படகு சீனக்கடலுக்குள் நுழைந்து ஜெர்மனிய நாசகாரிக்கப்பல் ஒன்றைப்பிடிக்கச் சென்றதென்று சீன அரசாங்கத்தார் அந்தத் துளைகருவிப்படகு உடனே சரணடைந்து விடவேண்டுமென்று ஜப்பானைக் கேட்டார்கள். ஆனால் இவ்விஷயமாகப்பின் ஒன்றும் சொல்லப்படவில்லை. புயல் காற்றினால் கியாச்சோக் கடல் கொதித்துக் கலங்கிவிட்டது. ஆதலால் சில இடங்களில் போடப்பட்டிருந்த சுரங்கங்கள் எங்கும் பரந்து விட்டன. ஆதலால் கடற்படை வேலைகள் சுலபமாகச் செய்யப்பட முடியவில்லை. அக்டோபர்மீ 31-ம் தேதி தான் ஸிங்டா கரைப்பக்கத்திலிருந்தும் கடற்பக்கத்திலிருந்தும் முற்றுகை யிடப்பட்டதென்று ஜப்பானில் உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்

டது. நவம்பர் மீ முதல் தேதியன்று ஸிங்டாவின் கோட்டைகளெல்லாம் அடங்கிவிட்டன; இரண்டு கோட்டைகள் மாத்திரம் ஜப்பானியப் பீரங்கிகளை எதிர்த்து நின்றுகொண்டிருந்தன; அன்று ஒரு ஜெர்மனியப் பீரங்கிக் கப்பல் அமிழ்த்தப்பட்டது. நவம்பர் மீ 3-ம் தேதி ஸிங்டாவிலிருந்த எண்ணெய்க்கிணறுகள் எரிக்கப்பட்டன.

ஸிங்டாவிலிருந்த ஜெர்மனியர்களுக்கு ஆகாராதிகள் வந்துகொண்டிருந்த பாதையானது ஜப்பானியப் படைகளால் தடுக்கப்பட்டுவிட்டது. ஆதலால் ஸிங்டா சரண் அடையத்தான் வேண்டிவந்துவிட்டது. நவம்பர் மீ 6உ ஸிங்டா ஜப்பானியர்களிடத்தில் சரணடைந்துவிட்டது. ஆனால் சரணடைவதற்கு முன் அங்கு இருந்த ஜெர்மனியர்கள் ஜப்பானியர்களுடன் பயங்கரமாக யுத்தம் செய்தார்கள். ஜப்பானியர்களுக்குள் 440 பேர் சேதம் ஏற்பட்டது. ஜெர்மனியர்களுக்குள் சேதம் எத்தனையென்று தெரியவில்லை. 2,300 ஜெர்மனியர்கள் ஜப்பானியர்களால் கைதிகளாகப்பிடிக்கப்பட்டார்கள். ஸிங்டாவை யுத்தம் முடியும் வரையில் ஜப்பானிய அரசாங்கத்தார் வைத்திருப்பார்களென்றும் யுத்தம் முடிந்தவுடன் சீனதேசத்திற்கு அதை ஒப்புவிக்கும் விஷயத்தைப்பற்றி யோசனைசெய்யுமென்றும் சொல்லப்படுகிறது. நவம்பர் மீ 7உ சனிக்கிழமை மாலை 7-50-க்கு ஸிங்டா சரணடைந்த விவரமானது இருகட்சியாராலும் கையெழுத்திடப்பட்டது. மறுநாட் காலையில் கயாச்சோப்பிரதேசமானது ஜெர்மனிய பிரதிநிதியால் ஜப்பானிய அரசாங்கத்தாருக்கு ஒப்புவிக்கப்பட்டது.

அத்தியாயம் 16.

மற்றதேசங்களும் யுத்தமும்.

மற்ற தேசங்களெல்லாம் நாம் இப்பொழுது எழுதும் வரையில் பொதுவாகவே யிருந்து வருகின்றன. முக்கிய

மாகவல்லரசுகளால் கவனிக்கப்பட வேண்டிய தேசங்களில் ஒன்று இத்தாலி தேசம். இதற்கு மத்தியதரைக் கடலில் நெடுந்தூரம் கரைகளுண்டு; இன்னும் பலமான கடற்படையும் உண்டு. இந்த தேசமானது ஜெர்மனி, ஆஸ்டிரியா இந்த தேசங்களுடன் நட்புகொண்டு உடன் படிக்கை செய்துகொண்டது. இப்பொழுது இப்பெரிய யுத்தம் ஆரம்பிக்கவே, இத்தாலி தேசமானது ஜெர்மனிக்கும்ஆஸ்டிரியாவுக்கும் உதவி செய்ய மறுத்து விட்டுத் தான் பொதுவாயிருப்பதாகத் தெரிவித்து விட்டது. ஜெர்மனி தன்னுடன் இத்தாலி செய்துகொண்டிருக்கும் உடன்படிக்கையின்படி தன்னுடன் யுத்தத்தில் சேர்வதற்கு இத்தாலி கடமைப் பட்டதென்று வற்புறுத்திக்கூற, ஜெர்மனி அக்கிரமமாக அந்நிய தேசங்களுக்குள் புகுந்து செய்யும் யுத்தங்களில் சேர்வதற்குத் தான் கடமைப்படவில்லையென்று இத்தாலி பதில் உரைத்துவிட்டது. ஆயினும் ஜெர்மனி மறுபடியும் தனது பிரதிநிதிகளை யனுப்பி இத்தாலியை நயத்திலும் பயத்திலும் தூண்டிப்பார்த்தது. இத்தாலி ஒரே பிடிவாதமாயிருந்து விட்டது. இத்தாலியில்ஒரு கட்சியார் நேச அரசுகளுக்கு உதவி செய்யவேண்டுமென்று ஒரே கருத்துடையவர்களாயிருந்தார்கள்; இப்பொழுதும்அப்படியேயிருக்கிறார்கள். இன்னொரு கட்சியார் இத்தாலி பொதுவாயிருக்கவேண்டு மென்று வற்புறுத்துகிறார்கள். இவ்விதமாகப் பலமான இரண்டு கட்சிகள் ஏற்பட்டு விடவே, இத்தாலியானது இன்று வரையில் பொதுவாகவே யிருந்து வருகிறது. ஆனால் இத்தாலியின் ஜனங்களிற்பெரும்பான்மையோரும் இங்கிலாந்தின் பக்கத்தில் சேர அபிப்பிராயமுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இத்தாலி இங்கிலாந்துடன் சேர்ந்து விடவேண்டு மென்று அடிக்கடி பெருங் கூட்டங்களும் கொண்டாட்டங்களும் நடந்தனவாம். ஆஸ்டிரியாவைச் சேர்ந்தட்ரீஸ்ட் என்னும் துறைமுகப்பட்டணத்தில் இருந்த ஏராளமான இத்தாலியர்கள் ஆஸ்டிரிய அரசாங்கத்திற்கு விரோதமான எண்

ணங்களைக் கொண்டிருக்கிறார்களென்று ஆஸ்டிரிய அரசாங்கத்தார் அவர்களை மிகக் கடுமையாக நடத்த ஆரம்பித்தார்கள். இதுவும் இத்தாலிக்குக் கோபத்தை மூட்டிக்கொண்டிருந்தது. இப்பொழுது இங்கிலாண்ட், பிரான்ஸ், ருஷியா இம்மூன்று தேசங்களிலுமிருந்த இத்தாலிஸ்தானுபதிகளை இத்தாலி யரசாங்கத்தார் ஏதோ யோசனை செய்வதற்காக இத்தாலிக்கு வரும்படி அழைத்திருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது.

இத்தாலியில் ரோம் என்னும் நகரில் யுத்தம் ஆரம்பிக்கும்பொழுது இருந்த போப் என்னும கிறிஸ்தவ உலககுரு தம்மாலான மட்டும் இந்த யுத்தத்தை நிறுத்தி விடுதற்குப் பாடுபட்டார். கடைசியில் அவருடைய முயற்சிகள் பலிக்காது போய்விடவே, அவர் ஏக்கம் மிகுந்து உயிர் நீத்தார். அவர் மரணமடையும் பொழுது "முன்காலங்களில் போப் என்பவர்கள் இத்தகைய யுத்தங்களை நிறுத்தி யிருப்பார்கள்; இப்பொழுது நான் சக்தியற்றவனாயிருக்கிறேன்" என்று கூறினார். அவர் மரணமடைந்ததற்குக் காரணம் இந்த யுத்தமே காரணம் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது அந்த ஸ்தானத்தில் வந்திருக்கும் புதிய போப் பட்டத்திற்கு வந்த வுடனேயே இந்த யுத்தத்தை நிறுத்துவதற்குத் தமது உயிரை வேண்டுமானாலும் கொடுப்பதாகக் கூறினா; இப்பொழுது அவர் இந்த யுத்தத்தை இதுடன் நிறுத்திவிட வேண்டுமென்று எல்லா அரசர்களுக்கும் எழுதியிருக்கிறாராம்.

ஸ்விட்ஸர்லாந்து என்பது மிகச் சிறிய தேசம். ஆனால் அது சுற்றிலும் பெரிய பெரிய மலைகளால் சூழப்பட்டிருப்பதால் அந்நியர்கள் அதனுள் படையெடுத்துச் செல்லுதல கஷ்டம். இந்த தேசம் பொதுவாயிருந்து வந்தாலும், தனது படைகளைச் சேர்த்துக் கொண்டு எவர்படை யெடுத்துவந்தாலும் அவர்களை எதிர்க்கத் தயாராயிருக்கிறது. ஜெர்மனிதனது படைகளை ஸ்விட்ஸர்லாந்து தேசத்தின்வழியாகச் செல்வதற்கு அநுமதி கொ

டுக்கவேண்டுமென்று ஸ்விட்ஸர்லாந்து தேசத்தைக்கேட்க, ஸ்விட்ஸர்லாந்து தேசமானது மறுத்துவிட்டது. ஆனாலும், ஜெர்மனிதனது வியாபாரப் போக்குவரவுகளில் ஒருபெரும் பாகத்தை ஸ்விட்ஸாலாந்து வழியாக நடத்திவருகிறது என்று சொல்லப்படுகிறது.

ஹாலண்ட் தேசமானது ஜெர்மனிக்கு வடமேற்கிலும் பெல்ஜியத்திற்கு வடக்கிலும் இருக்கிறது. இந்த தேசமானது பொதுவா யிருக்கிறது; ஆனால் இதுவும் படைசேர்த்துக் கொண்டிருக்கிறது. இந்ததேசத்தின் எல்லைக்குள்ளும் சிலசமயங்களில் ஜெர்மனியப் படைகள் ஆக்கிரமித்தன என்றுசொல்லப்பட்டது. இந்ததேசத்தின் வழியாகவும் ஜெர்மனியர்கள் வியாபாரப் போக்குவரவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

நார்வே, ஸ்விடன் இந்தஇரண்டு தேசங்களும் ஒரு கட்சியிலும் சேராவிட்டாலும், ஜெர்மனிக்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்து வியாபாரம் செய்து வருகின்றன வென்று சொல்லப்படுகிறது.

போர்த்துக்கல் தேசமானது இங்கிலாந்துக்கு மிகப் பழமையான ஸ்நேகத்தையுடையதேசம். வெகுநாட்களாக பலமான உடன்படிக்கையினால் கட்டப்பட்டு இவ்விரண்டு தேசங்களும் மிகவும் ஒற்றுமையா யிருக்கின்றன. இந்ததேசத்து ஜனங்கள் இந்தயுத்தத்தில் இங்கிலாந்துடன் சேரவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அரசாங்கத்தாரும் இப்படிச்செய்வதற்குத் தயாரா யிருக்கிறார்கள். இதனிடையில் ஆப்பிரிக்காவில் ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவில் உள்ள ஒரு சிறு ஜெர்மனியப்படை அதற்கு வடக்கே போர்த்துக்கலுக்குச் சேர்ந்துள்ள அங்கோலாஎன்னும் பிரதேசத்தின் எல்லைக்குள் நுழைந்து விட்டனவென்றும் போர்த்துகல் காவலாளிகள் உடனே சுட்டார்களென்றும் ஜெர்மனியப்படைகள் ஓடிவிட்டன வென்றும் சொல்லப்பட்டது. இதனால் போர்த்துக்கலுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் கிளம்பிவிடுமென்று எதிர்

பார்க்கப்பட்டது. போர்த்துக்கலுக்குள் ராஜீயக்கட்சியார் கலகஞ்செய்து உள்நாட்டுக் குழப்பங்களை உண்டாக்கவே, ராஜீயக்கட்சியைச் சேர்ந்த பலரும் கைதிகளாக்கப்பட்டுக் கலகங்கள் அடக்கப்பட்டு விட்டபோதிலும், போர்த்துக்கல் யுத்தத்தில் சேரப்போகின்றது என்றசமாச்சாரம் இதுவரை நின்று போயிருக்கிறது.

ஸ்பெயின் என்பது போர்த்துக்கலுக்கு கிழக்கேயுள்ள தேசம். இது முற்காலத்தில் உலகில் பெரிய ராஜாங்கமாயிருந்தது. இப்பொழுது இதுமிகவும் க்ஷீணஸ்திதியையடைந்து விட்டது. ஆனாலும் ஜனங்கள் இந்தயுத்த விஷயத்தில் ஜெர்மனியினிடத்தில் அநுதாபமுடையவர்களாகவேயிருக்கிறார்கள். ஐரோப்பாவில் ஜெர்மனினியிடத்தில் அநுதாபமுடையனவாகக் காணப்படுகின்றதேசங்கள் இரண்டேதாம்: அவை துருக்கியும் ஸ்பெயினுமாம். ஆனால் துருக்கிஜெர்மனியுடன் சேர்ந்து யுத்தத்தில் தலையிட்டுவிட்டதுபோல, ஸ்பெயின் செய்யவில்லை; ஸ்பெயின் இன்னும் படைகளைக்கூடச்சேர்க்கவில்லை. மனத்தினால் ஸ்பெயின் அன்புசெலுத்துவது போலக்காணப்படுகிறதே யன்றி செய்கையில், ஜெர்மனியுடன் அது சேர்வதற்குத் தயாராயில்லை.

ரோமேனியா என்பது ஆஸ்டிரியா ஹங்கேரிக்குத் தென்கிழக்கில், பல்கேரியாவுக்கு வடக்கில் உள்ள ஒரு சிறியதேசம். யுத்தம் ஆரம்பித்தபொழுது இந்ததேசத்தில் அரசராயிருந்தவர் ஜெர்மன் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் ஜெர்மனியுடன் சேர்ந்து நேசஅரசுகளுடன் யுத்தம் செய்வதற்குத் தயாராயிருந்தார். ஆனால் இந்த தேசத்து ஜனங்கள் நேசஅரசுகளுடன் ரொமேனியா சேரவேண்டும் அல்லது பொதுவாயிருக்கவேண்டும் என்று ஒரே பிடிவாதமாக அபிப்பிராயப்படவே, ரொமேனியா ஜெர்மனியுடன் சேரமுடியாது போயிற்று. அவ்வரசர் சமீபத்தில் இறந்துவிட்டார். அவர்உயிருடனிருக்கும் வரையில் ஜெர்மனியிலிருந்து யுத்ததளவாடங்கள் உண்டிக்கணக்காக ரொமேனி

யாவழியாகத்துருக்கிக்கு வந்து கொண்டேயிருந்தன. அவர்இறந்தவுடன், அவ்வழியாக வந்த ஜெர்மனிய யுத்ததளவாடங்கள் ரொமேனியா அரசாங்கத்தாரால் நிறுத்தப்பட்டுபிடித்துவைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது ஆஸ்டிரியா ஸெர்வியாவைத் தோற்கடித்து ஜெயமடைந்து வருகின்றது என்று கேள்விப்பட்டவுடன் பால்கன் நாடுகளில் ஒன்ருகிய ரொமேனியா பல்கேரியாவுடன் யோசனைசெய்ய ஆரம்பித்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

பல்கேரியா என்பது துருக்கிக்கு வடக்கிலும் ரொமேனியாவுக்குத் தெற்கிலும் ஆஸ்டிரியா ஹங்கேரிக்குகிழக்கிலும் உள்ள ஒருசிறியதேசம். இது சென்ற பால்கன் யுத்தம் முடிந்தது முதல் துருக்கியுடன் இஷ்டமாயிருந்து வந்ததாகச் சொல்லப்பட்டது. இதுவும் பால்கன் நாடுகளில் ஒன்று. இப்பொழுது ஸெர்வியாவுக்குத் தோல்விகள் ஏற்படவே, பல்கேரியாவும் பால்கன் நாடுகளுக்கு ஆபத்து வரும்போலிருக்கிற தென்று நினைத்து யுத்தத்தில் சேரலாமா? என்று யோசனை செய்து கொண்டிருக்கிறது.

க்ரீஸ் தேசமானது இதுவரையில் பொதுவாயிருக்கிறது; ஆனல் யுத்த நோக்க முடையதாகக் தோன்றுகிறது; நேச அரசுகளுடன் சேர்ந்துகொள்ளும் என்று நம்பப்படுகிறது.

ஆசியாக் கண்டத்தில் சீனதேசம் இதுவரையில் பொதுவாகத்தான் இருக்கிறது. இனிமேலும் அது எந்தக் கட்சியிலாவது சேரும் என்று நம்புவதற்கு இடம் இல்லை. ஆனல் ஜெர்மனியர்கள் நேச அரசுகளுக்கு விரோதமாக சீனதேசத்தைக் கிளப்பி விடுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்து வருகிருர்கள். சீனதேசத்தில் சென்ற 1,000 வருஷங்களாக நடந்து வந்த "பீகின்கெஜெட்" என்ற சமாச்சாரப் பத்திரிகையை ஜெர்மனியர்கள் விலைக்கு வாங்கி இப்பொழுது நடத்தி வருகிருர்கள்; சீனதேசத்து ஜனங்களு

டைய மனத்தை இப்பத்திரிகையினால் மாற்றிவிடலாமென்று ஜெர்மனியர்கள் நம்பியிருக்கிறார்கள்.

ஆப்கானிஸ்தானத்து அமீர் தாம் பொதுவாயிருப்பதாக வாக்களித்திருக்கிறார். பாரசிக தேசத்து ஷா அவர்களும் பொதுவா யிருப்பதாக வாக்களித்திருக்கிறார்.

ஆப்பிரிக்காக் கண்டத்தில் தென்னாப்பிரிக்கா ஐக்கிய அரசாங்கத்தார் பிரிட்டிஷ் சக்ராதிபத்தியத்தி னிடத்தில் உண்மையான விஸ்வாசத்துடன் ஜெர்மன் ஆப்பிரிக்காப் பிரதேசங்களைப் படையெடுக்கத் தொடங்கினார்கள். ஜெர்மனியர்களுடைய முக்கியமான பிரதேசமாகிய டோகோலாண்ட் பிடிக்கப்பட்டது. அநேக சில்லரை யுத்தங்களும் நடந்தன.

இதற்குள்ளாக தென்னாப்பிரிக்காவிலேயே குழப்பங்கள் உண்டாய் விட்டன. போயர்ஸ் என்னும் ஒரு தென்னாப்பிரிக்கா சைந்நியாதிபதி அரசாங்கத்தாருக்கு அநுகூலமாக யிருப்பது போலவே காட்டி ஜெர்மன் ஆப்பிரிக்காப் பிரதேசங்களைப் படையெடுப்பதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டு பின்னர் திடீரென்று தமது வேலையை ராஜிநாமா கொடுத்து விட்டார். இவரும் கர்னல் மாரிட்ஸ் என்பவரும் இன்னும் சிலரும் சேர்ந்துகொண்டு ஜெர்மனியினுடைய தூண்டுதல்களினால் வஞ்சிக்கப்பட்டவர்களாகி திடீரென்று கலகம் செய்யக்கிளம்பி விட்டார்கள். உடனே தென்னாப்பிரிக்கா ஐக்கிய அரசாங்கத்தின் தலைவராகிய போத்தா அவர்களே தமது சைந்நியங்களுடன் சென்று அக்கலகக்காரர்களை எதிர்த்து முறியடித்து மூலைக்கு மூலை அவர்களை ஓட ஓடத் துரத்தினார். கலகம் அடங்கிவிட்டது. கலகக்காரர்களிற் பலரும் ஐக்கிய அரசாங்கத்தாரிடம் சரணடைந்து வருகிறார்கள்.

அமெரிக்காவில் ஐக்கியநாடுகளின் அரசாங்கத்தார் இந்தயுத்தத்தில் ஒருகட்சியிலும் சேராது நடுநிலைமையாயிருந்துவருகிறார்கள். அவர்கள்சென்ற அக்டோபர்மீ 4-ம்

தேதியன்று உலகில் சமாதானம் ஓங்கும்படி கடவுளைநோக்கிப் பிரார்த்தனை செய்தார்கள். தென்னமெரிக்காவில் ப்ரஸீல் நாட்டரசாங்கத்தார் ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தத்திற்குக் கிளம்புவார்கள் போலத்தோன்றிற்று. ஆனால் பின்னர் ஒன்றும், கேட்கப்படவில்லை. சிலி அரசாங்கத்தார் ஜெர்மனிக்கு அநுகூலமா யிருப்பார்களென்று ஊகிக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது அவர்கள் நடுநிலைமையில் இருக்கிறார்கள் போலவே தோன்றுகிறது.

ஆஸ்டிரேலியா முழுதும் ஆங்கிலேயர்களுக்கே அநுகூலமாயிருக்கிறது. எம்டனைப்பிடித்தது ஆஸ்டிரேலிய யுத்தக்கப்பல்தான்.

அத்தியாயம் 17.

யுத்தத்தின் நிலைமை.

ஆண்ட்வேர்பை ஜெர்மனியர்கள் பிடித்துக்கொண்டவுடனே ஓடிப்போன ஜனங்களை யெல்லாம் திருப்பவும் ஊருக்குள்வந்து வசிக்கும்படி அழைத்தார்கள். குடிஜனங்களை மிகவும் பிரியத்துடன் நடத்தினார்கள். இவர்கள் என்ன நன்மைகளைக்குடிகளுக்குச்செய்வதாக வாக்களித்தபோதிலும், குடிகள் இவர்களை நம்புவதாயில்லை.

உடனே ஜெர்மனியப்படைகள் தெற்கு நோக்கி புறப்பட்டு மேற்குபக்கம் சென்றன. கெண்டைப்பிடித்துக்கொண்டன; ப்ருஜஸைப்பிடித்துக்கொண்டன; ஆஸ்டண்டையும் பிடித்துக்கொண்டன. பெல்ஜிய அரசாங்கமானது ஆஸ்டண்டிலிருந்து பிரான்ஸில் ஹாவேர் என்னும் நகரத்திற்குமாற்றப்பட்டது. ஆஸ்டண்டிலிருந்து டன்கர்க்குக்கு ஜெர்மனியப்படைகள் சென்றன. ஜெர்மனியர்கள் கலேய் என்னும் துறைமுகத்தைப்பிடிக்கதீர்மானித்து இவ்வளவும் செய்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. கலேய் என்னும் நகரத்திற்கும் இங்கிலாந்தில்தில் டோவர் என்

னும் துறைமுகத்துக்கும் உள்ள தூரம் 20-மைல் தான்; இடையில் டோவர் ஜலஸந்தியிருக்கிறது. ஆதலால் இங்கிலாந்தைப்படையெடுக்கவேண்டுமென்ற மூட எண்ணத்தைக்கொண்டு ஜெர்மனியர்கள் கலேய்நகரத்தைப்பிடிக்கச் சொன்னார்களோ? என்னவோ? தெரியவில்லை. எப்படியிருந்தாலும் பிரிட்டிஷ் படைகளும் பிரெஞ்சுப்படைகளும் டன்கர்க்கிலேயே ஜெர்மனியர்களைத் திர்த்துக்கொண்டன. இன்னும் பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் பல டன்கர்க்கு கரையோரத்தில் வந்து நின்றுகொண்டு கரையிலிருக்கும் ஜெர்மனியப்படைகளைத் தாக்கின. ஜெர்மனியப் படைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து விழுந்து அழிந்தன. ஆயிரக்கணக்கான ஜெர்மனியர்கள் அடுக்கடுக்காக வந்து நின்று அப்படியப்படியே விழுந்துவிட்டார்கள். ஜெர்மனியர்கள் தங்களுடைய ராக்ஷஸ பீரங்கிகளைக் கொண்டு வந்து டன்கர்க்கில் பலமான மேடுகளின் மீது ஏற்றிக்கொண்டு தங்களாலான மட்டும் பார்த்தார்கள். பிரிட்டிஷ் கடற்படையின் முற்றுகைப் பீரங்கிகளுக்கு முன் ஜெர்மனியர்களுடைய ராட்சஸ பீரங்கிகள் நிற்கமுடியவில்லை. இப்பொழுது ஜெர்மனியப்படைகள் மேற்கேகடற்பக்கத்திலிருந்து பிரிட்டிஷ் போர்க்கப்பல்களாலும் தெற்கே கரையில் நேசப்படைகளாலும் தாக்கப்பட்டு நிற்க முடியாமல் புறமுதுகிட்டோடினார்கள்.

ந்யூப்போர்ட் என்னும் நகரம் வரையில் பின் சென்று அங்கிருந்து டிக்ஸ்முட், எப்பர்ஸ் வரிசையாக நின்றுகொண்டு ஜெர்மனியப்படைகள் யுத்தம் செய்தன. அவ்விடத்தில் பெல்ஜியர்கள் ஈஸர் நதியின் அணைகளை உடைத்துவிட்டார்கள். உடனே எங்கும் வெள்ளம் பெருகிவிட்டது. ஜெர்மனியர்கள் இன்னும்பின் சென்றார்கள் ஜெர்மன் சக்கரவர்த்தி இன்னுமொருதரம் கலேய் நகரத்தைப் பிடிப்பதற்குப் பெருமுயற்சி செய்யும்படி தமது படைகளுக்கு உத்தரவு அனுப்பினார். 16, 17 வயதுப் பையன்களை இப்பொழுது புதிதாகவந்துகொண்டிருந்த ஜெர்மனியப் படையில் மிகுந்திரு

ந்தார்கள். இப்பையன்கள் மிகவும் தைர்யத்துடன் உயிரை லட்சியம் செய்யாமல் முன் சென்று நேசப் படைகளின் மேல்விழுந்து தாக்கினார்கள் ; ஆயிரக்கணக் கான ஜெர்மனிய வாலிபர்கள் கொல்லப்பட்டார்கள். மிக வும் கஷ்டப்பட்டு ஜெர்மனியர்கள் டிக்ஸ்முடைப்பிடித்துக் கொண்டார்கள். பின்னர் ஈப்பர்ஸைப் பிடிக்க வேண்டு மென்று ஜெர்மனியர்கள் தலை கீழாகப் பிரயத்தனம் செய் தார்கள். இத்தனை நாட்களாகச் செய்த யுத்தங்களில் ஈப் பர்ஸைச் சுற்றி நடக்கும் யுத்தத்தைப் போல அவ்வளவு பயங்கரமான யுத்தம் நடந்ததில்லை. ஆயினும் இன்னும் ஜெர்மனியர்கள் ஈப்பர்ஸைப் பிடிக்கவில்லை ; நவம்பர்ஸ்ரீ 24-ம் தேதி ஈப்பர்ஸ் பலமாகத் தாக்கப்பட்டுச் சிலகட்ட ங்கள் அழிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டது. நவம் பர்ஸ்ரீ 24-ம் தேதி ஜெர்மனியர்கள் கலேய் நகரத்தைப் பிடிக் கமுயற்சி செய்து 5 வாரங்களாகியும் இன்னும் முடியவில்லை.

ருஷியர்கள் கிழக்கு ப்ரஷ்ஷியாவிலிருந்து ருஷி யாவுக்குள் பின் செல்லும்படி நேர்ந்துவிட்ட தென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். ருஷியர்கள் கலீஷியா வையும் படையெடுத்து முன்சென்று கலீஷியாவின் பிரதான நகரமாகிய லெம்பர்க்சைப் பிடித்துக்கொண் டு அங்கிருந்து நேரே ப்ரெஸிம்ஸீல் கோட்டைக்குச் சென்று அதை முற்றுகை போட்டார்க ளென்றுசொல் லப்பட்டது ; ஆனால் அங்கிருந்தும் திடீரென்று பின்செல் லும்படி நேர்ந்து விட்டதென்று சொல்லப்பட்டது. பின் ஜெர்மனியர்கள் போலண்டுக்குள் ஆக்கிரமித்து வார்ஸா நகரை முற்றுகை யிட்டார்கள். ஆனால்நெடுநாட்களாக ஜெர்மனியர்களுக்கும் ருஷியர்களுக்குமாக சிறுயுத்தங் களும் பெருயுத்தங்களுமாகப் பலயுத்தங்கள் நடந்தபின் ஜெர்மனியர்கள் பின்சென்றார்கள் ; ஆஸ்டிரியர்களும் பின் சென்றார்கள். இப்பொழுது ருஷியர்கள் மறுபடியும் கிழக் குப் ப்ரஷ்ஷியாவுக்குள் நுழைந்து அநேகபட்டணங்களைப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள்; விஸ்சுலா நதிக்கும்வார்

ட்டாநதிக்கும் மத்தியில் ஜெர்மனியர்கள் லட்சக்கணக்காகத் திரண்டு ருஷியர்களுடன் பயங்கரமான யுத்தம்செய்து ருஷியர்களைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். ருஷியர்கள் மறுபடியும் கலீஷியாவுக்குள் பிரவேசித்து, க்ராக்கோ நகரைமுற்றுகை யிட்டிருக்கிறார்கள்.

ஸெர்வியர்களைப் பற்றி வெகுநாட்களாக நாம் கேள்விப்படாமலிருந்தோம். இப்பொழுது ஸெர்வியர்கள் ஆஸ்டிரியர்களால் தோற்கடிக்கப் படுகிறார்களென்றும் ஸெர்வியர்கள் தங்களுடைய பிரதான நகரத்தை நிஷ் என்ற இடத்திலிருந்து உஸ்கல் என்ற இடத்துக்கு மாற்றிக் கொண்டிருக்கிறார்க ளென்றும்தெரிய வருகிறது.

இந்தயுத்தமானது உலகத்தில் அரசர்களுக்குங் குடிகளுக்கும் அநேக துன்பங்களை யுண்டாக்கிவிட்டது. லட்சக்கணக்கான வீரர்கள்மடிந்து விட்டதினால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அழிந்து விட்டன. வியாபாரப்போக்குவரவுகள் முன்போல அவ்வளவு தாராளமாயும் சுலபமாயும் நடக்கவில்லை. ஏழை, எளியவர்களுக்குக் கஷ்டம் மிகுந்துவிட்டது. ஆனால் அகங்காரமும் பொறாமையும் உலகில் அரசுசெய்து கொண்டிருக்கும் வரையில் சமாதானமும் சாந்தமும் உலகத்தில் நிலைக்கவே நிலைக்காது. ஆதலால் அகங்காரமும் பொறாமையும் அழிக்கப்படத்தான் வேண்டும். கூடியசீக்கிரத்தில் அகங்காரமும் பொறாமையும் அடியோடு அழிக்கப்பட்டு, சமாதானம், சாந்தம், ஒற்றுமை, செல்வம் இவை உலகத்தில் பெருகுமாறுநாம் கடவுளைப்பிரார்த்தித்துக்கொண்டிருக்கின்றோம்.

நமது காருண்ணியம் மிகுந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்த யுத்தத்தில் ஜெயமடைந்துநீடூழிகாலம் பூவுலகு முழுதும் செங்கோலோச்சி ஏகச்சக்கராதிபத்தியம் வகித்து மானிடவர்க்கத்துக்கு மேன்மையையும் பெருமையையும் சமாதானத்தையும் நித்தியதிருப்தியையும் அளிக்குமாறு எல்லாம் வல்ல எம் ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

இனாம்! இனாம்!!

ஜெர்மனியுடன் யுத்தம்.

இஸ்லாமிய்யா "பிரசங்கநேசன்" என்னும் தினசரிப் பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர்ந்து ஒரு வருஷத்திய சந்தாவை முன்பணமாக அனுப்புவோருக்கு இப்பொழுது நடக்கும் மஹாபயங்கரமான யுத்தத்தை சரித்திர ரூபமாக எழுதப்பட்டுள்ள ஜர்மனியுடன் யுத்தம் என்னும் இப்புஸ்தகம் இனாமாகக் கொடுக்கப்படும். மேல்கண்ட பத்திரிகைக்குவருஷச் சந்தா ரூ. 9—0—0 தான்.

மிகவும் கொஞ்சப் பிரதிகளே அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகையால்,

முந்துங்கள்! இதுவே சமயம். முந்துங்கள்!

இஸ்லாமிய்யா பிரசங்கநேசன் தினசரிப்பத்திரிகை.

சென்ற சில தினங்களாக "இஸ்லாமிய்யா பிரசங்கநேசன்" என்ற பெயருடன் வெளியில் வந்துகொண்டிருக்கின்றோம். உலகில் அங்காங்கு நடக்கின்ற சமாச்சாரங்களை நாம அப்பொழுது அப்பொழுதே அறிவித்து வருகின்றோம். இங்கிலீஷ் பத்திரிகைகளுக்கு வரும் தந்திகள் அந்தப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் தினத்திலேயே நம்மாலும பிரசுரிக்கப்படுகின்றன. நாம் தினசரி தவறாது வெளியில் வந்து பலர்க்கும் பல சங்கதிகளை உரைத்தும், நாம் கேட்பதெல்லாம் ஒரு வருஷத்திற்கு ரூ. 9 தான். பாஷாபிமானம் மிகுந்த சகோதரர்களுக்கும், மதாபிமானமுள்ள முஹம்மதியர்கட்கும் உலகவியவகாரங்களை அறிய விரும்புகிற ஒவ்வொருவருக்கும் நமது பத்திரிகை பிரியமாயிருக்குமென்று நாமே சொல்லிக்கொள்வதிற் பயனில்லை. சில பத்திரிகைகளை வாங்கிப் படித்து அவர்களே நமது பத்திரிகையின் அருமையை அறிந்துகொள்ள வேண்டியது. நம் தமிழ்நாட்டுச் சகோதரர்கள், தமிழ்ப் பேசுகின்ற ஹிந்

துக்கள், மஹம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் எல்லாரும் நம்மை ஆதரித்துச் சந்தாதார்களாகச் சேர்ந்து நமக்கு வேண்டிய உதவிபுரியுமாறு அவர்களைப் பன்முறையும் பணிந்து கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:

எஸ். எம். முஸ்தபா லெப்பை

"இஸ்லாமிய்யாபிரசங்கநேசன்" ஆபீஸ்.

நெ. 16. சூரப்பமுதலி தெருவு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

புதிதாக வெளிவரும்

புத்தக விளம்பரம்.

அபூநவாஸ்

அல்லது

விகடக்களஞ்சியம்.

இது ஒரு சாமர்த்திய, விகட நாவல். அகில சக்ரவர்த்தியாகிய, "சுல்தான் ஹாரூன் றஷீது" அவர்களின் தர்பாரென்னும் சன்னிதானப் பண்டிதர் மதுரவாக்கிய "அபூநவாஸ்" அவர்களின் சாமர்த்திய விகடக்களஞ்சியம். இதை அச்சிடும்படி அறபிபாஷையறியாத தமிழ்வாசிக்கும் அனேகர் நம்மை பன்முறையும் கேட்டுக் கொண்டபடி

யால் நாம்இதில் பிரவேசித்து தக்க ஓர் பண்டிதரைச் கொண்டு ஷெ அறபிபாஷையிலிருந்து தமிழில், மொழிபெயர்த்து. மிக்க எளியநடையில் எழுதி கிளேஸ் காகிதத்தில், சுத்தமாயச்சிடப் பட்டிருக்கிறது.

யாரேனும் இப்புஸ்தகத்தை, கையிலெடுத்து வாசிக்கத் துடங்கினால், முழுதும் வாசித்தேயொழிய புஸ்தகத்தை கீழே வைக்கமாட்டார்கள்.

இதன் கிரயம் ரூ. 0—12—0
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

		ரூ.	அ.	ப.
ஜெர்மனியுடன் யுத்தம்	...	0	12	0
துருக்கியும் பல்கேரிய யுத்தச்சரித்திரம்	...	0	12	0
துருக்கியும் இட்டாலி தருபல்ஸ்யுத்தசரித்திரம்		0	12	0
அபூநவாஸ், அல்லது விகடக்களஞ்சியம்	...	0	12	0
இஸ்லாமிய்ய மார்க்கச்சட்டம் ஷாபிஈ	...	0	6	0
ஷெ ஹனபீ	...	0	6	0

இப்படிக்கு,

☞ எஸ். எம். முஸ்தபா லெப்பை,
மானேஜர், இஸ்லாமிய்யா
"பிரசங்கநேசன்" ஆபீஸ்
நெ. 16, சூரப்ப முதலி தெருவு,
திருவல்லிக்கேணி,
மதராஸ.